Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 15/00

දිනමුරසු වාරමලර්

பெப். 22-28 , 2004

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 551

"நீதிமன்றத் தடை" கூட்டணிக்குள் பகை

"தமிழ்க் கூட்டு" உடைந்த குழுக்களுக்குள் வலுவடையும் பூசல்!

'மெல்லிசைப் புயல்' கரிலேஷ்வருடன் சில நிமிடங்கள்!

ஜெயில் புதிய தொடர்

ஆசியப் பெண்களிடையே அதிகரித்து வரும் 'சைபர்' மோகம்.....

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

திருமுறைகள்

"திருமுறை" என்பதற்கு தெய்வீக நூல் என்றும் "சிவநூல்" என்றும் பொருள் கூறுகின்றனர். திருமுறைகளின் ஆசிரியர்கள் புராண நிகழ்ச்சிகளைத் துணையாகக் கொண்டு சிவபெருமானது புகழைப் பாடினர். சிவபரத்துவத்தை வற்புறுத்தினர்.

சிவனையே முழுமுதற் பொருளாய்க் கொண்டு பாடப்பட்டாலும், முருகனையும் விநாயகப் பெருமானையும் தேவியையும் புகழ்ந்து பாடும் பாடல்களும் திருமுறைகளில் உள்ளன.

அடியவர்களைப் பற்றிய வரலாறுகளைத் தரும் பாடல்களும் உள்ளன. "திருமுகப் பாசுரம்" சிவபிரானால் அருளப் பெற்றது. மற்ற அனைத்தும் சிவனடியார்களால் அருளப் பெற்றவையாகும்.

திருமுறைகளைப் பன்னிரெண்டாக வகுத்துள்ளனர். இவற்றைப் படித்து எமது வாழ்வில் தெய்வீக ஞானத்தைப் பெற்றுக்கொள்வோம்.

சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர்

ஆன்மீகம்

இயேசுவின் ஆசி என்றுமே குறையாது

இயேசு எரிகோவுக்குச் சென்று நகர் வழியே போய்க்கொண்டிருந்தார். சக்கேயு என்னும் வரி சேகரிப்போரின் தலைவர் இயேசுவைப் பார்க்க விரும்பினார். அவர் குட்டையாய் இருந்தபடியால் ஒரு முசுக்கொட்டை மரத்தில் ஏறிக்கொண்டார். இயேசு அவ்விடத்திற்கு வந்தவுடன் அண்ணாந்து பார்த்து "சக்கேயு! இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என்றார். சக்கேயு மகிழ்ச்சியோடு விரைவாய் இறங்கி வந்து இயேசுவை வரவேற்றார். இதைக் கண்ட யாவரும் "பாவியின் வீட்டில் தங்கப் போகிறாரே" என முணுமுணுத்தனர்.

சக்கேயு எழுந்து நின்று "ஆண்டவரே! என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன். எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி ஏதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காகக் கொடுத்துவிடுகிறேன்" என்றார். இயேசு அவரை நோக்கி "இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்றார்.

(லூக்கா 19.:1 – 9)

பார்த்தீர்களா! தன்னால் படைக்கப்பட்ட எந்தவொரு மனிதனாவது பாவ வாழ்க்கை வாழ்ந்து தன் ஆத்துமம் நரக பாதாளத்தில் தள்ளப்படுவதை இயேசு விரும்பவே மாட்டார். அதனால்தான் பாவியாகவிருந்த சக்கேயுவின் வீட்டில் தங்கினார். சக்கேயு மனம் மாறினான். அதனால்தான் இயேசு "இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்று கூறினார். நம் ஒவ்வொருவரிடமும் பல தரப்பட்ட தவறுகள், குற்றங்கள் நிறையவே உள்ளன. நாமும் சக்கேயுவைப்போன்று மனம் திருந்தி நம் குற்றங்கள், தவறுகளை விட்டுவிடும்போது "நம் வீட்டிற்கும் மீட்பு உண்டாகும்" இறைமகன் இயேசுவின் அன்பும் ஆசியும் என்றுமே குறையாது. எம் உள்ளமும் மகிழ்ச்சியில் திகழும்.

ஜோசப் அருள்சாமி, இராஜவெல்ல.

வட்டியை வெறுத்த வள்ளல் நபி

இன்றைய செல்வந்தர்களில் சிலர் ஏழைகளுக்குக் கடன் கொடுத்து உதவுகிறோம் என்ற போர்வையில் பத்தாயிரம் ரூபாவை பத்து நாட்களுக்குக் கொடுத்து பதினோராவது நாளில் பதினோராயிரம் ரூபாவை அவர்களிடம் இருந்து பெறுகின்றனர்.

இதுதான் ஏழைகளுக்குக் கொடுத்துதவும் கடன் உதவியா? இப்படித்தான் இஸ்லாம் மதம் கூறுகின்றதா? தனவந்தர்களே! சிந்தியுங்கள்.

வட்டி கொடுக்கும் மிகக் கொடிய பாவத்தைப் பற்றி வள்ளல் நபி அவர்கள் கூறுவது

"வட்டிக்குக் கொடுப்பவர்கள் எத்தகைய இபாதத்தில் ஈடுபட்டாலும் அந்தப் பாவத்திலிருந்து அவர்கள் அல்லாஹ்விடம் தப்ப முடியாது. ஹறாமான இச் செயலில் ஈடுபடுகின்றவர்கள் நாளை மறுமையில் சுவனத்தின் வாசனையைக் கூட நுகர முடியாது" என்று.

அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வெறுத்த வட்டியை செல்வச் சீமான்கள் செய்வதேன்? பணத்தைப் பெருக்கி பாரில் டாடோப வாழ்க்கை வாழ்வதற்கா?

அல்குர்ஆனின் அழகிய போதனையைப் பாருங்கள் இங்கே.

கஷ்டத்திலிருப்போருக்காக அழகான முறையில் அல்லாஹ்வுக்கு கடன் கொடுப்போர் யார்? அதை அப்படிக் கொடுப்பவருக்கு பன்மடங்கு பெருகும்படியாக அவன் செய்வான்.

அல்குர்ஆன் 2 : 45

எம்.சி. கலீல், கல்முனை – 05.

கவிதைப் போட்டி இல: 552

பரிசுக்குரிய கவிதை

இங்கு சேவை செய்!

இலங்கையில் படித்து
பட்டம் பெற்று
வேற்று நாட்டில்
பணம் சம்பாதிக்க
போகின்றாயா? – உன்னை
வளர்த்துவிட்ட தாய் நாட்டில்
சேவை செய்யும் வரை
இந்த நாற்காலியில்
சங்கிலியால் கட்டித்தான்
வைப்போம் நீ திரும்பும்
வரை.

ரி.ரமேஷ்கண்ணா,
சங்கமன் கிராமம்.

வெற்றிக்கு வழி

வெளிப்படுகட்டு வேஷம் காட்டும்
விவேகமற்ற மனிதா!
சூழ்ந்து நிற்கும் சவால்களை
விழுந்திருந்து எதிர்கொள்
தோல்வியும் துணிவும்
இருக்குமென்றால்
வெற்றி உனக்கு நிச்சயம்.

விக்னா பாலமனோகரன், நுணாவில்.

முயற்சிகள் தொடரட்டும்....

எங்கள் சமாதானத்திற்காக மத்தியஸ்தம்
வகிக்க வந்தவரோ நீவிர்?
எம்வரை நம்பினால் மண்குதிரையை நம்பி
ஆற்றில் இறங்கிய கதைதான் இருந்தாலும்
உம் முயற்சியை விட்டுவிடாதீர் அது ஒன்றுதான்
இப்போது எங்களுக்கு நம்பிக்கை.

வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

அன்புப் பெட்டி எங்கே?

பொல்லாங்கு
இல்லாத
இடம்
பொல்லாத மனிதர்கள்
இல்லாத இடம் தேடி
செல்வாய் மண்டலம்
செல்வதற்காகவா
இத்தனை ஆயத்தங்கள்?.

ரீ.ஆரிப்.சராவுடீன்,
கோட்டைமுனை.

ஆடும் வரை ஆடி விட்டேன்
ஆனால் இப்போது
அடங்கி விட்டேன்
ஆதலால்தான்
அடிமைச் சங்கிலியால்
கட்டப்பட்டு ஆசனத்தில்
அமர்ந்திருக்கிறேன்.
அருகே பணப் பெட்டி இருக்கிறது.
அன்புப் பெட்டி எங்கே இருக்கிறது
என்பதுதான் எனது கவலை.

எஸ்.சூபன், மன்னார்.

எ ன் ன கு ழ ப் ப ம்?

பொய்யைப் புழுகைச்
சொல்லி
காலைக் கையைப்
பிடித்து
எம்பியான – ஜயாமாரே
ஐந்து வருடம்
எம்மை அசைக்க
முடியாது என்றிருந்த
உங்களுக்கு
விரைவில் தேர்தல்
என்ற செய்தி
வயிற்றைக் கலக்குதா?

சி.நாகேந்திரன்,
ஆரையம்பதி – 03.

துணிந்து செல்

ஏன் இந்தத்
தலை குனிவு?
வெற்றியும் தோல்வியும்
வீரனுக்கு அழகு
துணிந்து செல்
தோல்வி கிடையாது.

எம்.சி.கலீல்,
கல்முனை – 05.

மௌன விரதம்

சுதந்திரம் பறிபோக
சூழ்நிலைகளின் கைதியாய்
சட்டம் சாகடிப்பது கண்டு
மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்
ஏக்கப் பெருமூச்சை
இதயத்திலே தேக்கி
எடுத்துரைக்க முடியா
இக்கட்டு நிலையில்
சட்டத்தரணி ஒருவரின்
மௌன விரதம்.

க.கமால்தீன்,
ஏறாவூர் – 03.

காலம் சொன்னது

உலக வங்கி
உதவ வந்தாலும்
அரசியல் கெடுபிடியால்
அதன்
கால்களும்
கட்டப்பட்டுவிட்டன.

எஸ்.பி.பாலமுருகன்,
பதுளை.

க

மக்களுக்கு
பொய் வாக்குறுதிகள்
வழங்கி
தேர்தலிலென்று
எம்பியானேன்!
மீண்டும்
தேர்தல் வந்தால்
யார் நமக்கு
வோட்டுப் போடுவார்கள்?
இந்தக் கோட்டும்
சூட்டும் போய்
பழையபடி
வேட்டியுடன்
வீதியில்
திரிய வேண்டுமே!
என்ன செய்வது?

கா.ரமேஸ்குமார்,
ஆரையம்பதி – 02.

வ லை!

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
கண்காணிக்க வந்தவருக்கு
சரிந்து செல்லும்
சமாதானச் சூழலை
பரிந்துரைக்க முடியாத
பலப் பரீட்சை
அதிகார பலப் போட்டியில்
அமுங்கிவிடுமோ புரிந்துணர்வு?
என்று மூளையைக் குழப்பும்
முகவருக்கு

மூட், குழம்பிவிட்டதோ?

கவிக்குயிலன், மூதூர்.

கவிதைப் போட்டி இல: 551

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 28.02.2004

கவிதைப் போட்டி இல. 551
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

'மூட்' குழம்பிவிட்டதோ?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
கண்காணிக்க வந்தவருக்கு
சரிந்து செல்லும்
சமாதானச் சூழலை
பரிந்துரைக்க முடியாத
பலப் பரீட்சை
அதிகார பலப் போட்டியில்
அமுங்கிவிடுமோ புரிந்துணர்வு?
என்று மூளையைக் குழப்பும்
முகவருக்கு

மூட், குழம்பிவிட்டதோ?

கவிக்குயிலன், மூதூர்.

உங்கள் பக்கம்

கூனிக் குறுகலும் குடியேற்றமும் இப்படி ஒரு அவலமா?

திருகோணமலை அன்புவழிபுரம், மயான வீதியில் அமைந்துள்ள பொது மயானத்துக்கென சுமார் 47 வருடங்களுக்கு முன்னதாக அன்புவழிபுரம் வாழ் மக்களின் இறுதிக்கால புண்ணிய பூமியாக ஆறு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. எரித்தும், புதைத்தும் வந்தனையோ சடலங்கள் அப் பூமியில் சங்கமம் ஆகியுள்ளன. அதே புண்ணிய பூமி இன்று கூனிக் குறுகி சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பாகிவிட்டது. அந்த நிலப்பரப்பிலும் காடும் பற்றையும் வளர்ந்து அதனுள் சட்டவிரோத வடிசாராயம் காய்ச்சியும் விற்பனை செய்தும் விபசார விடுதியுமாக மாறியதுமல்லாது அதனுள் அமைந்துள்ள மயானக் கிணற்றையும் மூடி புண்ணிய பூமியை ஆக்கிரமித்து வீடுகள் கட்டி வைத்துள்ளார்கள். இதனை அன்புவழிபுரம் வாழ் பொதுமக்கள் அனைவரும் கண்டும் காணாதது போல் இருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்த எந்தவொரு பிரதேசச் செயலாளரோ, கிராம அதிகாரியோ முயலவில்லை. ஏன்? எதற்கு? என்பது எமக்குப் புரியாத வினாவாகத் தெரிகிறது. இனிமேலும் மயான விடயத்தில் அதிகாரிகள் கண்மூடித்தனமாக இருந்தார்களானால் எதிர்காலத்தில் பிரதேசச் செயலகம் பொது மயானமாக மாறும். நாம் எத்தனையோ புகாரடங்கிய பத்திரங்களை அனுப்பியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப் படாதது எமக்குப் பெரிதும் வேதனையாக உள்ளது. எனவே, எமது வார மலராகிய தினமுரசு ஊடாக எமது கோரிக்கையை முன்வைக்கின்றோம். பொது உடைமையான இந்த மயானத்தின் காணியை அடாத்தாக ஆக்கிரமித்துள்ளது தொடர்பாக, இதனோடு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இந்தப் பிரதேசத்திலுள்ள நலன்புரி ஸ்தாபனங்கள் அக்கறை கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். எமது குறையை நிவர்த்தி செய்து நலம் பெற ஆவனசெய்ய வேண்டுமென எதிர்பார்க்கும் அன்புவழிபுரம் வாழ் பொதுமக்கள் அனைவருக்குமாக.

நன்றி இவ்வண்ணம்
நலன் விரும்பும்
C.N.Y, திருகோணமலை

இனிய முரசுக்கு!

உனது அனைத்து அம்சங்களினதும் நெடுநாள் வாசகன் நான். நீ ஒவ்வொரு வாரமும் சுமந்து வரும் விடயங்களில் மூழ்கிப் போகிறேன். முரசே! என்றும் நீ சிறப்பான அம்சங்களுடன் என் கைகளில் தவழ்ந்து வர என் இனிய வாழ்த்துக்கள்.

– அஸீஸ்,
செம்மண்ணோடை.

என் மதிப்பிற்குரிய தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு,

என் நன்றி கலந்த வணக்கம்!

2004 – ஜனவரி 18–25 தினமுரசு இதழில் என் 'கண்ணனின் காதலி' சிறுகதை வெளியானதையிட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். என் கன்னி எழுத்துக்கள் தினமுரசில் பதிந்ததையிட்டு தங்களுக்கு என் இதயம் நிறைந்த கோடி நன்றிகள்!

என் சிறுகதை தினமுரசில் வெளியான நிலி என் மகிழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்து அறிமுகப்படுத்தும் தினமுரசுக்கு என் நன்றிகள்! ஆக்கங்களை தங்களுக்கு அனுப்ப ஆவலாயிருக்கிறேன், என் இதய பூர்வமான நன்றிகளுடன்

– எஸ். உதயசெல்வன்,
நீர்கொழும்பு.

வாசக[ர்] சாலை

அபூர்வமானவை! ஆச்சரியமானவை!!

வாரம் தோறும் பிரமிக்க வைக்கும் செய்திகளை வாசகர்களுக்கு வழங்கி வரும் தினமுரசு அதன் 547 ஆவது இதழில் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரையான புகைப்படங்களுடன் கூடிய வரலாறு! என்ற தலைப்பில் நிழற்படம் மூலம் தந்த தகவல்கள் அபூர்வமானவை! ஆச்சரியமானவை!!

– எம்.சி. கலீல்
கல்முனை – 05.

அன்புள்ளம் கொண்ட முரசே!

வளர்க உன் நல்லடக்கம்
சிறுவர் முதல் பெரியோர்
வரை உன் முரசை
படிக்க தூண்டும் உன்
இதழை வேறு எந்த
பதிதிரிகையும் தராத உன்
பணி உலகெங்கும்
பரவரட்டும்

எம். பாரூக்
100/2 கீழ்ப்பிரிவு,
ராகலை.

என் பிரியமான முரசே!

எம் இளைய நெஞ்சில்
அலை போல்
பாய்கின்றாய்!
நாமறியா இன்
சுவைகளை
நீ எமக்கு
அளிக்கின்றாய்!
உன் பக்கம்
ஒவ்வொன்றும்
படிப்பதற்கு
இளமையான
கம்பனால்
படைக்கப்பட்ட
பொன்வரி!
உன்னில் வரும்
கதைகள் எல்லாம்
எம்மை கண்ணீரில்
மூழ்க வைக்கின்றதே
அப்படிக் கொத்த
உன்னை
என்னால் எப்படிப்
பிரிய முடியும்?
நீ என்றும் எப்போதும்
ஊரெங்கும்
உலா வர
வாழ்த்துகின்றேன் –
நித்தமும்.

– எஸ். வினோ,
பாடசாலை வீதி,
மகிழூர் –
களுவாஞ்சிக்குடி.

மனமார்ந்த

தி ன மு ர சு க் கு

பா ரா ட் டு க் க ள்

சென்ற 544ஆவது தினமுரசில் வெளியான எனது கி.அ. சங்கம் சம்பந்தமான கடிதத்திற்கு உடனடித் தீர்வாக தடைப்பட்டிருந்த சங்கப் பணம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது பாராட்டுக்குரியதே. இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்த இச் சங்கத்தின் பணமோசடி சம்பந்தமான விபரத்தையும் மக்கள் அறிந்துகொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரி ஆவன செய்ய வேண்டும். மறைக்கப்பட்டு மங்கிப்போகும் பல விடயங்களை வெளியிட்டு சகலரையும் வியக்கவைக்கும் முரசே! உனக்கு எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

– ஆ. கெங்காசலம்,
மகிழூர்முனை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் – உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல: – 1772, கொழும்பு.
தொலைபேசி: 4514282
தொலை நகல் (Fax): 4513266
ஈ – மெயில்: (E-mail):
murasu@sltnet.lk

பரந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி தோல்வி

ரி.என்.ஏ.வேட்பாளர்கள் திரிசங்கு நிலையில்

இலங்கையிலுள்ள பெரும்பாலான தமிழ்க் கட்சிகளை ஒரே அமைப்பாகத் தேர்தலில் போட்டியிட வைப்பதற்குப் புலி இயக்கம் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டதென தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளை வடக்கு, கிழக்கிலுள்ள தமக்குச் சார்பான கட்சிகளோடு இணைத்து ஒரே குடையின் கீழ் போட்டியிட வைப்பதற்குப் புலிகள் முயற்சி எடுத்தனர். புலிகளுக்கான பிரசாரங்களில் மும்முரமாக இறங்கியிருந்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கூட தனது முயற்சியைக் கைவிட்டுள்ளார். மேலும் சந்திரசேகரன் தனது தெரிவை உறுதிப்படுத்திக்கொள்ள ஐ.தே.க. வுடன் கூட்டுச் சேர விழைந்துள்ளார். இதேவேளை புலிகள் பெரும்பான்மை கட்சிகள் வடக்குக் கிழக்கில் போட்டியிடுவதையே எதிர்க்கிறார்கள். மேல் மாகாண மக்கள் முன்னணியின் மனோ கணேசனும் தனது மனதை மாற்றிக்கொண்டு ஐ.தே.க.வோடு இணைந்து போட்டியிட முனைகிறார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இ.தொ.கா.வை இணைப்பதற்கு புலிகளின் யோசனையின் பேரில் சந்திரசேகரன் எடுத்த முயற்சி தோல்வியடைந்ததையடுத்து புலிகளின் பரந்த தமிழ் கூட்டு முயற்சி முடிவுக்கு வந்துவிட்டது. இதேவேளை சித்தார்த்தனின் புளொட் இயக்கத்தையும் இணைத்துப் போட்டியிட வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததையும் இந்த அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. மேலும் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனைத் தேர்தலில் போட்டியிட வேண்டாமென்று புலிகள் எச்சரித்துள்ளனர். இதனால் மகேஸ்வரன் அரசியலிலிருந்து ஒதுங்க முடிவெடுத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிட மகேஸ்வரன் விருப்பம் தெரிவித்தபோதிலும் அவரது தில்லுமுல்லுகள் காரணமாக அவருக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள போட்டா போட்டிகளும் உள் முரண்பாடுகளும் அதனை மேலும் பலவீனமடையச் செய்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் அல்லது சுயேச்சையாக ஆனந்தசங்கரி போட்டியிடலாமென்பதால் கடந்த தடவையைப் போல் கூட்டமைப்புக்கு அதிக ஆசனங்கள் கிடைக்காதெனவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. திருமலையில் போட்டியிடுவதற்கு ரெலோ சிறிகாந்தா எடுக்கும் முயற்சிகளைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இரா. சம்பந்தன் இறங்கியுள்ளாரென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யார் யாரை வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்பதையும் புலிகளே தீர்மானிப்பார்கள். அத்துடன் பாராளுமன்றத்துக்குத் தெரிவான பின்னர் தாம் விரும்பியவாறு பா.உ.க்களை மாற்றுவதற்கு வசதியாக, வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும்போதே கூட்டமைப்பில் போட்டியிடுபவர்களிடமிருந்து இராஜினாமாக் கடிதங்களைப் பெறுவதற்குப் புலிகளின் அரசியல் தலைமை தீர்மானித்துள்ளது. புலிகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அதிருப்தியுற்றிருக்கும் மக்கள் ஈ.பி.டி.பி.க்கு வாக்களிப்பார்களெனப் பரவலாகப் பேசப்படுகிறது. இந்த நிலையில் கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விடக் குறைந்த ஆசனங்களையே இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெறுமென்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பேரினவாதக் கட்சிகள் வடக்கு - கிழக்கில் போட்டியிட அனுமதிக்க மாட்டோமென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழச்செல்வன் கூறியுள்ள போதிலும் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடத் தயாராகி வருகிறது. இதேவேளை தமிழ்க் காங்கிரஸ் குமரகுருபரன் கொழும்பில் ஐ.தே.க.வின் பட்டியலில் மனோ கணேசனின் கட்சியோடு இணைந்து போட்டியிடவுள்ளார். அதேபோல் மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரனும் ஐ.தே.க.வோடு இணைந்து போட்டியிடுவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளார். புலிகளின் அறிவுறுத்தலுக்குப் புறம்பாக பெரும்பான்மைக் கட்சியோடு இணைந்து போட்டியிட்ட தமிழர்கள் குறித்து புலிகள் என்ன முடிவு எடுக்கவுள்ளனரெனத் தெரியவில்லை.

புலிகள் பகுதியில் பொலிஸார்?

செய்வாய்க்கிழமை தமிழ்க் கூட்டமைப்பினருடன் புலிகள் நிகழ்த்திய சந்திப்பையடுத்து, பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்த தமிழ்ச்செல்வன், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்குச் சாவடிகளுக்கு பொலிஸார் பாதுகாப்பளிக்க அனுமதிக்கப்படுவார்களா என்பது குறித்து தலைமையுடன் பேசி முடிவுசெய்வதாகத் தெரிவித்தார். இதேவேளை அப்பகுதியில் கட்சிகள் பிரசாரம் செய்ய அனுமதிக்கப்படுவது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

புலிகளுக்கு நிதி வழங்க உலக அமைப்புகள் மறுப்பு

இலங்கையில் அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளதால் வடக்கு - கிழக்கு மாகாண புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிதியுதவியைத் தங்களது இயக்கத்துக்கு வழங்குமாறு புலிகள் விடுத்த கோரிக்கையை ஐரோப்பிய பாராளுமன்றப் பிரதிநிதிகள் நிராகரித்துள்ளனர். வடக்கு - கிழக்குக்கான நிதியுதவியை நேரடியாக வழங்க முடியாதென்றும் சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட ஆட்சியாளர்களிடம் மட்டுமே வழங்கப்படுமென்றும் உலக வங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹெரால்ட் தெரிவித்துள்ளார்.

புலிகள் சிறுவர்களைப் படையணிக்குச் சேர்ப்பதை முற்றாக நிறுத்த வேண்டுமென்றும் சர்வதேச அமைப்புகள் வழங்கும் நிதி இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படமாட்டாதென்று புலிகள் உறுதியளிக்க வேண்டுமென்றும் ஐரோப்பிய பாராளுமன்றப் பிரதிநிதியான கோன் ருச்கைன் தெரிவித்துள்ளார்.

உதவிகள் கிட்டும்

இலங்கைக்கு உதவி வழங்கும் நான்கு நாடுகளின் தலைமையில் கடந்த 17ஆம் திகதி வாஷிங்டனில் அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சமாதான நிலை, அரசியல் நெருக்கடி, உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி ஆகியன சம்பந்தமாக ஆராயப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் பங்குபற்றினர். பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளபோதிலும் ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்ல உறுதியளித்துள்ளதால், ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு இணங்க உதவிகள் வழங்கப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மொறகொடவினால் பிரதமருக்குச் சிக்கல்

கொள்கை அபிவிருத்தி, திட்ட அமுலாக்கல் பிரதி அமைச்சர் பதவியிலிருந்து மிலிந்த மொறகொடவை ஜனாதிபதி பதவி நீக்கியதையடுத்து, அவர் வகித்து வந்த பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சுப் பதவிகளிலிருந்தும் இராஜினாமாச் செய்துள்ளார். அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து இராஜினாமாச் செய்யும் முடிவுக்குப் பிரதமர் அங்கீகாரம் வழங்கியமை ஐக்கிய தேசிய முன்னணியின் பல சிரேஷ்ட அமைச்சர்களை முகம் சுளிக்க வைத்துள்ளது. ஏற்கெனவே ஜனாதிபதி பாதுகாப்பு, உள்துறை, வெகுஜனத் தொடர்பு அமைச்சுக்களைக் கையேற்றபோது அவர்கள் இராஜினாமாச் செய்யவில்லை. மிலிந்த மொறகொட மட்டும் இராஜினாமாச் செய்ததற்குப் பிரதமர் அனுமதி வழங்கியதேன் என்று சிரேஷ்ட அமைச்சர் கே.என். சொக்ஸி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி அமைச்சரவை அந்தஸ்து அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்ததோடு, அமைச்சுப் பொறுப்புக்களையும் கையேற்றிருக்கிறார். இத்தகைய நிலையில் அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்போடு செயற்பட வேண்டும். மொறகொட மட்டும் தன்னிச்சையாக இராஜினாமாச் செய்ய அனுமதிக்கக் கூடாதென்று அமைச்சர் கரு ஜெயசூரியா பிரதமரிடம் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றுக்குச் செவிமடுத்த பிரதமர், மிலிந்த மொறகொடவோடு தொடர்புகொண்டபோது தனது மனச்சாட்சிப்படி இராஜினாமாச் செய்துவிட்டதாகவும் தனது முடிவை மாற்ற முடியாதென்றும் தெரிவித்தாராம்.

மீள்குடியேற்றத்தைத் தடுக்க ரவிராஜ் முயற்சி

ஈ.பி.டி.பி.யின் செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியோடு தொடர்புகொண்டு கேட்டதையடுத்தே அச்சுவேலி, வளலாய்ப் பகுதியிலுள்ள இராணுவ முன்னரங்கப் பகுதி பின்தள்ளப்பட்டு அங்கு மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீண்டும் இந்த உயர் பாதுகாப்பு வலயப் பகுதியை பழைய இடத்துக்கே கொண்டு வருவதற்கு கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. ரவிராஜ் பல இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு முயற்சித்து வருவதாகவும் தெரிய வருகிறது. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் வளலாயில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டதால் ரவிராஜின் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இதேவேளை தமிழர் ஆசிரியர் சங்கக் காரியதரிசி தமிழ்க் கூட்டமைப்பில் போட்டியிட முயற்சிகள் எடுத்தபோதிலும் புலிகளின் தலைமை அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மீளக்குடியேற அனுமதி கோரி உண்ணாவிரதம் இருந்தவர்கள் மத்தியில் ரவிராஜ் பேசி உண்ணாவிரதத்தை மூன்றாவது நாள் முடித்துவைத்தார். ஆனால் ரவிராஜ் உறுதியளித்தபடி மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை. இதனால் ஈ.பி.டி.பி. எடுத்த நடவடிக்கையால் வளாவாய் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டால் மக்கள் ஈ.பி.டி.பி.யோடு தொடர்புகொள்ள முயற்சிப்பது ரவிராஜ்க்கு ஒரு புதிய தலையிடியைக் கொடுத்துள்ளது.

ஐ.நா.சபையின் தேர்தல் கண்காணிப்புக் குழு வராது

ஐக்கிய நாடுகள் சபையின் தேர்தல் உதவிப் பிரிவு ஏப்ரல் மாதம் நடைபெறும் இலங்கைத் தேர்தல்களைக் கண்காணிக்கக் குழுவொன்றினை அனுப்பப்போவதில்லையென்று அறிவித்துள்ளது. தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்புவதானால் இது தொடர்பான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது ஒரு விதி. இலங்கைத் தேர்தல் ஆணையாளர் குறுகிய கால அறிவித்தலில் ஐ.நா. தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்குமாறு கோரியிருப்பதால் பந்தோபஸ்து சபையில் தீர்மானம் நிறைவேற்றக் கால அவகாசம் போதாதென ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. கண்காணிப்புக் குழுக்களை அனுப்பி வைக்குமாறு மூன்று சர்வதேச அமைப்புகளுக்கும் நான்கு நாடுகளுக்கும் தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார். ஐரோப்பிய யூனியன், பொதுநலவாய செயலகம், ஆசியான் அமைப்பின் தேர்தல் அதிகாரிகளுக்கும் பங்களாதேஷ், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனம் வருந்துகிறார் மகேஸ்வரன்

சிங்களக் கட்சிகள் வடக்கில் போட்டியிடக் கூடாதென்று புலிகள் இயக்கம் எச்சரித்துள்ளதால் ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை வடக்கில் போட்டியிடாதென்று நம்பகமாகத் தெரிய வருகிறது. அத்துடன் ஐ.தே.க. பிரமுகர்கள் சிலருக்குத் தொலைபேசி மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனை ஐ.தே.க. சார்பில் தேர்தலில் போட்டியிட வேண்டாமென்று அவருக்கு நேரடியாகவே புலிகள் தெரிவித்துள்ளனரெனக் கூறப்படுகிறது. இதனையடுத்து ஐ.தே.க. உறுப்பினர்களைச் சுயேச்சைக் குழுவாகக் களமிறக்கும் முயற்சியில் மகேஸ்வரன் இறங்கியபோது அதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், அரசியலிலிருந்து ஒதுங்கப் போவதாக மனம் குமுறுகிறார் மகேஸ்வரன். இருந்தாலும் உயர்மட்டப் புலிகளுடன் பேசுவதற்கு மகேஸ்வரன் இப்போதும் தூது அனுப்பி வருகிறாரென்றும் தாராளமாகப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கத் தயாராக இருக்கிறாரென்றும் ஐ.தே.க. பிரமுகர் ஒருவர் கூறினார். இதற்காக மகேஸ்வரன் இருவரை வன்னிக்கு அனுப்பி வைத்துள்ளார். இம்முறை வடக்கில் போட்டியிடுவதில்லையென முடிவெடுத்திருப்பதாக ஐ.தே.க. பிரமுகர்கள் மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் மீண்டும் தமக்கு அமைச்சுப் பதவி கிடைக்குமென்று நம்பும் மகேஸ்வரன், ஈ.பி.டி.பி. கட்டாயம் போட்டியிடுமென்றும் அது ஆசனங்கள் பெறுவதைத் தவிர்க்க வேண்டுமானால் ஐ.தே.க. போட்டியிட வேண்டுமென்றும் காரணம் கூறியபோதும் புலிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. கோடிக் கணக்கில் பணம் கொடுக்க மகேஸ்வரன் முன்வந்தபோதும் தமது நிலைப்பாட்டில் உறுதியாயுள்ள புலிகள், பணத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளில் இறங்கியதால் மகேஸ்வரன் மனம் நொந்து போயுள்ளார். போட்டியிடவும் முடியவில்லை, பணத்தை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதேயென்று மகேஸ்வரன் அங்கலாய்க்கிறார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகரும் வட்டுக்கோட்டை உதவி அமைப்பாளருமான ஸ்ரீராஜ் என்பவர் சுயேச்சைக் குழுவொன்றைக் களத்தில் இறக்கும் முயற்சியில் ஈடுபட்டதால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார். (யாழ் நிருபர்)

சம்பந்தனுக்கு சங்கரி எச்சரிக்கை

தனது அனுமதியின்றி எந்தக் கட்சியுடனும் அரசியல் கூட்டமைப்பு அமைப்பது குறித்துப் பேசக் கூடாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தனுக்கு காரசாரமான கடிதமொன்றினை எழுதியுள்ளார் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி. கட்சி தொடர்பான சகல விடயங்களிலும் செயலாளர் நாயகமென்ற முறையில் எனது அனுமதியின்றி எந்தத் தீர்மானத்தையும் நீங்கள் எடுக்கக் கூடாதென்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதையும் ஆனந்தசங்கரி தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். ஏனைய கட்சிகளுடன் கூட்டமைப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானமெதுவும் எடுக்கவில்லை. அப்படிக் கூட்டமைப்பது குறித்துப் பேசுவதென்றால் எழுத்து மூலம் எனது முன் அனுமதியைப் பெற வேண்டும் என்றும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். தமிழர் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து எமது கட்சியைச் சேராதவர்களுடன் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்துவதாகப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். உங்களுக்கு இதற்கு அனுமதியளித்தது யார்? தயவுசெய்து கட்சியின் செயலாளர் நாயகம் என்ற மட்டத்துக்கு அப்பால் செயற்பட வேண்டாமென்றும் சம்பந்தனுக்குச் சுட்டிக் காட்டியுள்ளார் ஆனந்தசங்கரி. இக் கடிதத்தின் பிரதியொன்று தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகச் சகல மாவட்டங்களிலும் போட்டியிட விண்ணப்பித்தவர்கள் தொடர்பான சகல விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு மற்றொரு கடிதம் மூலம் சம்பந்தனைக் கோரியுள்ளார். சங்கரி, வேட்பாளர்கள் தெரிவில் ஏமாற்று வேலைகள் இடம் பெறுவதாகவும், சங்கரி கண்டனம் தெரிவித்துள்ளார். தேர்தல் நியமனக் குழுக் கூட்டம் தொடர்பான கடிதத்தைச் சம்பந்தன் காலதாமதமாகவே தனக்கு அனுப்பியதாகக் குற்றஞ்சாட்டியிருக்கும் ஆனந்தசங்கரி, கட்சி தொடர்பான கடமைகளை உரியவர்கள் உரிய முறைப்படி செய்யாது குறுக்கு வழிகளை நாடுவதால்தான் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்றும் கண்டித்துள்ளார். நீங்களும் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கமும் திருமலை, மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் பட்டியலைத் தயாரித்து விட்டீர்களென அறிகிறேன். இதனால் கட்சியின் முத்த உறுப்பினர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏமாற்றமடைந்து தன்னிடம் முறையிட்டுள்ளதாகவும் தாகவும் ஆனந்தசங்கரி சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்டியில் ஹக்கீம் வெற்றிபெறுவாரா?

கடந்த ஏழாம் திகதி சனிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெந்தோட்டையில் இருந்தபோதே பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தகவல் அவருக்குக் கிட்டியது. மறுநாள் எட்டாம் திகதி இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடனும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் ரணில் விக்கிரமசிங்க தொடர்புகொண்டு தேர்தலில் இணைந்து போட்டியிடுவது பற்றிப் பேசினார். அன்று இரவே கொழும்பில் பிரதமரைச் சந்தித்த தொண்டமான் தேர்தல் உத்திகள் பற்றிக் கலந்துரையாடினார். ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்த தொண்டமான் தேர்தல் உடன்பாடுகள் பற்றியும் உரையாடினார். இதன்படி நுவரெலியா, பதுளை, மாத்தளை, கண்டி மாவட்டங்களில் இணைந்து போட்டியிட இரு கட்சிகளும் இணங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதற்கிடையில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற விரும்பிய பிரதமர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமோடு கடந்த பதினோராம் திகதி பேச்சுவார்த்தை நடத்தி ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளார். வடக்கு - கிழக்குக்கு வெளியே ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடலாமெனக் கூறப்படுகிறது. கண்டியில் ஹக்கீம் வெல்ல வேண்டுமென்றால் ஐ.தே.க.வுடன் உடன்பாட்டுக்கு வந்தேயாக வேண்டும். பேரியல் அஷ்ரப்பின் நுஆ அணி சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பில் இணைந்துள்ளதால் கிழக்கில் எப்படி இவர்களின் தேர்தல் வியூகம் அமையுமென்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். கிழக்கில் முஸ்லிம்களைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ், நுஆ, அதாவுல்லா அணி ஆகியவை பிரிந்தே போட்டியிடும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. ரவூப் ஹக்கீம் கண்டியில் ஏதாவதொரு தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே வெற்றிபெறக் கூடிய வாய்ப்புகள் இருப்பதால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்றே போட்டியிடுவாரென்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். வடக்கு - கிழக்கில் தேசியக் கட்சிகள் போட்டியிடப் புலிகள் அனுமதிக்கப் போவதில்லையெனக் கூறப்படுகின்றபோதிலும் அம்பாறை, திருமலை போன்ற மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முஸ்லிம்கள் போட்டியிடக் கூடிய சாத்தியமும் தென்படுகிறது.

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் நுஆ போட்டியிடும் என்பதால் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் ஐ.தே.க.வின் ஆதரவைப் பெற்று மரச் சின்னத்தில் போட்டியிடலாமெனவும் கூறப்படுகிறது. முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதியாக முஸ்லிம் காங்கிரஸே திகழ வேண்டுமென்றும் அரசுக்கும் புலிகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டுமென்றும் ரவூப் ஹக்கீம் ஐ.தே.க.வைக் கோருவாரென்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். கடந்த தேர்தலில் ஐ.தே.க. - இ.தொ.கா - முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை இணைந்து 41, 91, 372 வாக்குகள் பெற்றிருந்தன. சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் இணைந்து 41, 46, 198 வாக்குகளைப் பெற்றன என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

முரசம்

தேர்தல் மோசடிகள் தடுக்கப்படமாட்டாதா?

அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.

இம்முறை நிகழவுள்ள பொதுத் தேர்தலில் அனைவரையும் கவலைக்குள்ளாக்கியுள்ள விடயம் தேர்தல் மோசடிகள் மோசமடையக் கூடும் என்பதுதான். இத் தேர்தலைக் கண்காணிக்க ஐ.நா.சபை அதிகாரிகளின் கண்காணிப்புக் குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ள போதும் கால அவகாசம் போதாமையினால் அத்தகைய குழுவினை அனுப்ப முடியாதென ஐ.நா.சபை தெரிவித்துள்ளது. இது, நியாயமான தேர்தல் வாக்கெடுப்பு நிகழுமா என்ற அச்சத்திற்கு மத்தியில் கிடைத்துள்ள கவலை தரக்கூடிய ஒரு செய்தியாகும். இம்முறை நிகழவுள்ள தேர்தலில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில்தான் அதிகளவு மோசடிகள் நிகழுமென அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இப் பகுதியில் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தயாரிக்கப்படும் முறையே, இது திட்டமிட்ட தேர்தல் மோசடி ஒன்றுக்கு ஒழுங்கு செய்வதாக அச்சமடைய வைக்கிறது. கடந்த தேர்தலிலும் வடக்கு - கிழக்கில் பெருமளவு கள்ள வாக்குகள் மற்றும் பெட்டி நிரப்பல் சம்பவங்கள் நிகழ்ந்ததற்கான நம்பகரமான சந்தேகங்கள் எழுந்திருந்தன. யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழக மாணவர்கள் கள்ள வாக்களிப்பதில் ஈடுபட்டதானது பல்கலைக்கழக அந்தஸ்துக்கு ஏற்பட்ட ஒரு மாறாத களங்கமெனப் பகிரங்கமாக உரையாற்றியிருந்த செய்திகளை நாம் அறிந்திருந்தோம். இத் தேர்தலில் மேலும் கேள்விக்குரிய விடயமாக உள்ளது என்னவெனில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தற்போது பொலிலாரோ நீதிமன்றங்களோ செயற்பட முடியாதிருக்கும் நிலையில் தேர்தல் நடத்த முடியுமா என்பதும் அப்படி அங்கு நடத்தப்படும் தேர்தலில் வடக்கு - கிழக்குப் பகுதி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாற்றுக் கருத்துகள் கொண்ட தமிழ்க் கட்சிகள் உள்பட தேசியக் கட்சிகளும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்களா என்பதும்தான். அப்படி எவ்வித பிரசார நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதவாறு தடுக்கப்பட்ட மறுபகுதியினருக்கு இவ் வாக்களிப்பின் மூலம் நீதி நிலைநாட்ட முடியுமா என்ற கேள்வி உள்ளது. இவற்றோடு அப் பகுதிகளில் நிகழக் கூடிய தேர்தல் மோசடிகளை நிறுத்த எவ்வித வழிவகைகளும் இல்லை என்பதும் கவலைக்குரியது. இதைவிட அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும்கூட பல்வேறு தேர்தல் மோசடிகளுக்கான ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் வருகின்றன. பலர் மிரட்டல் காரணமாகத் தேர்தலில் இருந்து ஒதுங்கிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டுமுள்ளனர். இந் நிலையில் இத் தேர்தல் நிகழ்வதன் மூலம் மக்களின் கருத்து அறியப்படுவது எவ்வளவு அவசியமோ அதிலும்விட தேர்தல் மோசடிகளின் மூலம் மக்களின் கருத்து அல்லாத பெறுபேறுகள் மக்களின் பேரில் ஏற்படுத்தப்படுவிடக் கூடாதென்பதும் முக்கியமானது. இதனையிட்டு ஆரம்பத்திலிருந்தே பெருத்த அக்கறையுடன் கவனஞ் செலுத்த வேண்டியது பொது அமைப்புகளினதும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களினதும் பிரதான கடமையாகும். இம்முறை அதி கூடிய அளவான கண்காணிப்பாளர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நற்

"தமிழ்க் கூட்டு" உடைந்த குழுக்களுக்குள் வலுவடையும் பூசல்!

தற்போது நிகழவுள்ள தேர்தல் பெருத்த தலையிடியைக் கொடுத்துள்ளது யாருக்கென்று கேட்டால், அது தமிழ் கூட்டமைப்பினருக்குத் தான். அவர்கள் இப்படியொரு தேர்தல் திடீரென வருமென எதிர்பார்த்திருக்கவில்லை. கடந்த தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுவிட்ட தாம் தொடர்ந்து ஆறு வருடங்களைப் பாராளுமன்றத்தில் கழிக்கலாம் என்றே கருதியிருந்தனர். ஆனால், இலங்கையின் அரசியல் நிலைவரம் அவர்களின் நப்பாசைகளைப் புறந்தள்ளிவிட்டு ஒரு புதிய தேர்தலுக்கு வழிவிட்டுள்ளது.

என்றாலும் இத்தகைய ஒரு நிலைவரம் தோன்றுகின்றது என்பதற்கான அறிகுறிகள் கடந்த சில மாதங்களாகவே வெளிப்படத் தொடங்கியிருந்தன. இலங்கையின் இரு பிரதான கட்சிகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்த அரசியல் பிணக்கு, இரு பிரதான ஆட்சி மையங்களுக்கிடையிலான அதிகாரப் பிணக்காக வடிவமெடுத்த நிலையில், அதன் தீர்வுக்கு தேர்தல் ஒன்றே தவிர்க்க முடியாத மார்க்கம் என்பது பலருக்கும் புலப்படத் தொடங்கியிருந்தது. இப் புலப்பாடு தமிழர் கூட்டமைப்புக்கும் தெரிந்துதான் இருந்தது. ஆனால், பாவம், அவர்கள் அதனைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் மட்டுமல்ல, அத்தகைய நிலைமைக்கு ஏற்ப தம்மைச் சுதாகரித்துக்கொள்ள முடியாத நிலைமையிலும் இருந்தார்கள். உண்மையில் ஒருபுறம் பிரதான கட்சிகளுக்கிடையிலான பிணக்குகள் வலுத்துக்கொண்டிருந்த நேரத்தில் மறுபுறம் இக் கூட்டமைப்புக்குள் பெரும் பிணக்குகளும் முறுகல்களும் முற்றத் தொடங்கியிருந்தன.

கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருந்த பிணக்குகளில் தலையான ஒன்று யாதெனில், அதன் பிரதான கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்ட தலைமைப் பிணக்குத்தான். இது கூட்டமைப்பைப் பாரதூரமான அளவு பாதிக்க நேர்ந்தது. ஏனெனில், இக் கட்சியின் சின்னத்திலும் பெயரிலும்தான் கூட்டமைப்பு கடந்த தேர்தலில் போட்டியிட்டிருந்தது. வெறுமனே கூட்டமைப்பு என்று அவர்கள் தம்மைத் தாம் கூறிக்கொண்டாலும், பாராளுமன்றத்தைப் பொறுத்த வரை அவர்கள் அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம்.பி.க்களாகவே உத்தியோகபூர்வமாகக் கருதப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் பாராளுமன்றத்தில் கூட்டணிக்கான ஒரே ஒரு அலுவலகமே வழங்கப்பட்டது. அக் கூட்டமைப்பின் தலைவராக கூட்டணியின் செயலாளரான சம்பந்தனே பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தமை மற்றொரு அம்சம். இதனால் உத்தியோகபூர்வமாக வெளிநாட்டுத் தூதரகங்களோ மற்றும் அரசியல் அரச மட்டங்களோ விடுக்கும் அழைப்புகளுக்கும் பாராளுமன்றக் கட்சி என்ற வகையில் கூட்டணியினரே இக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவம் செய்து வந்தனர். இதுவும் கூட்டமைப்புக்குள் மற்றொரு புகைச்சலாக எழுந்திருந்தது.

இவ்வாறான பிரதான பாத்திரத்தை வகித்த கூட்டணிக்குள் ஏற்பட்ட தலைமைப் பிணக்கு செங்குத்தாகச் சென்று கூட்டமைப்பு முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது என்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

> "சுதிரவன் சொல்லுக்குத் தலையசைத்த தமிழன் மலையேறிவிட்டான். தேசியத் தலைவர் பிரபாவின் சொல்லுக்குத் தலைகொடுக்கும் தமிழன் நீயென்பதை நிரூபிக்க நாளை நீரும் வாரும் தமிழா!' கூட்டணியின் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களித்த தமிழ் சமூகம் மாறிவிட்டது என்றும், அது தேசியத் தலைவர் பிரபாவின் சொல்லுக்குத் தலை கொடுக்கும் சமூகமாக மாற வேண்டும் என்பதும்தான் இவ்வாசகத்தின் அர்த்தம் என்பதை யாரால் புரிந்துகொள்ள முடியாது?

கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைப் பிணக்கு என்பது உண்மையில் கூட்டணிக்குள் இயற்கையாக நிகழ்ந்த ஒரு சம்பவம் அல்ல என்பது நடப்புகளை அவதானித்து வருபவர்களுக்கு நன்கு புரியும். இதுவரை காலமும் - 1974 முதல் இன்று வரை - 30 வருடங்களாகக் கூட்டணியின் ஆரம்ப உறுப்பினராக இருந்து மூத்த உறுப்பினராகி தலைமைப் பதவியை எட்டியிருக்கும் ஆனந்தசங்கரிக்கு இதுவரை வராத எதிர்ப்பு தற்போதுதான் திடீரென ஏற்படுகிறதென்றால் அதில் ஏதோ பிரத்தியேகமான விடயம் இருக்க வேண்டும் என்பதை சிறுபிள்ளையால் கூட உணர்ந்துகொள்ள முடியும். நீண்டகாலமாகச் செயலாற்றும் முதிர்ந்த கட்சி உறுப்பினர்களான சம்பந்தர், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கும் சங்கரிக்கும் இவ்வளவு காலமும் கடந்த பின் இப்போது முறுகல் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. உண்மையில் சம்பந்தரும் ஜோசப்பும் தங்கள் சொந்தக் கருத்தில் நின்று சங்கரியோடு பிணக்குப்படவில்லை. மாறாக மற்றொரு கருத்துக்கும், மற்றொரு சக்தியின் உந்துதலுக்கும் உள்ளாகியே அவர்கள் இவ்வாறு மாற நேர்ந்துள்ளதென்பது வெளிப்படை.

ஆனந்தசங்கரி மீது கூட்டணி என்ற ரீதியில் குற்றம் காண்பதற்கு எதுவும் இல்லை. புலிகள் என்ற வகையில் ஆனந்தசங்கரி மீது கொள்ளக்கூடிய அதிருப்திகளையே இவர்கள் இப்போது கூட்டணி என்ற வகையில் பாரமேற்றுள்ளார். கூட்டணியின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு நினைவு நாள் மற்றும் நூல் வெளியீட்டு விழா நடத்தியது கூட்டணிக்குப் பாதகமான ஒன்றல்ல. மாறாக, கூட்டணியின் கடமையும் கூட. ஆனால், அவ்விழாவை சங்கரி மேற்கொண்டபோது சம்பந்தர் மற்றும் அவர் சார்ந்த கூட்டணி உறுப்பினர்கள் புறக்கணித்ததானது கூட்டணியின் நலனில் இருந்து நிகழ்த்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக புலிகளின் நலனில் இருந்து நிகழ்த்தப்பட்ட ஒன்றே. இதே போலவே யாழ். நூலகத்தை யாழ். மாநகர சபை மேயரான கூட்டணியைச் சார்ந்த செல்லன் கந்தையன் தலைமையில் கூட்டணியின் தலைவரான ஆனந்தசங்கரி திறந்து வைப்பதென்பது கூட்டணிக்குப் பெருமை தரும் அரசியல் இலாபம் கொண்ட ஒன்றே. அத்தோடு அது யாழ். மக்களுக்குச் செய்யும் சேவையுமாகும். ஆனால், அதனைப் புலிகள் எதிர்த்து திறக்க விடாமல் செய்த வேளையில் யாழ்.கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா போன்றவர்கள் நூலகத்தைத் திறக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை என அறிக்கை விடுத்தது, கூட்டணியின் உண்மையான நலனில் இருந்து அல்ல. நிச்சயமாக அது புலிகளின் விருப்பத்தில் இருந்துதான் என்பது தெளிவாகத் தெரியும். இவ்வாறே கூட்டணியின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், புலிகளின் விருப்பு வெறுப்புகள் கூட்டணி என்ற கட்சிக்குள் பலமாக ஊடுருவி கோலோச்சத் தொடங்கிய நிலைமையின் விளைவே சங்கரியைத் தலைமைப் பதவியிலிருந்து அகற்றும் முயற்சி ஆகும்.

ஆனால், சங்கரி உஷாராக இருந்ததினால் தனித்து ஒருவராக இருந்து இதனை எதிர்த்துச் செயற்பட்டு நீதிமன்றத்தை நாடி தனது தலைமைப் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள முனைந்துள்ளார். இது சம்பந்தர் குழாம் எதிர்பாராத ஒன்று. புலிகளின் மிரட்டல் பற்றி உணர்ந்தவுடனேயே சங்கரி துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று விலகி ஓடிவிடுவார் என்று அவர்கள் நினைத்தார்கள். சங்கரியின் கையில் கூட்டணி யாப்பின் வாயிலாகப் பலம் சேரும் என்றும் அதை அவர் உபயோகிப்பார் என்றும் அதற்காக அவர் நீதிமன்றம் வரை செல்வார் என்றும் அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை.

கூட்டணியின் கெட்ட காலம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சங்கரிக்குச் சார்பாக நீதிமன்றத் தடை உத்தரவு வந்துள்ளது. இந்த நீதிமன்ற உத்தரவின்படி கூட்டணியின் பெயரில் சங்கரியின் தலைமையைத் தவிர்த்து எவராலும் எந்தவொரு கூட்டத்தைக் கூட்டவோ, முடிவுகளை எடுக்கவோ முடியாது. இது தற்போதைய நிலைமையில் கூட்டணிக்கு மட்டுமல்ல, கூட்டமைப்புக்கே பாரிய இக்கட்டை ஏற்படுத்தியுள்ள தீர்ப்பாகும்.

கூட்டணி இம்முறை தனது உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடியுமா என்பது பெருத்த சந்தேகத்திற்கு இடமாகிவிட்டது. சங்கரியை நிராகரித்து இதனை யாரும் செய்ய முடியாது. அடுத்து கூட்டணி ஒரு கட்சி என்ற ரீதியில் மற்றைய கட்சிகளோடு கூட்டமைத்துக் கொள்வதற்கான முடிவை எடுக்க முடியுமா என்பதும் கேள்விக்குறியாகிவிட்டது. ஏனெனில், தலைவரான சங்கரியின் அனுமதியின்றி அத்தகைய முடிவு செல்லாது. சங்கரி கலந்துகொள்ளாத கூட்டணியின் கூட்டத்தில் அத்தகைய முடிவையும் எடுக்க முடியாது. இதைவிட கூட்டணியைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றொரு சின்னத்தின் கீழ் போட்டியிடுவதற்கு முடியுமா என்பதும் சிக்கலான கேள்வியாகியுள்ளது. அதற்கும் சங்கரி தலைமையிலேயே முடிவெடுக்க வேண்டும்.

கூட்டணி உறுப்பினர்கள் யார் யார் இந்த முறை போட்டியிடுவற்கு விண்ணப்பித்துள்ளனர் என்ற விபரங்களைத் தனக்கு முறைப்படி அனுப்பி வைக்கும்படி சங்கரி செயலாளர் சம்பந்தருக்கு உத்தியோகபூர்வமாகக் கடிதம் எழுதியுள்ளார். இதன் அர்த்தம், சங்கரியின் அனுமதியின்றி கூட்டணி சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள் என்பதேயாகும். சிக்கலோ சிக்கல்! இது இடியப்பச் சிக்கல்! என்ற நிலை கூட்டணிக்கு. உண்மையில் இது அவர்கள் வலிந்து ஏற்படுத்திக்கொண்ட சிக்கல்தான்.

நிலைமையைப் பார்க்கும்போது சங்கரி சுயேச்சையாகப் போட்டியிடக் கூடிய சாத்தியக்கூறே தென்படுகிறது. கூட்டணி தொடர்ந்து கூட்டணியாக இருக்குமா என்பதற்கு இந்தத் தேர்தலின் குழப்பங்கள்தான் விடையளிக்க வேண்டும்.

இதேவேளை புலிகளின் உள்ளார்ந்த எதிர்பார்ப்பும் கூட்டணி என்ற கடசியும் அதன் சின்னமும் அழிந்தொழிவதுதான் என்பது ஊகிக்கக் கூடிய ஒன்றே. கூட்டணியின் தலைமை வரிசையில் நீண்டதொரு பட்டியல் புலிகளால் சரித்து வீழ்த்தப்பட்டுள்ளது. இதைவிட அண்மையில் மட்டுநகரில் நிகழ்த்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வில் வெளிவந்த பிரசுரங்களின் சில வாசகங்கள் புலிகளின் உள்ளக்கிடக்கையை அப்பட்டமாக வெளிக்காட்டியுமுள்ளன. அதில் இருந்தது இவ்வாறுதான்.

"கதிரவன் சொல்லுக்குத் தலையசைத்த தமிழன் மலையேறிவிட்டான். தேசியத் தலைவர் பிரபாவின் சொல்லுக்குத் தலைகொடுக்கும் தமிழன் நீயென்பதை நிரூபிக்க நாளை நீரும் வாரும் தமிழா!"

கதிரவன் சொல்லுக்குத் தலையசைத்த தமிழன் மலையேறிவிட்டான் என்பதன் அர்த்தமென்ன? கூட்டணியின் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களித்த தமிழ் சமூகம் மாறிவிட்டது என்றும், அது தேசியத் தலைவர் பிரபாவின் சொல்லுக்குத் தலை கொடுக்கும் சமூகமாக மாற வேண்டும் என்பதும்தான் இவ்வாசகத்தின் அர்த்தம் என்பதை யாரால் புரிந்துகொள்ள முடியாது? இதுவே கூட்டணிச் சின்னம் முடக்கப்பட வேண்டுமென்ற உள்ளக்கிடக்கையைக் கட்டியம் கூறுகிறதல்லவா? ஆக, மொத்தத்தில் எதிர்வரும் தேர்தலில் இவ் உட்கிடை நிறைவேறத்தான் போகிறது. இறுதியில் கூட்டணி என்ற கட்சியே பலிக்கடாவாக மாறிவிட்ட பரிதாப நிலை. இதில் சம்பந்தரோ ஜோசப்போ தாம்தான் தலைக்கடா என்று சாதிக்க கொம்புயர்த்திக் காட்டுவதையிட்டு பரிசசிப்பதைவிட அனுதாபத்தைத்தான் தெரிவிக்க முடியும்.

கூட்டணியின் பரிதாப நிலை இவ்வாறு ஆகிப்போயிருக்க, கூட்டமைப்புக்குள் மறுபுறம் தமிழ்க் காங்கிரஸிலும் குழப்பங்கள். அதன் தலைமை மூத்த உறுப்பினராகிய விநாயகமூர்த்தியிடம் இருந்து கஜேந்திரனால் தந்தையின் வழி சேர்ந்த தனிச் சொத்தென்ற தொனியில் சுவீகரிக்கப்பட்டுவிட்டது. இதில் விரக்தியுற்றிருக்கும் மற்றொரு காங்கிரஸ் முக்கியஸ்தரான கலாநிதி குமரகுருபரன் ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் போட்டியிடும் மனோகணேசனின் மேல்மாகாண மக்கள் முன்னணிக்குத் தாவ முடிவுசெய்துள்ளார். இறுதியில் அவரும் புலிகள் அறிவித்துள்ளதற்கு மாறாகப் பெரும்பான்மைக் கட்சி ஒன்றின் சின்னத்திலேயே போட்டியிடுகிறார்.

அண்மையில் கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள மற்றொரு பாரிய சர்ச்சை யாதெனில், இம்முறை தேர்தலில் நபர்களுக்கான விருப்பு வாக்குகளைக் கோருவதா அல்லது கட்சிக்கான வாக்கை மட்டும் கோருவதா என்ற பிணக்குத்தான். புலிகள் சார்பான கருத்து நிலையில் இருப்பவர்களும், தமது கடந்தகால செயற்பாடுகளால் மறுமுறை தாம் மக்களால் தெரிவு செய்யப்படமாட்டார்கள் என்ற அச்சம் கொண்டிருப்பவர்களும் விருப்பு வாக்கைக் கோராது கட்சிக்கான வாக்கை மட்டுமே கோர வேண்டுமென்றும் பின்னர் கட்சி தீர்மானிப்பவர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்றும் பலமாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும், மறுதரப்பினர் விருப்பு வாக்கைக் கோராவிட்டால் போட்டியாளர்கள் உற்சாகமாகச் செயற்படமாட்டார்கள் என்று கூறி, தமது செல்வாக்கை உத்தரவாதப்படுத்திக்கொள்ளவே பிரயத்தனப்படுகிறார்கள். இது குறித்து புலிகளின் முடிவே இறுதி முடிவாக அமையும்.

அண்மையில் நிகழ்ந்த இவ்வாறான கூட்டத்தைக் காங்கிரஸ் பகிஷ்கரிக்குமென அதன் தலைவர் விநாயகமூர்த்தி அறிக்கை விடுத்திருக்க, அதனை உதாசீனப்படுத்தி கஜேந்திரகுமார் அக் கூட்டத்தில் கலந்து கொண்டது விநாயகமூர்த்திக்குப் பகிரங்கமாக விழுந்த ஒரு சாட்டையடியாகும். இது காங்கிரஸ்க்குள் முளைவிட்டுள்ள முரண்பாட்டின் பிரதிபலிப்பே. மற்றொரு காங்கிரஸ் முக்கியஸ்தரான சி.வி.கே.சிவஞானத்தை ஊழல் பேர்வழியென்ற குற்றச்சாட்டில் தேர்தலில் போட்டியிடக் கூடாதெனப் புலிகள் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இக் கூட்டமைப்புப் பிணக்குகளின் மத்தியில் - கூட்டணிச் சின்னம் ஒழிக்கப்பட்ட நிலையில் - காங்கிரஸ் சின்னத்திலா, ரெலோவின் சின்னத்திலா அல்லது பழைய தமிழரசுக் கட்சியின் சின்னத்திலா போட்டியிடுவது என்று கூட்டமைப்பினர் குழம்பிய வண்ணமுள்ளனர். ரெலோவிலும் கூட முன்னாள் எம்.பி.க்களான குகனேஸ்வரன் போன்றோர் இம்முறை ஒதுக்கப்படலாமென நம்பகமாகத் தெரிய வருகிறது.

இதைவிட மற்றொரு முக்கிய விடயமென்னவென்றால், கூட்டமைப்பில் போட்டியிடும் அனைவரும் தமது இராஜினாமாக் கடிதத்தையும் சேர்த்தே கையளிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளனர் என்பதுதான். கூட்டமைப்பு வேட்பாளர்களின் பட்டியல்கள் யாவும் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களால்தான் இறுதி நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் அறிய வருகிறது. எப்படியோ கூட்டமைப்பினர் இம்முறை போன்ற சிக்கலை இதுவரை காலமும் எதிர்நோக்கியிருக்கவில்லை என்பது உண்மை. இதன் விளைவு இத் தேர்தலில் எதிரொலிக்கவே செய்யும்.

"நீதிமன்றத் தடை" கூட்டணிக்குள் பகை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் எதிர்காலம் கடந்த 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலேயே ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. ஆனாலும், அதனை அப்போது முடி மறைத்துக்கொண்டார்கள். நாட்கள் செல்லச் செல்ல பின்னாலிருந்து கட்டளை பிறப்பிப்பவர்களின் கட்டளைப்படி நடக்க வேண்டிய கட்டாயம் ஒருபுறம்; கட்சியினுடைய ஒழுங்கு, யாப்பு என்பவற்றுக்கேற்ப கட்சியினுடைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு மறுபுறம்; இரண்டையும் ஒப்பிடுகையில் கட்சியினுடைய யாப்பையோ, ஒழுங்கையோ மீறி நடந்தால் கட்சியின் தலைவராகிய ஆனந்தசங்கரியிடமிருந்து கொலை அச்சுறுத்தலோ வேறு வகையான அழுத்தங்களோ பிரயோகிக்கப்படப் போவதில்லை. ஆனால், வன்னியிலிருந்து இடப்படக் கூடிய எந்தவொரு கட்டளையையும் சிரந் தாழ்த்திச் செய்யாவிட்டால் மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய சூழலே இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தமக்கு வழங்கப்பட்ட பாரிய கட்டளையாக ஆனந்தசங்கரியின் அரசியல் இருப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பு பிறப்பிக்கப்பட்டது. என்னதான் இருந்தாலும் தமது கட்சித் தலைமைக்கே இவ்வாறான குழிபறிப்புக்குத் துணை போவார்கள் என்று நம்ப முடியவில்லை. ஆனாலும், அதைச் செய்யத் துணிந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் அதற்காக வெட்கப்படவோ

> தலைவர் என்ற ரீதியில் சங்கரி, நடைபெறவிருக்கும் தேர்தல் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகத் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்திருப்பவர்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு சம்பந்தரிடம் கேட்டுள்ளார்.

தலைகுனியவோ இல்லை. ஆனந்தசங்கரியைப் பதவியிலிருந்து அப்புறப்படுத்துவதற்காகத் தம்மால் முடிந்த சகல நடவடிக்கைகளையும் எடுத்தார்கள். அதன் ஒரு கட்டமாக கொழும்பின் அலுவலகத்தில் ஆனந்தசங்கரிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து அதை நிறைவேற்றும் நோக்கத்தோடு ஆனந்தசங்கரிக்கே தெரியாத புதிய முகங்களைக் கட்சி உறுப்பினர்களாக அழைத்து வந்திருந்தனர். இவர்கள் அழைத்து வந்தார்களா? அல்லது அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்களா? என்பதெல்லாம் மகா மகா

ஆனந்தசங்கரி

கேள்விகளுக்குட்படுத்தப்பட்டவை. இவ்வாறான சூழ்ச்சிகளை நன்றாகப் புரிந்துகொண்ட நிலையிலேயே ஆனந்தசங்கரி நீதிமன்றத் துணையை நாடினார். நீதிமன்றம் ஆனந்தசங்கரியின் வாதங்களில் நியாயமிருப்பதை ஏற்றுக்கொண்டதனால் அவரையே கட்சியினுடைய தலைமைப் பதவியைத் தொடரவும், கட்சியினுடைய யாப்புகளுக்கு மீறி செயற்படுகின்ற எந்தவொரு செயற்பாடும் சட்டத்திற்கு மாறானது எனவும் தனது முடிவினை அறிவித்தது. இந்த வீடயத்தில் ஆனந்தசங்கரி ஜெயித்துவிட்டார். அவருக்கு எதிராகப் பல முனைகளிலும் சூழ்ச்சியில் இறங்கியவர்கள் சட்டத்துக்கு முன்னால் தோற்றுப் போய்விட்டார்கள். ஆனாலும், சிறுபிள்ளைத்தனமாக நீதிமன்ற உத்தரவையோ, சட்ட ஒழுங்குகளையோ கவனத்தில் கொள்ளாமல் கட்சியின் பேரில் கூட்டத் தொடர்களை ஏற்பாடு செய்வதிலும் சில தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும் அங்கம் அங்கமாகச் செயற்பட்டு வருகின்றனர். இது தேர்தல் காலம் என்பதால் அரசியல் தேவை இருக்கின்றது என்பது உண்மையே. ஆனால், கட்சியினுடைய பெயரிலோ கட்சியினுடைய சின்னத்திலோ நடத்தப்படும் எந்தவொரு காரியமும் கட்சியினுடைய தலைவர் என்ற வகையில் ஆனந்தசங்கரியின் ஒப்புதலைப் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. இதை ஆனந்தசங்கரி இரகசியமாகத் தெரிவிக்காமல், ஊடகங்களின் துணையோடு திறந்த மடலாகவே கட்சியின் செயலாளரான சம்பந்தருக்குத் தெரியப்படுத்தி இருந்தார். இதில் வேடிக்கை என்னவென்றால், பழம்பெரும் அரசியல்வாதியாக, கீழக்கு மாகாணத்தில் குறிப்பிடக் கூடிய தமிழ் அரசியல் பிரமுகராகத் தன்னைப் பறைசாற்றி வரும் சம்பந்தன், நீதிமன்ற உத்தரவு குறித்தும் கட்சியினுடைய சட்ட ஒழுங்குகள் குறித்தும் அக்கறைப்படாமல் செயலாற்றுவதும், அதை தலைவர் என்ற வகையில் ஆனந்தசங்கரி விளக்குவதும் எவ்வளவு தூரம் பொருத்தம் என எண்ணிப் பார்க்க முடியவில்லை. இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரான ஜோசப் பரராஜசிங்கம் 2004.02.15ஆம் திகதி சர்வதேச வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் நீதிமன்றம் விதித்துள்ள தடையானது தங்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றவாறு பேசியிருந்தார். அப்படியானால் உதயசூரியன் சின்னத்தைப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பாவிக்கலாமே. அதற்காக ஆனந்தசங்கரியினுடைய சம்மதத்தைக் கேட்டு நிற்க வேண்டிய தேவையில்லை. இது தவிர, அண்மையில் கொழும்பில் கூடவிருந்த கட்சிக் கூட்டத்தினைக் கூட விடாமல் பொலிஸார் தடுத்து நிறுத்தியதாகவும் அறிய முடிகிறது. இது ஒரு தடையாக இல்லையா? மேலும் ஆங்காங்கே கட்சியின் பேரில் கூட்டப்படும் கூட்டங்கள் எந்தவிதத் தீர்மானங்களையும் நிறைவேற்றாமலே நிறைவுபெறுகின்ற நிலை ஏன்? இவ்வாறான கேள்விகளுக்கெல்லாம் ஜோசப் பரராஜசிங்கம் எவ்வாறு பதிலளிக்கப் போகிறார்? தவிரவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் ஆனந்தசங்கரியினுடைய தலைமையை ஏற்காத வரையில் தன்னிச்சையாக எவராலும் பாவிக்க முடியாதது ஆகும்.

சம்பந்தன்

அதேவேளை கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் வேறு எந்தவொரு கட்சியுடனும் கூட்டுச் சேர்வதென்பது சட்டத்திற்கு விரோதமானதாகும். இவ்வாறான மிக முக்கியமான பிரச்சினைகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளன. அநேகமாக ஆனந்தசங்கரி சுயேச்சையாக இத் தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாமெனவே பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியானால் கூட்டணியைச் சேர்ந்த பிரமுகர்கள் மற்றைய கட்சிகளோடு ஏற்படுத்திக்கொள்ளும் கூட்டமைப்பு செல்லுபடியற்றதாகவே போகும். ஏனெனில், அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏகோபித்த தீர்மானங்களில் ஒன்றாக இருக்கப்போவதில்லை. இதிலிருந்தே அரசியல் தேவைக்காக இவர்கள் ஆடுகின்ற நாடகத்தனத்தை மக்கள் இனங்கண்டுகொள்ள முடியும். அடிப்படையில் எந்த நிரந்தரமான திட்டங்களும் இல்லாமல் இணக்கப்பாடுகள் எதுவுமில்லாமல் தனியே புலிச் சாயத்தை மட்டுமே பூசிக்கொண்டு தேர்தல் களத்தில் குதிக்கப்போகும் பொய் முகங்கள் இவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு விடயத்தை குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, மட்டக்களப்பில் புலிகள் நடத்திய பொங்கு தமிழ் நிகழ்வில் ஒரு சிந்தனைக்குரிய நாடக முறை அரங்கேற்றப்பட்டது. அதாவது உதயசூரியனை கீழே தள்ளிவிட்டு, புலிகளின் சின்னத்தை மேலே தூக்கிப் பிடித்து சத்தியப் பிரமாணங்கள் செய்யப்பட்டன. இதிலிருந்து என்ன தெரிகிறது? காலப்போக்கில் பார்க்கும் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் தமிழ் மக்கள் மனதில் மறக்கப்பட முடியாத அளவு இடம்பிடித்துக்கொண்டுள்ளதானது புலிகளின் அரசியல் காய் நகர்த்தலுக்கு முட்டுக்கட்டையாக அமையக் கூடும். ஆகவே இப்போதிருந்தே அதற்கெதிரான அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள் அற்றதான ஒரு அரசியல் மாயையை உருவாக்க வேண்டிய தேவையைப் புலிகள் உணர்ந்துள்ளனர். இதைக் கூடப் புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்துகொண்டு வெளிப்படுத்த முடியாமல், கூட்டணி வளர்த்துவிட்ட கொம்பன்கள் பாராளுமன்ற ஆசனச் சுகத்தை அநுபவிப்பதில் மட்டும் மயங்கி கிடக்கிறார்கள் என்பது வெட்கக்கேடான வீடயம். இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற வீடயங்களின் ஆழமான எதிர்பார்ப்பை இவர்களுக்காக வாக்களிக்க இருக்கும் சாதாரண மக்கள் இனங்கண்டுகொள்வது அவசியமாகும். மற்றுமொரு வீடயம் யாழ்ப்பாணத்தில் மாவை

அலசுவது மதியூகி

சேனாதிராஜா, ரவிராஜ் போன்றவர்கள் தேர்தல் களத்தில் தமது தலைவரான ஆனந்தசங்கரியையே எதிர்க்கும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. ஆனந்தசங்கரியும் அவரது ஆதரவாளர்களும் எதிர்வரும் தேர்தல் நிலைமையை எவ்வாறு எதிர்நோக்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த வகையில் தலைமையில்லாத உதிரிகளான இவர்கள் மேலும் பல உதிரிகளோடு கூட்டுச் சேர்ந்து மக்களிடம் சென்றாலும், உதயசூரியன் இல்லாத வேறு எந்தச் சின்னத்தையும் அவ்வளவு எளிதில் மக்கள் மனங்கொள்வார்கள் என்று நம்ப முடியாது. தவிரவும் சென்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களால் சாதாரண தமிழ் மக்கள் எவருக்கும் எவ்வித நன்மையும் கிட்டவில்லை. மக்களுக்கு என்ன செய்தார்கள் என்ற கேள்வி இவர்களை நோக்கித் திரும்பியுள்ளது. ●

அதிரடி அய்யாத்துரை

மண்ணெண்ணையார் பி.பி.சி.யில அழுததைக் கேட்க பரிதாபமாத்தான் இருக்கு. தான் குடாநாட்டு தேர்தலில இருந்து விலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறாராம். "தள்ளப்பட்டு" எண்டா... தானாக விலகாமல் யாரோ தள்ளித்தான் விலகிறதாச் சொல்லாமல் சொல்லியிருக்க, அந்தப் பொல்லாத பி.பி.சி.காறர் அதோட விடாமல் "உங்களை யாரோ மிரட்டித்தான் விலகிறீங்களோ" எண்டு வாயால கேட்டிச்சினம். "சீச் சீ சீ... என்னை யாரும் மிரட்டேலாது. ஒற்றுமைக்கு குறுக்கீடா நிக்கக் கூடாது எண்டிட்டு நானாத்தான் விலகிறன்" எண்டு வழிஞ் சாரே பார்க்கலாம்! சிரிக்கிறதோ அழுகிறதோ தெரியேல்லயுங்கோ. அடுத்தநாள் யாழ்ப்பாணப் பேப்பர்களில வந்த தலைப்புச் செய்தியில "பேரினவாதக் கட்சிகளொண்டும் குடாநாட்டுக்குள்ள போட்டியிட அனுமதிக்க முடியாது" எண்டு தமிழ்ச்செல்வனாற்ற அறிவிப்பு வரக்கேயே என்ன நடந்திருக்குமெண்டு எங்களுக்குப் புரியுந்தானே. சோ ஸாட்.

போற மண்ணெண்ணை யாரைப் புறஞ் சொல்லக் கூடாதுதான். எண்டாலும் என்ன செய்ய? சனத்தின்ர காசையும் சேர்த்தெல்லோ கொண்டு போகப் பாக்கிறார்? உந்த இந்து சமயப் பேரவைக் கட்டடம் கட்டிறதாச் சொல்லி ஒரு கோடி ஒதுக்கிவிச்சவரெல்லோ. அதில் ஐம்பது லகரத்த எடுத்து தேர்தல் இலாபத்துக்காக சீற், சீமெந்து எண்டு வாங்கி சனத்துக்குக் குடுக்க வெளிக்கிட்டவர். ஆனால், இப்ப அதையும் இடையில நிறுத்தி கிடைச்சது மிச்சம் எண்டு சுருட்டிக்கொண்டு போகப்போறதாத் தகவல். அதுபோக, வீடு கட்டிக் குடுக்கிறதாச் சொல்லி ஆள் அத்திவாரம் போட்ட திட்டங்களும் அம்போவாப் போகப்போகுது எண்டு சனம் ஈ.பி.டி.பி.யிட்டப் போய் ஒப்பேத்தித் தரச்சொல்லிக் கேட்டு நிக்குதாம். தானே நிர்க்கதியாப் போகப்போற நேரத்தில சனம் நிர்க்கதியாப் போறதைப் பற்றி எவன்தான் கவலைப்படுவான்?

அரசியல் எண்டால் அரிச்சுவடி என்ன தெரியுமோ? தன்னால செய்யேலாட்டாலும் அடுத்தவன் செய்யிறதத் தன்னும் கெடுத்துவிட வேணும் எண்டதுதான். இதுக்கு சாட்சாத் சரியான உதாரணம் நம்மட ரவியான ராயர்தான்! பாதுகாப்பு வலயத்துக்குள்ள மீளக்குடியேத்திறதாச் சொல்லி உண்ணாவிரதம் நடத்தி பெயிலியராப் போனவரெல்லோ. (அதுக்கு சனத்திட்ட வாங்கின திட்டு கிட்ட நிண்டவயளுக்குத்தான் தெரியும்) ஆனால், சாவகச்சேரி கச்சாய் றோட்டில உதயசூரியன் வீதியில ஈ.பி.டி.பி. கதைச்சு சனத்தக் குடியேற்ற வழிசெய்ததைக் கண்டு ஆளுக்குப் பொறுக்க முடியேல்ல பாருங்கோ. சிங்களச் செய்திகளிலையும் போய்க் குளறியடிச்சு, இராணுவத்தைத் தூண்டி எப்பிடியும் அந்தக் குடியேற்றத்தை குழப்பியடிக்க நிக்கிறார். இவருக்கு ஏன் இந்தப் பொல்லாப்பு வேலையெண்டு பொங்கினம் குடியேறின சனங்கள். எல்லாம் வயித்தெரிச்சல் செய்யிற வேலை!

ரவியான ராயர் தனியார் தொலைக்காட்சி கலந்துரையாடல் ஒன்றில போய் வலு கூலாய் சொல்லுறார், இந்த முறை தாங்கள், லோப் படிச்சவ, அறப் படிச்சவ எண்டு பாத்துத்தான் பட்டியல் போடப் போகினமாம் எண்டு. சொல்லுறதைக் கேட்டால் கொடுப்புக் குள்ள சிரிப்பாங்களெல்லோ சனம். அங்கே ரி.என்.ஏ.க்காறரின்ர லிஸ்ற் எல்லாத்தையும் இரண்டெழுத்தாரின்ர கையில எழுதிக் குடுத்து, அவை தெரிஞ்செடுக்கிற ஆக்களை அவை சொல்லுற மாதிரித்தான் வேட்பாளர் பட்டியலில் போட வேணுமெண்டு ஓடர். அதோட ரிசைன் லெட்டரையும் சேர்த்துக் குடுக்கவும் வேணுமாம். இந்த லெவலில ரவிராயர் போய் ஏதோ தான்தான் தெரிஞ்செடுக்கிற மாதிரி கோலிபிக்கேஷன் பாத்து செலெக்ட் பண்ணப் போறாரோ? ஹீ ஹீ ஹீ...

சித்தரையும் சோக்கப் போறதாயெல்லோ பெரிசா பெளசு காட்டி வருகினம் இப்ப எங்கட ரி.என்.ஏ.க்காறர். முதலில தங்களில யார் யார் லிஸ்ற்றில இருப்பினம் எண்டதே அவைக்கு நிச்சயம் இல்லை. முன்னாள் எம்.பி.க்கள் வன்னியில ராஜகுகனேஸ்வரனையும் மட்டு நகரில யோசப்பாரையும் தவிர, மிச்சம் எல்லாரும் இந்த முறை அவுட்டாம் எண்டு இப்பவே கதையடிபடுகுது. சங்கரியாரை எட்டி உதைச்சிட்டினம். மண்ணெண்ணையாருக்கும் மறுத்தான் போட்டாச்சு. மகாசிவத்தாருக்கும் முழுக்கு. சின்னம் என்னெண்டதே இன்னும் சில்லெடுப்பில இருக்குது. அகண்ட கூட்டு எண்டு சொல்லி ஒரு பம்மாத்தைக் கிளறி விட்டிட்டு, இப்ப அங்கால ஐ.தே.க லிஸ்ற்றில போய் சேந்துகொள்ளப் போறார் சந்திரசேகரனார். அந்தக் கதையும் இப்ப அவுட். எல்லாரையும் ஒண்டுபடுத்தினால் அதில தானும் சேரத் தயார் எண்டு சொல்லிவாற சித்தர் எல்லாரையும் ஒதுக்கித் தள்ளிற நேரத்திலையா போய்ச் சேரப்போறார்? சேந்தவையள் தோப்புக்கரணம் போடுறதைக் கண்ணாரக் கண்டுகொண்டு அவரும் போய்ச் சேருவாரெண்டதை யார் நம்புவினம்?

சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி

- ஆசிரியர்

திருத்தம் வருமா?

பல்லாயிரக் கணக்கான நேயர்களின் வாக்குகளை பெற்று முதல் தர வானொலியாக விளங்கும் சத்தி F.M. மிற்கு எனது பாராட்டுக்கள். ஆனாலும் ஒரு குறை வளரும் கலைஞர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக உருவான இளைய சத்தி நிகழ்ச்சி, இன்று விளம்பர நிகழ்ச்சியாக மாறிவிட்டது. அதாவது பிரபலமடைந்து வரும் கலைஞர்களை மேலும் தங்களை விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது ,ஆகவே வளரும் கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமான நிகழ்ச்சிகளைச் செய்வதற்கு களம் கொடுங்கள். நிகழ்ச்சித் தயாரிப்பாளதர்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் கவனம் எடுத்து சிறந்த நிகழ்ச்சியை வழங்க எனது வாழ்த்துக்கள்.

எம். திவ்வியா,
யாழ்ப்பாணம்.

இலங்கை, மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதரகம்

கொழும்பு, 27 ஜனவரி, 2004.

பிரான்ஸ் ஜனாதிபதி அவர்கள் கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி ஆற்றிய உரையைத் தொடர்ந்து நடப்பு சட்டபூர்வ நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு, பிரான்ஸ் தூதரகம் மூலமாக உலகத்தைப் பற்றியதும் சமய சுதந்திர விளக்கம் பற்றியதுமான பல கடிதங்களை பெற்றுக்கொண்டிருக்கின்றது.

பிரான்ஸில் உபசரிப்புத் தன்மை பழக்கமாகிவிட்டது. அது மட்டுமன்றி, எல்லா மதங்களுக்கும் பிரான்ஸில் இடமுண்டு. ஐரோப்பா கண்டத்திலேயே கிறிஸ்தவர்களும், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்களும் கூடுதலாகப் பிரான்ஸில் காணப்படுகின்றனர். யூதர்கள் இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் அடுத்தாற் போல காணப்படுகின்றனர். இதில் பிரான்ஸில் உள்ள பிரிவுத்தன்மையின் ஒற்றுமை நன்றாக விளங்குகின்றது. பிரான்ஸின் இஸ்லாம் மதத்தைக் கையாளும் சங்கம் 2003இல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் பிரான்ஸில் உள்ள முஸ்லிம்களுடன் மாநிலம் பேச்சுவார்த்தைகளை அதிகரித்து உள்ளது.

பிரான்ஸின் புரட்சி 1789ஆம் ஆண்டில் நடைபெற்ற காலம் தொட்டு எல்லா மதத்தினரு ஒன்றிணைந்து வாழ்கின்றனர். மதச்சார்பற்ற நாடாக பிரான்ஸ் விளங்குகின்றது. ஆலயத்தையும், மாநிலத்தையும் வேறாக மதிக்கின்றனர். ஜாதி, மத, பேதமின்றி பிரான்ஸியர் எல்லோருடைய நம்பிக்கைகளுக்கும் மரியாதை கொடுக்கின்றனர். அவர்களுடைய பற்றைப் பார்க்காது தனி மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு பிரான்ஸ் ஜனாதிபதி சிரார், ஒரு சுயாதீன ஆணைக்குழுவை நியமிக்கக் கோரியிருந்தார். இந்த ஆணைக்குழுவில் அந்த நாட்டின் ஒம்பட்ஸ்மன் தலைமை வகிக்கவும், பல்வேறு இனங்களைச் சோர்த்தவர்களும் அங்கத்தவர்களாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார். இந்த நாட்டின் கோட்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்காக அவர் ஆணைக்குழுவின் பல நிகழ்ச்சித் திட்டங்களையும் கோரினார். அவற்றில் எல்லா விதமான புறக்கணிப்புக்களையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஆணைக்குழு, பாடசாலைப் புத்தகங்களில் இதனைப் பற்றிய விடயங்களை உள்ளடக்க வேண்டும்.

இந் நாட்டில் வெவ்வேறு நம்பிக்கைகளுக்கு உரிய மனிதர்களை சமமாக மதித்து ஒன்றிணைந்து வாழ்வதற்கு ஊக்குவிக்கின்றது. கடைசியான சிபாரிசே பலருடைய நடவடிக்கைகளில் அடங்குகின்றது. அதன் நோக்கம் பள்ளிக்கூடங்களில் பாகுபாடின்றிச் செயற்படுவது, இனங்களுக்கு இடையில் பிரச்சினைகளைத் தவிர்த்தல், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பாகுபாடின்றிவித்தியாசமன்றி அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் அரசியல் அல்லது மதப் போதனைகளை உள்ளடக்கிச் செயற்படுதல், அத்தோடு விளையாட்டுப் போட்டியிலும் படிப்பித்தலிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒன்றாக நடத்துதல் என்பவையே. இவை தனியாருக்குப் பொருந்தாது. அரசாங்க உதவிகள் இருந்தாலும் இது பொருந்தாது.

இது நம்பிக்கையாக ஒரு கருத்தினை வெளிக்கொண்டு வரும் என்று நினைக்கின்றோம். உங்களுக்கு இருக்கும் அச்சத்தையும் தவிர்க்கலாம் என நினைக்கின்றோம். தொடர்ந்து எங்களின் ஊடகப் பிரிவுடன் தொடர்புகொண்டு தகவல்களையும் தேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். கல்வி, கலாசாரம் இன்னும் பல்வேறுபட்ட செய்திகளைப் பிரான்ஸின் தூதரகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பரப்பகுதி

45 வருட காலமாக நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்

ஒரே அட்சர கூட்டின் மகிமை

காரியம் கைகூட, சூனியமும் தேவதை குற்றமும் அகல, கலகம் தீர, கடன்தொல்லை அகல, வறுமை நிவர்த்தி பெற, வாத சேட்டை, மோகினி சேட்டை விலக, மாந்திரீக சித்தி உண்டாக, சாவ வசியம் பெற, கரும வினைகள் அகல, நோய் தீர, திரிபுர ஈஸ்வரி சித்திபெற, ஓடிப்போனவர் தேடி வர, தடைப்பட்ட திருமணம் நடைபெற, கூந்தல் அழகிகளாகத் திகழ, காதல் கைகூட, சித்தப் பிரமை, மனப்பயம், தூக்கமின்மை அகல, வெளிநாட்டுப் பிரயாணம் சரிவர, குழந்தைப் பேறு கிட்ட, எதிரிகள் ஒழிய, தொழில் விருத்தியடைய.......

இன்னும் எத்தனையோ பிரமிப்பூட்டும் நன்மைகளை ஒரே ஒரு அட்சரக் கூட்டை அணிவதன் மூலம் அடையலாம். திட்ட வட்ட மாந்திரீக சக்தி என்பதால் வாங்கும் பணத்திற்கு ரசீதும் காரியங்கள் நடைபெறும் தினத்தையும் வழங்குவதில் நாம் மட்டுமே முன்னணி வகிக்கின்றோம்.

இதோ எம்மிடம் நன்மை பெற்றவர்களின் சான்றுக் கடிதங்கள்

வணக்கத்துக்குரியவர்

சுவிஸிலிருந்து குணநாயகம் என்ன கூறுகிறார்.
(ஆடர் இல. 1299)

பிரபஞ்சத்தில் வணக்கத்துக்குரியவர்கள் வரையறுக்கப் பட்டுள்ளனர். அதற்குள் சாமி ஐயாவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதென்றால் அவரது உன்னதமும் உத்தமமும் வெளிப்படுகிறது. பெரும் வேதனையைச் சுமந்து நோய்களோடு அல்லற்பட்ட எனக்கு வாழ்வளித்து ஒரு உயிருள்ள மனிதனாக மாற்றிய பெருமை உங்களையே சாரும். நான் என்றும் ஸ்ரீ துர்க்கையின் அருளால் எனக்கு நல்ல சுகத்தைப் பெற்றுத் தந்த உங்களை கடவுளாகவே மதிக்கின்றேன்.

பக்குவ திலக பட்டம்

யாழ்நகர். என்.கே. தேவியின் நன்றி மடல்

நம்பி வந்தோரின் குறைதீர்க்கும் ஐயா! 1995 முதல் எங்கள் குடும்பத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த உங்களுக்கு "பக்குவ திலகம்" என்ற பட்டத்தை மனதார வழங்கிப் பாராட்டுகிறோம். எங்கள் ஊரில்தான் எத்தனை பேர் பணத்தையே குறியாகக் கொண்டு பத்தாயிரமும், படமும் தேவையென்று சொன்னபோது, எமது பிரச்சினைகளைப் பக்குவமாகக் கேட்டறிந்து, நம்பி வந்த எங்களை வாழவைத்து எனது கணவருக்குப் பதவியுயர்வு கிடைக்கச் செய்து எம்மிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்திய உங்கள் சேவை மேலும் தொடர வேண்டும். மக்கள் குறை தீர வேண்டும்.

- சொன்ன ஜாதகம் சொன்னபடி நடந்துவிட்டது.
- கைரேகை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டீர்கள்.
- நினைத்தபடி என் கூந்தல் வளர்ந்துவிட்டது.
- உங்கள் பரிகாரத்தால் நான் வெளிநாடு சென்றுவிட்டேன்.

- இப்படி எத்தனை எத்தனையோ சான்றுக் கடிதங்கள். நேரில் வந்து தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுங்கள்.

தங்கள் காரியங்கள் எத்தனையாம் திகதி சரிவரும் என்று 'கரண்டி' காட்டும் அனுப்பிவைப்போம். வாங்கும் பணத்துக்கு ரசீதும் வழங்குவோம். இது எமது நல்நோக்கத்தின் வெளிப்பாடேயாகும். எமது மாந்தீரிகப் பார்சல்களை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ நாமே நேரில் அங்கு வந்து ஒப்படைக்க அருகாமையிலுள்ள போன் இலக்கம், உங்கள் போன் இலக்கம் குறிப்பிட்டால் மட்டுமே இச் சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி
பேராசிரியர் டாக்டர். பி.கே.சாமி (J.D.G.A.N) J.P.

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
தொ.பே: 011-2470615, 011-2342463
Fax : 0094-112344831 - E-mail: drpksamy@sltnet.lk
No. 3, Daily Fair Complex, Nuwara - Eliya.
Tel : 052-2222508, 052-2235097.

தினமுரசு சந்தா விபரம்

சந்தாக் கட்டன அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.

நாடுகள்	ஒரு வருடம்	6 மாதம்	3 மாதம்
ஐரோப்பிய நாடுகள்	ரூ. 3500	ரூ.1750	ரூ.875
அமெரிக்கா, கனடா	ரூ. 4400	ரூ.2200	ரூ.1100
மத்திய கிழக்கு நாடுகள்	ரூ. 3100	ரூ.1550	ரூ.775
உள்ளூர்	ரூ. 1050	ரூ.525	ரூ.265

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net

ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON)

நீரிழிவு, ஆஸ்மா, முட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

NOTE: அடுத்த லண்டன் விஜயம். 27.03.2004, T.P. 07984803488.

காலம் : 20.02.2004 முதல் 24.02.2004 வரை

இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 585592, 581986.HOTLINE : 0777-602513.

பணிப்பெண்கள் - Housemaids

மலேசியா | சிங்கப்பூர்

சம்பளம் RM: — 500
ரூபா. — 13,000 முதல்

சம்பளம் S$: — 220
ரூபா. — 12,500 முதல்

மலேசியா, சிங்கப்பூரில் தமிழ் பேசும் / ஏனைய பணிப்பெண்களுக்கான ஏராளமான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தமிழ் பணிப்பெண்களுக்கு பாதுகாப்பான தமிழ் இல்லங்களிலேயே வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

நிபந்தனைகளும் விதிமுறைகளும்

மலேசியா
- வயது - 25 - 40 வரை

சிங்கப்பூர்
- வயது - 20 - 40 வரை
- உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம்
- சேவைக்காலம் இரண்டு வருடங்கள்
- இரு வழி விமான டிக்கட் இலவசம்

தமிழ் பணிப்பெண்களுக்கு முன்னுரிமை

இந்த விளம்பரத்தை கொண்டு வருபவர்களுக்கு விசேட சன்மானங்கள்

உங்களது பாஸ்போட், பாஸ்போட் அளவிலான 4 கருப்பு வெள்ளை புகைப்படங்கள், 6 வர்ண புகைப்படங்கள், போஸ்காட் அளவிலான 2 வர்ண புகைப்படங்கள் சகிதம் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு - I. L. M. AZAM 077-6101450

AL/742/Advt./13/2004

ட்ரான்ஸ் கல்ப் பிரைவேட் லிமிட்டட்

TRANS GULF T G L GROUP Since 1990

இலக்கம் 65, முதலாவது மாடி, ஹொஸ்பிடல் வீதி, கொழும்பு 01.
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)
தொலைபேசி இல: : (011)-4710036-40 பெக்ஸ்: (011)-2380015

உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாய் மாற்றிடும் நிரந்தர ஸ்தாபனம்

சக்தி எப்.எம்.முதலிடம்!

இலங்கை வானொலி வரலாற்றில் தமிழ் வானொலிகளுக்கிடையிலான போட்டித் தன்மை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. அந்த விதத்தில் ஒவ்வொரு ஊடகமும் மக்களிடையே எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளது என்ற ஆய்வும் இடம்பெற்று வருகின்றது. இந்த ஆய்வு பிரதேச ரீதியாகவும் மற்றும் நாடளாவிய ரீதியாகவும் நடைபெற்று வருகின்றது. அந்த விதத்தில் மிக அண்மையில் இலங்கையின் தரமான ஊடக ஆய்வுகளை மேற்கொள்கின்ற L.M.R.B. ஆய்வின்படி, நாடளாவிய ரீதியில் சக்தி எப்.எம். வானொலி அதிக நேயர்கள் கேட்கின்ற வானொலியாக, முதற்தர வானொலியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாடு முழுவதும் முதற்தர வானொலியாக சக்தி எப்.எம். தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கான காரணம் எமது நேயர்கள்தான். எனவே, அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்னும் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு சக்தி எப்.எம். நிகழ்ச்சிகளைத் தரத் தயாராகின்றது. அறிவிப்பாளர்களின் ஆக்கபூர்வமான வெளிப்பாடுகள், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் தன்மையினால் நேயர்களின் பாராட்டோடு சக்தி எப்.எம். முதற்தர வானொலியாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது. L.M.R.B.யின் ஆய்வில் பல்லாயிரக்கணக்கான நேயர்களின் வாக்கு சக்தி எப்.எம்.மிற்குக் கிடைத்துள்ளதை யிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆர்.பி. அபர்னா சுதன்.
சக்தி F.M.

2004-02-15 திகதிய "த சண்டே டைம்ஸ்" பத்திரிகையில் இராணுவ ஆய்வாளரான இக்பால் அத்தாஸ் எழுதிய ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரும் போர் நிறுத்தம் தொடர்கிறது !

கடந்த ஞாயிறன்று (08.02.2004) உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரையில் மிக இரகசியமாகப் பேணப்பட்டது என்று கூறப்படுகின்றபோதும் உண்மை அவ்வாறு இருக்கவில்லை. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் ஐந்து டாபண்டர் ரக வாகனங்கள் ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவருக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கியபடி அரசாங்க அச்சகத்துக்குச் சென்றபோது முதல் செய்தி கசிய ஆரம்பித்தது. கடந்த சனியன்று (07.02.2004) இரவு பாராளுமன்றம் கலைக்கப்படுவதாகவும் அடுத்த பொதுத் தேர்தல் ஏப்ரல் 2இல் இடம்பெறுமெனவும் ஊடகங்களுக்குச் செய்தி கிடைத்தது.

பெந்தோட்டை உல்லாசப் பயணிகள் விடுதியொன்றில் தங்கியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கூட தகவல் தெரிந்திருக்கவில்லை. மறுநாள் தாய்லாந்துக்கு விஜயம் செய்யவிருந்த தனது திட்டத்தை இரத்துச்செய்துவிட்டு கட்சி முக்கியஸ்தர்களுடன் ஆலோசனைகளில் ஈடுபட்டார். இந்த முக்கிய அரசியல் திருப்பமானது ஏற்கெனவே ஸ்தம்பித்துப்போயுள்ள சமாதான முன்னெடுப்புக்களின் மீது பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தும் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. இந்த முன்னெடுப்புக்களின் விளைவாகவே கடந்த இரு வருடங்களாக வடக்கு - கிழக்கு போர்முனைகளில் காணப்படும் அமைதிநிலை எதிர்வரும் ஞாயிறுடன் இரு வருடங்களைப் பூர்த்தி செய்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களும் தத்தம் பதவிகளைத் துறக்கலாமென்ற அச்சம் முதலில் காணப்பட்டது. 2001 பொதுத் தேர்தலில் மக்கள் ஜக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆறு வருடங்கள் ஆட்சி புரிவதற்காக வழங்கிய ஆணையை இரு வருடங்களுக்குள் முடிவு கட்டியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இதனைச் செய்யத் திட்டமிடப்பட்டது. எனினும், இத்தகையதொரு செயற்பாட்டைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்வாரேயானால் அது புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டைப் பெரிதும் பாதிக்கும் என்ற சந்தேகம் மேலோங்கியது. எனினும், மீண்டும் போர் வெடிப்பதற்கான ஏதுநிலை காணப்படாதபோதும், போர் நிறுத்தத்தைப் பேணுகின்ற ஒரே ஒரு கருவியாக போர் நிறுத்த உடன்பாடு பிரதமரும் அவரது அமைச்சரவையும் பதவி துறந்தால் கேள்விக்கு உள்ளாகலாம். ஆனால், இப்போது அத்தகைய சூழல் இல்லை.

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலைப் பிரகடனம் செய்த ஜனாதிபதியின் செயற்பாடு நாட்டு மக்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது. இதனால் போர் நிறுத்த உடன்பாட்டின் எதிர்காலம் குறித்தும் பலவிதமான சந்தேகங்கள் தோன்றின. எனினும், அது தொடர்ந்து பேணப்படுமென்ற உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்த உடன்படிக்கையை மீளப் புதுப்பிக்கும்படி விடுத்த கோரிக்கையையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக மீளவும் நியமனம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் பியூறு ஹொவ்டேயைச் சந்தித்துப் பேசியபோது ஜனாதிபதி இதனைச் செய்துள்ளார். போர் நிறுத்த உடன்பாட்டைக் கண்காணிப்பதற்காக ஒரு குழுவை நியமிக்கும் யோசனையை அவரிடம் ஜனாதிபதி வெளியிட்டு அவரது இணக்கப்பாட்டையும் வென்றுள்ளார். இந்தக் குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், முப்படைகளினதும் தளபதிகள் ஆகியோருடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் அமைக்கப்பட்ட சமாதான செயலகப் பிரதிநிதி ஒருவரும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மூத்த பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படவுள்ளனர். இக் குழுவினர் ஒழுங்காகவும் ஆக்கபூர்வமாகவும் சந்தித்துப் பேசுவது மட்டுமன்றி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தகவல்களை வழங்குவதும் கட்டாயமானதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரொண்ட் பியூறு ஹொவ்டே புலிகளுக்கு வீளக்கம் அளிக்க இருக்கின்றார். இந்தக் குழு இப்போதுள்ள நிலையில் ஏப்ரல் 2ஆம் திகதிய தேர்தல் நடந்து முடியும் வரை தொடர்ந்து செயற்படும்.

போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேணுவது எனவும் வெற்றி பெறும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயார் எனவும் புலிகள் வாக்குறுதி வழங்கியுள்ளனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் தொடர்வதற்கும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பேணவும் புலிகள் வாக்குறுதி வழங்கியுள்ளமையானது, ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்குக் கிடைத்துள்ள ஒரு வெற்றியாகும்.

புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கருணாவை மட்டக்களப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் பியூறு ஹொவ்டே சந்தித்துப் பேசியபோதும் புலிகளின் இந்த வாக்குறுதி மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக் காரணங்களுக்காக ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் பாதுகாப்பு அமைச்சு கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் பியூறு ஹொவ்டே பாதுகாப்புப் படைகளின் தளபதி லெப்.ஜெனரல் பலகல்லவுடனும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாப்பது குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். இதன்போது பெப்ரவரி 10ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் 1046 சந்தர்ப்பங்களில் போர் நிறுத்த உடன்பாட்டை புலிகள் மீறியிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவற்றில் 617 சம்பவங்கள் போர் நிறுத்த உடன்பாட்டு மீறல்களே எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கண்டறிந்துள்ளது. 426 சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன. பொதுமக்கள் கடத்தப்பட்டமை, சிறுவர்கள் படையணிகளுக்குச் சேர்க்கப்பட்டமை, படையினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முகாம் அமைக்கும் முயற்சிகள், புலி உறுப்பினர்கள் ஆயதபாணிகளாக நடமாடுவது என்பன போன்ற சம்பவங்களிலேயே போர் நிறுத்த மீறல்கள் இடம்பெற்றிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கொலைகள், படையினர் கடத்தப்பட்டமை, பொதுமக்கள் கடத்தப்பட்டமை, பொதுமக்கள் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேணியபடியே ஜனாதிபதி ஏறத்தாழ தனது முழு நேரத்தையும் அரசியல் செயற்பாடுகளுக்கு ஒதுக்கியுள்ளார். அத்துடன் பாதுகாப்புத் துறைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் குறித்தும் நெருக்கமாக அவதானித்து வருகின்றார்.

'சண்டே டைம்ஸ்' கடந்த வார ஆய்வில், பாதுகாப்புச் சபையின் அமர்வுகளில் ஜனாதிபதி என் கலந்துகொள்ள முடியாமல் இருக்கின்றார் என்பதை விளக்கி இருந்தது. அதில் பாதுகாப்பு அமைச்சர் அல்லது பாதுகாப்பு பிரதி அமைச்சர் கலந்து கொள்ளாமல் இருக்கின்ற நிலைமை பாதுகாப்புச் சபையின் நடவடிக்கைகளை எவ்விதம் பாதிக்கிறது என்பதும் தெளிவாக வீளக்கப்பட்டிருந்தது. தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் முப்படைகளின் தளபதிகளையும் ஒவ்வொரு வாரமும் தவறாமல் சந்தித்து அவர்களுக்குள்ள அவசர அவசியத் தேவைகள் பற்றிக் கேட்டறிந்து நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய முதலாவது சந்திப்பு கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது. இதன் பின்னர் அவர் ஜனாதிபதியை நேரில் சந்தித்து வீளக்கம் அளித்துள்ளார். இந்த நடைமுறை ஏப்ரல் 2இல் பொதுத் தேர்தல் நடைபெற்று முடியும் வரையில் தொடரும் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கூட்டமைப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சில் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் இடம்பெறலாம். இதில் இராணுவ தளபாடங்கள் கொள்வனவுகளின்போது இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பான வீடியங்கள் முன்னுரிமை பெறலாம். சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணி ஜே.வி.பி. யும் அமைத்துள்ள கூட்டமைப்பு இரு முக்கிய ஆவணங்களை மக்கள் முன் சமர்ப்பித்துள்ளது. அரசியல் இலக்குகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை முதலாவது ஆவணம். மற்றது, நல்லாட்சி நிலைபெறுவதற்கான ஐந்து முக்கிய கோட்பாடுகள்.

எனவே, போர் நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் பேணப்படுகின்ற நிலையில் எதிர்வரும் வாரங்களில் அரசியல் கள நிலைவரங்கள் சூடுபிடிக்குமென எதிர்பார்க்கலாம். இதில் குறிப்பிடக் கூடிய வீடயம் என்னவென்றால், ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயார் என்று புலிகள் பிரகடனம் செய்துள்ளமை ஆகும். எனவே, ஆகக் குறைந்தது ஏப்ரல் 2இல் தேர்தல் நடைபெறும் வரையில் இலங்கையில் அமைதி நிலவும். அரசியல் களத்தில் வெற்றி பெறப்போவது யார் என்பதுதான் எதிர்பார்ப்பாகவுள்ளது.

> "போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேணுவது எனவும் வெற்றி பெறும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயார் எனவும் புலிகள் வாக்குறுதி வழங்கியுள்ளனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் தொடர்வதற்கும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பேணவும் புலிகள் வாக்குறுதி வழங்கியுள்ளமையானது, ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்குக் கிடைத்துள்ள ஒரு வெற்றியாகும்."

நன்றி : த சண்டே டைம்ஸ்
இக்பால் அத்தாஸ்.

○

கவிஞர் வாலி எழுதுகிறார்!

–வாழ்க்கை சரிதம்–

"சரி...கதையை மாற்றி எழுதி நாளைக்குக் கொண்டுவருகிறேன்...." என்றேன் நான்.

"இல்லை இல்லை...இங்கேயே உட்கார்ந்து மாற்றி எழுதிக் கொடுங்கள்..." என்று பேனாவையும், பேப்பரையும் எனக்கு முன்னால் வைத்தார் அந்த அதிகாரி.

அரை மணி நேரம், அங்கேயே அமர்ந்து அந்தக் கதையை அவர் விரும்பிய வண்ணம் மாற்றி எழுதிக் கொடுத்தேன்.

படித்துவிட்டு அவர் சொன்னார் :

"இப்போது நீங்க, மாத்திக் கொடுத்ததை நான் ஒலிபரப்பப் போறதில்லை...ஒரிஜினலா நீங்க தபால்ல எழுதி அனுப்பினதைத்தான் ஒலிபரப்பப் போறேன்."

"ஏன் சார்" என்று நான் கேட்டேன்.

வாலி!....தபாலைப் பிரிச்சு உங்க கதையைப் படிச்சதும், நான் திகைச்சுப் போயிட்டேன். இவ்வளவு அற்புதமான நடையிலே ஒரு சிறுகதையை நான் இது வரைக்கும் படிச்சதில்லே....இது, நீங்களா எழுதினதுதானான்னு சோதிச்சுப் பார்க்கத்தான், உங்களை இங்க வரவழைச்சு, பிற்பகுதியை மாத்தி எழுதச் சொன்னேன். இப்ப நீங்க எழுதிக் கொடுத்ததிலேயும், அதே நடை அமர்க்களமா அமைஞ்சதைப் பாத்தப் புறம்தான், இது உங்க சொந்தக் கதைன்னு நான் தீர்மானம் பண்ணேன்....இவ்வளவு நாள் என்னய்யா பண்ணிக்கிட்டிருந்தீங்க?" என்று அவர் என்னை ஆரத் தழுவி ஆதரவாகப் பேசினார்.

அந்த அதிகாரியின் பெயர் திரு.ஏ.ஏ.ஹக்கீம். சென்னை வானொலி நிலையத்தின் அதிகாரியாகப் பணிபுரிந்து பின் ஓய்வு பெற்றார்.

மேற்கண்டவாறு எனக்கு ஒரு பரீட்சை வைத்து அவர் என்னைச் சோதனை செய்ததைப் பிற்காலத்தில் அவர் தனது வாழ்க்கை வரலாற்றைத் தினமணி கதிரில் தொடராக எழுதி வந்தபோது குறிப்பிட்டிருக்கிறார்.

திரு.ஹக்கீம் அவர்கள் மிகச் சிறந்த பண்பாளர். நல்ல தமிழறிஞர். வானொலி நிலையங்களில் பல உயர்ந்த பதவிகளையெல்லாம் வகித்தவர். அமரராகிவிட்ட தன் தகப்பனாரை மீடியம் மூலம் வர வழைத்துப் பேசும் ஆற்றலெல்லாம் அவரிடத்தில் இருந்தது. சென்னை வானொலி நிலைய அதிகாரியாக அவர் இருக்கும்போதும், என்னைச் சந்திக்க விரும்பி அவ்வப்போது தொலைபேசியில் அழைப்பார். அனேகமாக நான் அவரைச் சந்தித்தபோதெல்லாம், என் நண்பர் திரு.ஜெயகாந்தனும் அவருடன் இருப்பார்.

"மிஸ்டர் ஜே.கே! வாலி இன்னிக்குப் பிரபலமான சினிமாக் கவிஞர்.... ஆனா..ஆரம்பத்திலே, இவருக்குப் பரீட்சை வெச்சவன் நான்" என்று



ஜெயகாந்தனிடம் என்னைப் பற்றிச் சொல்லி, வாய் நிறைய தாம்பூலம் மணக்கப் புன்னகைப்பார்.

'வராளி வைகுண்டம்' கதை ஒலிபரப்பானதும், ஒருநாள் திருச்சி வானொலி நிலையத்திற்குச் சென்றிருந்தேன்.

'கந்தசாமி!....இவர்தான் நான் சொன்ன வாலி....' என்று என்னை ஒருவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார் திரு.ஹக்கீம்.

"பலே உமக்குத் தமிழ் நல்லா வருதுய்யா...எழுதும் எழுதும்...எழுதிக் கொண்டேயிரும்...." என்று என் முதுகில் தட்டி பாரதியார் போல் கம்பீரமாகச் சிரித்தார் அந்தக் கந்தசாமி.

அவரையே என் மானசீகக் குருவாக நான் ஏற்றேன். அடிக்கடி திரு.கந்தசாமியை திருச்சி பீமநகரில் இருந்த அவர் வீட்டில் சந்திப்பேன். உடன் பிறந்த தம்பி போல் அவர் என் மீது அன்பைப் பொழிவார். நான் நிறையப் பாடல்கள் எழுத வேண்டும் கவிதைகள் எழுத வேண்டும் என்றெல்லாம் என்னை உசுப்பிவிட்டு என்னையும், என் எழுத்தையும் நெறிப்படுத்தியவர் திரு.கந்தசாமி. கந்தசாமியின் சகோதரர் திரு.சங்கரமூர்த்தியும் நானும் சம வயதினர். எனவே, நானும் சங்கரமூர்த்தியும், மேடை நாடகங்களைப் பற்றி நிறையப் பேசுவோம். சங்கரமூர்த்தி எழுதிய "என்ன தவம் செய்தேன்" என்ற நாடகத்தை நான் படித்து ஆலோசனைகள் சொன்னதெல்லாம் உண்டு. திரு.மீ.ப.சோமசுந்தரத்திற்கு சங்கரமூர்த்தி தத்துப்பிள்ளை மாதிரி திரு.சோமு அவர்கள் நடத்திய "நண்பன்" என்னும் பத்திரிகையில் சங்கரமூர்த்தி நிறைய எழுதியிருக்கிறார்.

திரு.கந்தசாமியும், அவர் தம்பி சங்கரமூர்த்தியும் என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகவே ஏற்றுக் கொண்டு, "நீ இன்னொரு பட்டுக்கோட்டை மாதிரி வருவேய்யா..." என்றெல்லாம் பேசி என்னை குஷிப்படுத்தியிருக்கிறார்கள்.

திரு.சங்கரமூர்த்தி, இருபது ஆண்டுகாலமாக லண்டன் பி.பி.சி.யில், "தமிழோசையில், மிகப் பெரிய அதிகாரியாகப் பணி புரிந்துகொண்டு லண்டன் வாசியாகவே ஆகிவிட்டார்.

திரு.கந்தசாமி, வானொலி நிலையத்தின் மிக மிக உயர்ந்த பதவியிலிருந்து விட்டு ஓய்வு பெற்று தற்போது நாகர் கோவிலில் வசிக்கிறார் என்று எண்ணுகிறேன்.

நான் சொல்லும் திரு. கந்தசாமிதான், 'துறைவன்' எனத் தமிழ் கூறும் நல்லுலகால் போற்றப்படும் கவிஞர் பெருந்தகை; என்னை ஆளாக்கிய குருநாதர்.

அவர் எல்லாருக்கும் துறைவன் எனக்கு இறைவன்.

துறைவன் அவர்கள் திருச்சி வானொலியில் பணியாற்றிய பொழுது, என்னை Contract Casual Artiste ஆகப் பணியில் அமர்த்திவிட்டார்.

(தொடரும்....)



Belmarsh – நரகம்

முதல் நாள் - வியாழன், 19 ஜூலை 2001
12.07 pm

'உமக்கு நாலு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது" – நீதிபதி திரு.பொட்ஸ் (Potts) தனது ஆசனத்தில் அமர்ந்தவாறே கீழே பார்க்கிறார். அவரது மகிழ்ச்சியை அவரால் மறைக்க முடியவில்லை. என்னை அழைத்துப் போகும்படி ஆணையிடுகிறார்.

தீர்ப்பு வாசிக்கப்படும் போது என்னருகில் அமர்ந்திருந்த காவல் அதிகாரி எனது இடது பக்கத்தில் இருந்த ஒரு கதவைச் சுட்டிக் காட்டுகிறார். அது எனது வழக்கு நடந்துகொண்டிருந்த ஏழு வாரங்கள் வரை திறக்கப்பட்டிருக்கவில்லை. நான் திரும்பி எனது மனைவி மோரியை நோக்கினேன். அவள் நீதிமன்ற அறையின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். தலை பணிந்து முகம் வாடியிருந்தது. எனது மகன் அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தான்.

நீதிமன்ற அதிகாரி ஒருவரைச் சந்திப்பதற்காகவேண்டி நான் அழைத்துச் செல்லப்பட்டேன். இப்படியாக படிவங்களைப் பூர்த்தியாக்கும் முடிவற்ற வேலையைத் தொடங்கினேன். பெயர்? ஆச்சர். வயது? 61. நிறை? 178 இறாத்தல். அவரிடம் நான் கூறினேன்.

"அதை Stones இல் கூறுங்கள்" – சிறை அதிகாரி அதிகாரத்துடன் கேட்கிறார். Stones என்பது 14 இறாத்தல் கொண்ட ஓர் அளவை.

"12 Stones 10 இறாத்தல்" நான் பதிலளித்தேன். இன்று அதிகாலை உடற் பயிற்சிக் கூடத்தில் வைத்து எனது நிறையை நான் பார்த்தேன்.

"தங்களுக்கு நன்றி"

அந்தப் பத்திரத்தில் கையெழுத்திடும்படி என்னைக் கேட்டார்.

இன்னுமொரு சிறைக்காவல் அதிகாரி கைதிகள் மத்தியில் "நீர் எலிகள்?" (Water rats) என்ற பேர் எடுத்தவர்.

க்ரீம் வர்ணம் பூசப்பட்ட, செங்கல் பதிக்கப்பட்ட ஒரு நீண்ட தாழ்வாரத்தினூடாக என்னை அழைத்துச் செல்கிறார். 'எங்கே போகிறேன்' என்று எனக்குத் தெரியவில்லை.

"உங்களுக்கு எத்தனை வருடத் தண்டனை?" – அவர் கேட்கிறார்.

"நாலு வருடங்கள்" – நான் பதிலளிக்கிறேன்.

"அவ்வளவு மோசமில்லை. இரண்டு வருடங்களில் வெளியே வந்துவிடலாம்" ஏதோ இரு வாரங்கள் ஓர் உல்லாச விடுதியில் கழிப்பதைப் பற்றிக் கதைப்பது போல் அவர் சொல்கிறார்.

அதிகாரி ஓர் இடத்திற்கு வந்ததும் நிற்கிறார். ஒரு பெரிய உருக்குக் கதவைத் திறந்து என்னை ஒரு சிறு அறையினுள் தள்ளுகிறார். அந்த அறை பத்தடி நீளமும் ஐந்தடி அகலமும் கொண்டது. க்ரீம் வர்ணச் சுவர். ஒரு நீண்ட வாங்கு போடப்பட்டிருந்தது. கடிகாரமில்லை. காலம் பற்றிய உணர்வு இல்லை. சிந்திப்பதைத் தவிர வேறு ஏதும் இல்லை. சுவரில் கிறுக்கப்பட்ட செய்திகளைத் அதைத் தவிர வேறு ஏதும் காண்பதற்கு இல்லை.

இங்கே இருப்பது ஹெரி. எல்லா நீதிபதிகளையும்.....வேண்டும்
ஜிம் டெக்ஸ்டர் அப்பாவி. Ok!

ஒரு திறப்பு பூட்டைத் திறக்கிறது. பாரமான கதவு திறக்கிறது. அந்தக் காவல் அதிகாரி மீண்டும் வந்தார். "உங்களது வழக்கறிஞர்கள் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" அவர் அறிவித்தார். நான் மீண்டும் கீழே நீண்ட தாழ்வாரத்தினூடாக அழைத்துச் செல்லப்பட்டேன். ஒவ்வொரு கொஞ்ச தூரத்துக்கும் கேட்டுகள் திறந்து மூடப்படுகின்றன. எனது சிறைக் கூண்டைவிடச் சற்றே பெரியதொரு அறைக்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே எனது சட்டத்தரணிகளான நிக்கலஸ் பர்னல் Q.C.உம், அவரது ஜூனியர் அலெக்ஸ் கமரனும் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

"நாலு வருடங்கள் என்றால் அது இரண்டு தான்" என்று நிக் எனக்கு விளங்கப்படுத்துகிறார். நீதிபதி திரு. பொட்ஸ் எனக்குரிய தண்டனையை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்திருந்தார். (Custodial Sentence) ஆகவே என்னால் பெரோலில் வெளியே வருவதற்கு மேன்முறையீடு செய்ய முடியாதிருந்தது என்பதை நீதிபதி நன்கு அறிந்தே இருந்தார்.

ஆயினும், எனது சட்டத்தரணிகள் சார்பில் மேன்முறையீடு செய்வார்கள். பொட்ஸ் தனது அதிகாரத்தை அளவுக்கு அதிகம் பாவித்திருக்கிறார் என்றே அவர்கள் கருதினார்கள். சட்டத்தரணி ஜில் க்ரே Q.C. எனது நெடுநாள் நண்பர். என்னை ஏற்கனவே எச்சரித்திருந்தார். ஜூரி ஐந்து நாள்களாக இல்லை. மேலும் என்னைக் காத்துக்கொள்வதற்காகவேண்டி நான் சாட்சிக் கூண்டில் ஏறவும் இல்லை. ஆகவே, மேன்முறையீடு என் சார்பில் கிட்டாது போகவும் கூடும்.

(வக்கங்கள் வளரும்)

பாலியல் ரீதியிலான செய்திகளை அப்பட்டமாக வெளிப்படுத்தி வருகின்ற இணையத் தளங்கள் (Pronographic Web Sites) இன்று உலகின் எந்தவொரு நாட்டிலும் பிரபல்யமாகியுள்ளன. அண்மையில் பாகிஸ்தான் இதனை தடைசெய்துள்ளதாக அறிவித்துள்ளது. இதனால் இத்தளத்தினுள் நுழையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இன்று உலகில் இந்த இணையத் தளத்தினுள் தங்களது இன்பங்களைத் தேடிக்கொள்ளும் ஆண்களும் பாடசாலை மாணவிகளும் எண்ணிக்கை அடிப்படையில் அதிகரித்து வருகின்றனர் என்றே புள்ளி விபரங்கள் கூறுகின்றன. "இவ்வாறான இணையத் தளங்களைப் பார்த்து எங்களது ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுகின்றோம். இது மகிழ்ச்சியாகவும் அதே நேரம் பாதுகாப்பாகவும் இருக்கிறது. இதனால் எவருக்கும் இடைஞ்சல்கள் ஏற்படுவதுமில்லை. ஆகவே, இதனைத் தடைசெய்யக் கூடாது என்ற வாதம் பாகிஸ்தானில் கூட முன் வைக்கப்படுமளவுக்கு இத் தளம் பிரபல்யமாகியுள்ளது.

பொதுவாகவே ஆசிய நாட்டு மக்கள் பெண்களை மனிதர்களாக இனங்கண்டு நடத்துவதில்லை என்றும் வெறும் பாலியல் கருவியாகக் கொண்டே பாவித்து வருவதாகவும் கூறும் முன்னணிப் பெண்கள் அமைப்புகள், இவ்வாறான சமூகத்தில் பெண்கள் சுயமான பாலியல் இன்பங்களை அனுபவிக்க இந்த இணையத் தளங்களைப் பயன்படுத்தி வருவதாகவும் சுட்டிக் காட்டுகின்றன. அறிவுசார் பெண்கள் மற்றும் விதவைகள், பாடசாலை மாணவிகள் என பலதரப்பட்டவர்கள் இந்த இணையத் தளத்தின் மீது அதீத காதல் கொண்டிருப்பதாகவும், ஆப்கானிஸ்தானின் தேச எல்லைக்கு அருகில் உள்ள வட – மேற்கு பகுதிகளில் இதனது பயன்பாடானது அதி வளர்ச்சி பெற்றிருந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த இணையத் தள சேவை ஆப்கானில் பெண்களிடையே பெரும் வரவேற்பைப் பெற முக்கியமானதொரு காரணம் இருந்தது.

அதாவது, ஆப்கானில் தலிபான்களது ஆட்சி ஏற்பட்டதன் பின்னர் இசை, நடனம், கேளிக்கைகள், சினிமா போன்ற அனைத்துப் பொழுதுபோக்கு அம்சங்களும் தடை செய்யப்பட்டன. பெண்களது கல்வி மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் கூடத் தடைசெய்யப்பட்டன. ஆண் துணையின்றி பெண்களால் தனித்து நடமாடக்கூட இயலாத நிலை தோன்றியது. இக் காலகட்டத்தில் தனிமையில் விடப்பட்ட பெண்கள், தங்களது தனிமையைப் போக்கிக் கொள்ளும் முகமாக நாடிய ஒரே துணை இந்த இணையத் தளங்களாகும்.

"இணையத் தளங்களை நாடி எங்களது ஆசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் எங்களுக்கு உண்டு. இதனால் எந்தவிதமான பாதிப்புகளோ, அச்சமோ எங்களுக்குக் கிடையாது" 'என்கிறார். NWFP பல்கலைக் கழக சமூக விஞ்ஞானத் துறை மாணவியான அயேஷா என்பவர்.

ஆண்களைப் போல் வயது வந்தவர்களுக்கு மட்டும் சீ.டி. தட்டுக்களையோ, வீடியோ கெசெற் களையோ வாங்க கடைகளுக்குச் செல்ல பெண்களால் இயலாது. என்ற காரணத்தையும் அயேஷா முன்வைக் கின்றார். வெட்கம் காரணமாக பெண்களால் அவ்வாறு செல்ல இயலாது எனக் கூறும் அவர், இவ்வாறான இணையத் தளங்கள் தடைசெய்யப்படுவதால் பெண்களைப் புனிதர்களாக்க முடியாது என்றும் அவர்கள் வெட்கத்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்றும், அவர் தனது கருத்துக்களை முன் வைக்கின்றார்.

(Ceber Sex) சைபர் செக்ஸ் எனப்படுகின்ற இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிய நாட்டுப் பெண்கள் தங்களது கருத்துக்களை இவ்வாறு முன் வைக்கின்றனர்.

குடும்பப் பெண்ணான ஜமாலியா என்பவர், தான் இவ்வாறான இணையத் தளங்களை நாட நேரிட்டது, தனது குடும்ப வாழ்க்கை சரிவர அமையாததன் காரணத்தால் என்கிறார். தனது கணவன் வியாபார நடவடிக்கைகள் காரணமாக பதற்றமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகவும், இதனால் தங்களிடையேயான பாலியல் தொடர்புகள் மிகக் குறைவானது என்றும் அவர் கூறுகின்றார். அவர் இது தொடர்பில் அதிக விருப்பங் கொண்டவர் அல்ல என்றும் தெரிவிக்கும் ஜமாலியா, இதன் காரணமாகத் தான் சைபர் செக்ஸ் வாயிலாக இன்பம் காண்பதாகவும் வயது வந்தவர்களுக்கு மாத்திரமான (xxx) சீ.டி. களை இரகசியமாகத் தருவித்தும் பார்த்து சுகம் காணுவதாகும் கூறுகின்றார்.

"இது எனது பொழுது போக்காகும். எனது கணவர் நல்லவர். எனினும் அவரது செயற்பாடுகளால் நான் முழுமையான திருப்தி காண்பதில்லை. இதனால் இணையத் தளத்தின் மூலமான எனது கனவுலகில் இருக்கின்ற வீர, வீராங்கனைகளுடன் வாழ நான் பழகிக்கொண்டேன்" என்கிறார் முன்பள்ளி ஆசிரியையான பாரா என்பவர்.

இதேநேரம், 15 வயதுடைய 10ஆம் ஆண்டு கல்லூரி மாணவியான நிஷா, தனது காதலனால் அறிமுகப்படுத்தப்படும் இணையத் தளங்களைப் பார்த்துப் பொழுதைப் போக்குவதாகவும் தனது காதலன் மூலம்தான் இதைனைப் பழக்கப்படுத்திக் கொண்டதாகவும் கூறுகின்றார். உடலால் எதுவிதமான உறவுகளும் கொண்டிராத இவர், தனது தாயும் இதே நாட்டம் கொண்டவர் என்றும் அவரிடம் இது தொடர்பான சஞ்சிகைகள், சீ.டி.க்கள் இருப்பதாகவும், இதனால் தான் வெட்கப்பட வேண்டிய தேவையில்லை என்றும் கூறுகின்றார்.

பெண்கள் இவ்வாறான இணையத் தளங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைவதானது தவறல்ல என்றும் உலகில் பெண்களும் – ஆண்களும் எதிலுமே சமமானவர்கள் எனத் தொலைக் காட்சிகளும், இணையத் தளங்களும் நிரூபித்து வருகின்றன என்றும் கூறுகிறார், இஸ்லாமாபாத் ரெலிகொம் நிறுவன முகாமையாளரான ரமணா என்பவர்.

ஆண்களைப் போன்றே பெண்களும் இந்த இணையத் தளங்களில் என்னதான் இருக்கின்றன என அலசிப் பார்க்கிறார்கள். சில பெண்கள் தங்களது நிஜ வாழ்க்கையில் அநுபவிக்காத இன்பங்களை இதன் மூலம் பெற முயல்கின்றனர். அது போன்றே உலகப்புகழ் பெற்ற பாலியல் ரீதியிலான சஞ்சிகைகளான Play boy மற்றும் Hustler போன்றவற்றை வாங்க அதிகக் கூடிய விலை கொடுக்க வேண்டும். அந்த நிலை இதில் கிடையாது என்றும் ரமணா கூறுகின்றார்.

–பாரூக்

சமாதானத் தீர்வை எதிர்பார்க்கும் மக்களின் கோபாவேசம் வெளிப்படலாம்

கட்சியின் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 5.3.2003 அன்று பாராளுமன்றத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

1987ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட ஈ.பி.டி.பி.யினராகிய நாம் இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பின்னர் ஆயுதங்களை ஒப்படைத்துத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழியில் நிரந்தரமான அரசியல் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் என்றும் பேச்சுவார்த்தைகளை, அரசியல் தீர்வு முயற்சிகளை ஊக்குவித்தவர்களே தவிர, தடையாக இருந்தவர்கள் அல்லர். இன்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அரசியல் தீர்வில் நம்பிக்கை வைத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளதை நாம் முழு மனதோடு வரவேற்கின்றோம். தொடர்ந்து எடுக்கப்படும் முயற்சிகளும் வெற்றியடைய வேண்டுமென நாம் மனதார விரும்புகிறோம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தின் அனர்த்தங்களால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் மக்களுக்கு இச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு விடிவு ஏற்படுமென்றால் மகிழ்ச்சியடைபவர்களில் நாமும் முதலாவது இடத்திலிருப்போம்.

ஆனால், கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகளிலோ அன்றி ஜனநாயக வழிமுறைகளிலோ நம்பிக்கையில்லாமல் பேச்சுவார்த்தைகளை யார் குழப்பினார்கள் என்பதை இந்த நாட்டு மக்களும் இங்குள்ள இராஜதந்திரிகளும் சர்வதேச உலகமும் நன்கு அறிவார்கள்.

கடந்த காலங்களில் பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம் போன்ற காலகட்டங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய புலிகள், தம்மை இராணுவ ரீதியாகப் பலப்படுத்த முயற்சித்தனரேயன்றி நிரந்தரமான அரசியல் தீர்வை எட்டுவதற்கு அவர்கள் நேர்மையாகச் செயற்படவில்லை. மக்கள் சமாதானத் தீர்வுக்குக் காட்டிய ஆதரவைக்கூட அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பதுதான் கடந்த கால வரலாறு.

கடந்த கால அனுபவங்களில் இருந்து இன்றும்கூட புலிகள் பேச்சுவார்த்தைகளிலோ அன்றி அரசியல் தீர்வுகளிலோ பூரண நம்பிக்கை வைத்து சமாதான முயற்சிக்கு முன்வரவில்லை. 2001 செப்டம்பர் 11ஆம் திகதி அன்று அமெரிக்க நகரங்கள் மீது பின்லேடன் குழுவினர் தாக்குதல் நடத்தியதற்குப் பிறகு ஏற்பட்ட சர்வதேச நிலைமைகளால் பலவீனப்பட்டுள்ள புலிகள், காலம் கடத்தும் தந்திரோபாயமாகத்தான் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகளை மேற்கொள்கின்றார்களா என நாம் சந்தேகக் கண்களோடு பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஏனெனில், கடந்தகால வரலாறு தருகின்ற படிப்பினை அது. ஈழ தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற பெயரில் போராளி அமைப்புக்கள் கூட்டுச் சேர்ந்தபோது சிறீசபாரத்தினம், பத்மநாபா, பாலகுமார் ஆகியோருடன் பிரபாகரன் நேரில் வந்து கலந்துகொண்டு கையொப்பமிட்டார். அதன் பிறகு என்ன நடந்தது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நன்கறிவர். இந்த அமைப்புக்களின் போராளிகள் சுட்டுச் சரிக்கப்பட்டதுடன், வீதிகளில் உயிருடன் எரிக்கப்பட்டதும் கையொப்பமிட்ட தலைவர்கள் கொல்லப்பட்டதும் வரலாறாகிவிட்ட விடயம்.

அதேபோல புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர்களாகிய ராஜீவ் காந்தி முதல் பிரேமதாச வரை பல தலைவர்களுக்கு என்ன பரிசு கிடைத்தது என்பதையும் எல்லோரும் நன்கறிவர். இதற்கு ஜனாதிபதி சந்திரிகாவும் தலைவர் திரு. சிவசிதம்பரமும் கூட வாழும் சாட்சிகள் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. எனவே, இத்தகையதொரு நீண்ட பட்டியலில் இன்றைய பிரதமரும் இடம்பெற்றுவிடக் கூடாது என்பதே எமது உளமார்ந்த அக்கறையாகும்.

புலிகள் கடந்த காலங்களைப் போலல்லாமல் இன்று கனிந்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கு வழிவகுக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் சமாதானத் தீர்வை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மக்களின் கோபாவேசத்திற்கு உள்ளாவார்கள்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தின் அனர்த்தங்களால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் மக்களுக்கு இச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு விடிவு ஏற்படுமென்றால் மகிழ்ச்சியடைபவர்களில் நாமும் முதலாவது இடத்திலிருப்போம்.

அரசியலில் எம்மைச் செயலிழக்க வைக்கும் முயற்சிகள் :

சமாதான முயற்சிகளுக்கு ஈ.பி.டி.பி.யினராகிய நாம் எந்தக் கட்டத்திலும் தடையாக இருக்கமாட்டோம் என்பதை மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம். ஆனாலும், எம்மை அரசியல் ரீதியில் செயலிழக்கவைக்கும் நோக்குடன் புலிகளும் அவர்களின் தயவில் அரசியல் நடத்துபவர்களும் செயற்பட்டு வருகின்றனர். உண்மையிலேயே அவர்களுக்கு சமாதானத் தீர்வில் உறுதியான நம்பிக்கை இருக்குமென்றால் அது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் அவர்கள் செயற்படமாட்டார்கள்.

தென்னாபிரிக்க நாட்டில் கறுப்பு இன மக்களால் நிறவெறிக்கு எதிராக நடாத்தப்பட்ட போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, பேச்சுவார்த்தை மூலம் நிரந்தர அரசியல் தீர்வை நிலைநாட்டுவதற்கு அவர்கள் முயற்சித்தபோது, சகல கட்சிகளையும் அங்கீகரித்து, சகல இனக் குழுக்களையும் அங்கீகரித்து, அவர்கள் எல்லோரும் தமது கருத்துகளை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததோடல்லாமல், முதன் முதலாக அமையப்போகின்ற அரசாங்கத்தில் சகலருக்கும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் முடிவு செய்தார்கள்.

எதிரும் புதிருமாக இருந்த நெல்சன் மண்டேலாவும் Incantha Freedom Party தலைவரான புத்தலேசி போன்ற அனைவரும் அரசாங்கத்தில் பங்கெடுக்க வழிசமைத்து அங்கு சமாதானம் நிலைநாட்டப்பட்டது.

இங்கோ, பாதுகாப்பிற்காக நாம் வைத்திருக்கும் ஆயுதங்களைப் பிடுங்க வேண்டும் என்கிறார்கள். அரசியலில் எம்மைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் செயற்படுகிறார்கள். முன்னர் எமக்குத் தரப்பட்ட ஆயுதங்கள் ஒருபொழுதும் தமிழ்த் தலைவர்களைக் கொன்று குவிக்கவில்லை. அவை ஒருபோதும் கல்விமான்களைக் கொன்று குவிக்கவில்லை. அவை ஒருபோதும் அரசாங்க அதிகாரிகளைக் கொன்று குவிக்கவில்லை. சகோதரப் படுகொலைகளைச் செய்யவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்து ஆயுதங்களைக் கையளித்த நாம் மீண்டும் ஆயுதங்களைத் தற்பாதுகாப்பிற்காகத் தூக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியவர்கள் யார்?? என்பதைப் பார்க்க வேண்டும்.

ஆரம்பத்தில் துரோகி என்று முத்திரை குத்தப்பட்டு அல்பிரட் துரையப்பாவில் ஆரம்பித்த கொலை, அதே துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தும் நிலைக்கு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தையும் கூட இட்டுச்சென்றது. அத்துடன் பொலிஸார், இராணுவம் எனத் தொடர்ந்து பின்பு தமிழ், சிங்கள அரசியல் தலைவர்கள், சக விடுதலை இயக்கத் தலைவர்கள், உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், அண்டை நாட்டுப் பிரதமர், அரசாங்க ஊழியர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் என நீடித்துக் கொண்டே சென்ற புலிகளின் கொலைக் கலாசாரத்தை யாரும் மறந்திருக்கமாட்டார்கள் என நான் எண்ணுகிறேன்.

1990ஆம் ஆண்டு பேச்சுவார்த்தை நடப்பதற்கு முன்னர் ஏற்பட்ட யுத்த நிறுத்த சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டு இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த தமிழர் தேசியத் தலைவரான அமிர்தலிங்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினரான யோகேஸ்வரனையும் சுட்டுக் கொன்றார்கள்.

பேச்சுவார்த்தைக்கு என்று சென்று பேச்சுவார்த்தை மேசையிலேயே நிராயுத பாணிகளான தலைவர்களைக் கொன்ற செயல் கோழைத்தனமானது, அநாகரிகமானது. உலக வரலாற்றில் எங்குமே நடைபெறாத ஒரு செயல்.

இதுபோன்ற கடந்தகாலச் சம்பவங்களையும், அனுபவங்களையும் கொண்டுள்ள நாம், இன்று ஈ.பி.டி.பி.யிடமிருந்து ஆயுதங்களைப் பிடுங்க வேண்டும் என்று கோரிக்கை விடுவதைப் பார்க்கும்பொழுது எம்மை அரசியல் ரீதியில் செயலிழக்கச் செய்ய புலிகள் முயற்சிக்கிறார்கள் என நாம் சந்தேகப்படுவதில் என்ன தவறு இருக்க முடியும்.

ஈ.பி.டி.பி.யினரான நாம், ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வுக்காக, என்றுமே பிரிக்கப்பட முடியாத வடக்கு - கிழக்கு பிராந்தியத்தை ஓர் அலகாகக் கொண்டு, அதற்கு விசேட அதிகாரங்களுடன் மத்தியில் கூட்டாட்சியையும் மாநிலத்தில் சுயாட்சியையும் நிலைநாட்டுவதே தமிழ் பேசும் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வாகும் எனக் கருதுகிறோம். இதனை, எட்டுவதற்கு ஜனநாயக வழிமுறையில் நம்பிக்கை வைத்து, செயற்படும் ஒரு அரசியல் கட்சியாவோம். எமது தற்பாதுகாப்பிற்காகவே ஆயுதங்களை வைத்திருக்கின்றோம். நாங்கள் படையினருடன் இணைந்து புலி வேட்டைக்குச் செல்லவும் இல்லை. மக்களிடம் கப்பம், வரி வாங்கவும் இல்லை. மக்களை வதைக்கவோ துன்புறுத்தவோ இல்லை. எம்மை இராணுவத்தில் இணைந்து எமது சொந்தப் பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள பகுதிகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்க வேண்டுமெனச் சொல்வது ஓர் ஜனநாயக விரோதப் போக்காகும். நானும், எனது சகாக்களும், எனது தோழர்களும் அரசியல்

எதிர் வரும் 22.02.2004 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்கிறது. அதை ஒட்டியே இவ்வுரை பிரசுரிக்கப்படுகிறது.

பொதுவாழ்வில் ஈடுபட முன்வந்தது பொழுது போக்குக்காகவோ, புகழுக்காகவோ, பணம் சம்பாதிக்கவோ அல்லது இலங்கை ஆயுதப் படைகளில் இணைந்து, கொள்ளும் வாய்ப்பைக் கோரியோ அல்ல என்பதை அனைவரும் உணர்ந்து, கொள்ள வேண்டும். எமக்கென்று தெளிவான அரசியல் நோக்கு ஒன்று உள்ளது. அது மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றும் உள்ளது.

அதன் அடிப்படையில் உறுதியான அரசியல் வேலைகள் மூலம் மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ள எமது உறுப்பினர்களை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள ஏன் புலிகள் தயங்குகிறார்கள்?

எந்த நெருக்கடியையும் நாம் சமாளித:து எந்த இலட்சியத்திற்காக நாம் மக்களுக்கு சேவை செய்ய முன்வந்தோமோ, அந்த வேலைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம். இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள் என்று மற்றவர்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இந்த நேரத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரன் 1984 ஆம் ஆண்டு இந்திய வார சஞ்சிகை ஒன்றின் நிருபர் அனிதா பிரதாப்பிற்குக் கொடுத்த செவ்வியை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தொடரும்.....

Swiss நாட்டில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற Basel.S.P.T. ரவி கடையின் புதிய கிளை நிறுவனமான தங்க மாடம் ஒன்று BERN மாநகரில் கோலாகலத் திறப்பு விழா.

காலம் :- ஏப்ரல் மாதம் 2ஆந் திகதி திறப்பு விழா

2004ஆம் ஆண்டிற்கான புதிய மொடல் நகைகளையும் ஆடைகளையும் அத்துடன் அனைத்து ரக D.V.D, V.C.D , A.U.C.D விற்பனை செய்ய உள்ளோம்.

முக்கிய குறிப்பு :- அனைத்து நாடுகளுக்கும் பணமாற்று சேவை 24 மணித்தியாலத்தில் செய்து கொடுக்கின்றோம். கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா,திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் உட்பட சகல நாடுகளுக்கும் தொடர்பு கொள்ளக் கூடிய T. Phone காட் அட்டைகளையும் மிக மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய உள்ளோம்.

அத்துடன் ஏப்ரல் 2ஆந் திகதி தொடக்கம் 12ஆந் திகதி வரைக்கும் அதி விசேஷமான மலிவு விற்பனை.

இடம் :- S.P. TEXTILES & JEWELLERY, SCHLOSS STRASSE, 87A, 3008 BERN.

வரும் வழி :- பேர்ன் புகையிரத நிலையத்தில் இருந்து BUBPLIZ நோக்கிச் செல்லும் 13ஆம் இலக்க பஸ் எடுத்து 5ஆவது தரிப்பிடமான Schlossmatt இல் இறங்கவும்.

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு BASEL மாநகரில் S.P.T. ரவி கடையின்

200புஆம் ஆண்டின் மாபெரும் மலிவு விற்பனை. நகை வழமை போல் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

காலம் :- 20, 21 சனி, ஞாயிறு - மார்ச் 2004.
ஆடைகள் அனைத்தும் 50% இருந்து 60% கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:-
- கல்லு கோலம் சாறி - 50% கழிவில் (145 S.F)
- பனாறிஸ் சாறி - 100 S.F இருந்து
- சாறி - 8 S.F இருந்து
- பஞ்சாபி - 7 S.F இருந்து
- சிறுவர் உடுப்பு - 9 S.F இருந்து
- சேட் - 6 S.F இருந்து
- டெனிம் - 4 S.F
- ரீசேட் - 1 S.F

மலிவு விற்பனை 20,21 சனி, ஞாயிறு மார்ச் 2004

இடம் :- Casino மண்டபத்தில் Basel புகையிரத நிலையத்திலிருந்து பாபல பீளற்ஸ் (Babessa flats) ஐ நோக்கி 1 அல்லது 8 ஆம் இலக்க ட்ராம் எடுத்து 3ஆம் தரிப்பிடத்தில் இறங்கி ஒரு நிமிட நடை தூரம்,

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு Zurich மாநகரில் BASEL S.P.T. ரவி கடையின்

200புஆம் ஆண்டின் மாபெரும் மலிவு விற்பனை. நகை வழமை போல் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

காலம் :- 10.11.12 சனி, ஞாயிறு, திங்கள் - ஏப்ரல் 2004.
ஆடைகள் அனைத்தும் 50% இருந்து 60% கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:-
- கல்லு கோலம் சாறி - 50% கழிவில் (145 S.F)
- பனாறிஸ் சாறி - 100 S.F இருந்து
- சாறி - 8 S.F இருந்து
- பஞ்சாபி - 7 S.F இருந்து
- சிறுவர் உடுப்பு - 9 S.F இருந்து
- சேட் - 6 S.F இருந்து
- டெனிம் - 4 S.F
- ரீசேட் - 1 S.F

மலிவு விற்பனை 10, 11, 12 சனி, ஞாயிறு திங்கள் ஏப்ரல் 2004

இடம் :- Volks Haus மண்டபம், Steufacher str - 60, Zurich.

அனைத்து இடங்களுக்குமான தொடர்புகளுக்கு : BASEL S.P.T. ரவி கடை T.P. 061-2729030, 061-2720990. H.P. 079-3562278

சக்தி தனக்கே கருவியாக்கு-சிவ
சக்தி நடையாகவும் நன்கு பழகும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-முகம்
சார்ந்திருக்கும் நல்லருளும் அழகும்.
-சுப்பிரமணிய பாரதியார்

பாப்பா முரசு

எது சரி?

ஒரு வழிப்போக்கன் காட்டின் வழியே நடந்துகொண்டிருந்தான். நீண்ட நேரம் நடந்ததால் அவன் கால்கள் வலித்தன. அங்கே ஒரு பெரிய ஆலமரம் இருப்பதைப் பார்த்தான்.

அந்த மரத்தைப் பார்த்ததும் அதன் நிழலில் ஓய்வெடுக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அதன் நிழலில் உட்கார்ந்து ஓய்வெடுத்தான்.

மதிய நேரம் வந்தது. உடன் கொண்டுவந்திருந்த உணவைச் சாப்பிட்டுவிட்டு அதன் கீழ் படுத்தான்.

மல்லாந்து படுத்து மேலே பார்த்தான். அதன் கிளைகளில் பழுத்திருந்த பழம் அவன் கண்களில் பட்டது.

"கடவுளின் படைப்பே சரியில்லை. இவ்வளவு பெரிய மரத்தின் பழம் இவ்வளவு சிறியதாக இருக்கிறதே. பெரிய மரத்தின் பழங்களைப் பெரியதாக அல்லவா படைத்திருக்க வேண்டும்."

இப்படி தனக்குத் தானே நினைத்துக்கொண்டு படுத்துத் தூங்கிவிட்டான்.

சிறிது நேரத்தில் ஆலமரத்திலிருந்து பழங்கள் உதிர்ந்து அவன் மீது விழவே தூக்கம் கலைந்து எழுந்தான்.

"நல்லவேளை, ஆலமரத்தின் பழங்கள் சிறியதாக இருந்ததால் நாம் அடிபடாமல் தப்பித்தோம். பழங்கள் மட்டும் பெரியதாக இருந்தால் இந்நேரம் என்னாகியிருக்கும்? கடவுள் சரியாகத்தான் எல்லாவற்றையும் படைத்திருக்கிறார்" என்று தனக்குத்தானே நினைத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

ஆம், பிள்ளைகளே! இறைவன் இவ்வுலகைப் படைக்கும்பொழுது அவற்றிற்குரிய தன்மைகளோடு படைத்திருக்கிறான். ஆனால், மனிதனோ சில சமயங்களில் விளக்கமின்மையால் குறைபட்டுக்கொள்வதுண்டு. நாம் அவைகளை நன்கு பகுத்தறியும் பொழுதுதான் அதன் மகத்துவம் புரிகிறது. இக் கதையில் வரும் வழிப்போக்கனும் ஆரம்பத்தில் குறைபட்டுக் கொண்டாலும் தனக்கு ஆபத்து நேர்ந்த போதுதான் அதன் தன்மையை புரிந்துகொள்கிறான். எந்தவொரு படைப்பாயினும் அவை மனிதனுக்கு ஏதோ ஒருவகையில் நன்மை செய்கின்றன என்பதை உணர்ந்து செயற்படுவோம். புரியுதா குட்டீஸ்.

பாப்பா முரசு சிறுகதை

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.02.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல. 536
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 533

பரிசுக்குரியவர்:
செல்வன் பா. விக்னசூலன்,
இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

பாராட்டுக்குரியவர்கள்

ஆர்.மென்டிஷா, யா:வேம்படி மகளிர் வித்தியாலயம்.	ஆத்மராசா ஜெயந்தி, 1ஆம் வாட், கடற்கரைச்சேனை, மூதூர்.
மரியதாஸ் கீதன்ராஜ், சாவற்காடு, மன்னார்.	ஏ. விஜிதன், செல்லப்பிள்ளையார் வீதி, அக்கரைப்பற்று.
சி.றாதை, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,வெள்ளவத்தை.	எஸ். ஜனுஷாந், இல.20, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
பா. சிறீகுகன், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.	சீ. ரதீஸ், இல.01, தேசிய வீடமைப்பு, தும்புருகிரிய வீதி, ஹட்டன்.
அக்ஷயா வாலசிங்கம், 20/08, பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு.	ரா.திவ்யா, தரம்-5 B ப.த.ம.ம. வித்தியாலயம், பதுளை.

இந்த வாரப் புதிர்



உள்ளங்கையில் உலகம்

மெட்ரோ எனப்படும் பாதாள ரயில் போக்குவரத்து உலகிலேயே முதன்முதலாக 1862ஆம் ஆண்டு இங்கிலாந்தில் லண்டனுக்கும் பேக்கர் தெருவிற்கும் இடையில் ஓடத் தொடங்கியது. இன்று அங்கு 27 பாதாள ரயில் நிலையங்கள் உள்ளன. இந்தியாவில் கொல்கத்தாவில் மட்டும் பாதாள ரயில் ஓடுகிறது.

கறுப்பும் வெள்ளையும்

கறுப்பு, வெள்ளை இரண்டு நிறமும்
கலந்தி ருக்கும் எங்கள் பசு.
காலை, மாலை இரண்டு வேளை
பாலைத் தரும் எங்கள் பசு.

கறுப்பும் வெள்ளையும் கலந்த பசுவில்
கறந்து கறந்து வெள்ளைப் பாலை
விரும்பி நாங்கள் குடித்திடுவோம்;
மிகவும் மகிழ்ச்சி அடைந்திடுவோம்.

அதிசய உலகம்

இராட்சத பாலூட்டி

டால்பின் மீன்களில் 'பாட்டில் நோஸ்' என்ற நீண்ட மூக்கு டால்பின்களும் உண்டு. ஆனால், திமிங்கல வகைகளில் இந்தப் 'பாட்டில் நோஸ்' திமிங்கல வகை மிக மிக அபூர்வம்.

இதுவும் கடல்வாழ் பிராணிகளில் பாலூட்டி வகையைச் சேர்ந்தவையே.

தண்ணீரின் அடி ஆழத்தில் வாழும் இவை மூச்சு விடுவதற்கென்று கடலின் மேல் பரப்புக்கு வந்து செல்லும். இப்படி மேலே வந்து செல்வது தினமும் 3 3/4 மணி நேரம் என்று ஆய்வு கூறுகிறது.

அட்லாண்டிக் கடல் பகுதியில் மட்டுமே இந்தப் 'பாட்டில் நோஸ்' திமிங்கலங்கள் அதிகம் காணப்படுகின்றன. பெரிய பறவையின் மூக்கு மாதிரி இதன் வாய் காணப்படுகிறது.

இந்தப் பழத்தின் பெயர் கஷ்கொட்டை என்பதாகும். ஒருவிதமான கொடியின் உள்ளே பழுக்கிறது. இதனுள் மென்மையான சதை இருக்கிறது. இதை ஜப்பானிய மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இலையுதிர் காலத்திற்கு முன்பு அங்கே இந்தப் பழம் அதிகமாக விளைகிறது. இதனால் அப்போது நடைபெறும் ஜப்பானிய பண்டிகைகளின்போது இந்தப் பழ உணவு ஒவ்வொருவரது வீட்டிலும் தவறாமல் இடம்பெறும்.

அரிசியுடன் சேர்த்து இதை ஜப்பானிய மக்கள் சாப்பிடுகிறார்கள். இந்த உணவில் அதிக சத்துக் கிடைக்கிறது. பல நூற்றாண்டுகளாக ஜப்பானிய மக்கள் இந்த கஷ்கொட்டை பழத்தை உணவில் சேர்த்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

உங்கள் பொது அறிவு எப்படி?

1.பற்சக்கரம் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது?
1840ஆம் ஆண்டு

2 குறைந்த எண்ணிக்கையில் துறைமுகங்கள் அமைந்துள்ள பெருங்கடல் எது?
பசிபிக் பெருங்கடல்.

3.ஜப்பான் நாட்டின் தேசிய விளையாட்டு எது?
ஜூ. ஜிட்சூ.

4. இத்தாலி நாட்டின் தேசிய சின்னம் எது?
வெள்ளை அல்லி மலர்.

5. புத்தர் எந்த நாட்டில், எங்கு பிறந்தார்?
நேபாள நாட்டில் லும்பினி என்ற இடத்தில்.

6. ஐக்கிய நாடுகள் சபையின் (U.N.O) கொடியின் நிறம் என்ன?
வெள்ளை.

7. இலண்டன் கோபுரத்தைக் கட்டியவர் யார்?
முதலாம் வில்லியம் மன்னர்.

8. எந்த நாட்டில் 3 1/2 கோடி மக்கள் குகைகளில் வாழ்கிறார்கள்?
சீனா.

9. யுரேனியம் அதிகமாகக் கிடைக்கும் நாடு எது?
நமீபியா.

10. தபாலட்டை முறையைக் கண்டுபிடித்தவர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
இமானுவேல் ஹெர்மன் - ஆஸ்திரியா.

அறிவுத் தேடல்



சென்ற வாரப் புதிரின் விடை :

புள்ளி

இதுவும் ஒரு சாதனைக்கான முயற்சியா என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?. முகத்தில் இலையான்களை இருக்கவிட்டு கொஞ்சம் கூட அருவருப்பில்லாமல் சிரித்துக்கொண்டிருக்கும். இவன் கட்டார் நாட்டுச் சிறுவன். முகத்தில் ஒரு இலையான் வந்து அமர்ந்தாலே நம்மை அறியாமலேயே விரட்டிவிடும். நமக்கு இந்தச் சிறுவனின் செயல் ஆச்சரியமாக இருக்கிறது. இந்த இலையான்களைச் சாதாரணமாகத் தட்டி விட்டிருந்தால் கட்டாரிலிருக்கும் இந்தச் சிறுவன் நமது பார்வை வரை அடுத்தவரின் கவனத்தை ஈர்த்திருந்த முடியாது அல்லவா? ஏதோ ஒரு புள்ளிதான் வெளி உலகுக்கு நம்மை வெளிக்காட்ட உதவும் ஆரம்பம் என்பதற்கு இது மிகச் சாதாரணமான உதாரணம்.

பிரியாவிடை!

பெரும் இரசிகர் கூட்டம் மிகவும் எதிர்பார்ப்புடன் எதைப் பார்க்கிறார்கள். கிரிக்கெட் ஆட்டமொன்றுதான் இவ்வளவு பரபரப்பாக இரசிக்கப் படுகிறது. ஓய்வு பெறும் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவோவின் இறுதி ஆட்டத்தையே இப்படி இரசிக்கிறார்கள். இந்த இறுதிப் போட்டி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்போட்டியாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்த தகவல்கள் அவ்வப்போது முரசில் வெளியாகி இருந்தது. ஸ்ரீவோவின் இரசிகர்கள், தாங்கள் அணிந்திருக்கும் சேட்டுகளிலேயே தங்கள் பிரியாவிடைச் செய்தியை எழுதி ஸ்ரீவோவுக்கு விடை கொடுத்தது மனதை உருக்குவதாக இருந்தது. இரசிகர்கள் அணிவகுத்து நிற்பதையும், சக வீரர்கள் தங்கள் தோள்களில் ஸ்ரீவோவைச் சுமந்து இரசிகர்கள் முன்னிலையில் ஊர்வல மாகச் சென்றதையும் படங்கள் குறித்து நிற்கின்றன.

பாதுகாப்பு அம்பு



எதிர்வரும் மாதத்தில் இந்திய கிரிக்கெட் அணியினர் பாகிஸ்தானுக்கு சுற்றுலாவொன்றை மேற்கொள்ள வுள்ளனர். ஆனாலும், இந்திய அணிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துப் பலத்த ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இது குறித்து மேலதிக ஆய்வுகளைச் செய்யுமுகமாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்றும் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. எனினும், பாதுகாப்பு ஒழுங்குகள் திருப்தியாக இருப்பதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் – இந்திய அணிகள் பங்குகொள்ளும் போட்டிகள் நடைபெற்றால் இந்திய நாணயப் பெறுமதியில் 20 மில்லியன் ரூபாய்கள் பாகிஸ் தானுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒத்திகைதான் இது.

ஓவர் ஒன்று: சிக்ஸர் ஆறு!

1968 ஆகஸ்ட் 31இல் ஐக்கிய இராச்சியத்தின் ஸ்வான்சீயில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியொன்றில் மெல்கொம் நாஸ்வீசிய ஒரு ஓவரில் பார்படோசைச் சேர்ந்த சேர் கார்பீல்ட் ஸோபர்ஸ் ஆறு சிக்ஸர்கள் அடித்துச் சாதனை புரிந்தார். 1985 ஜனவரி 10ஆம் திகதி மும்பையில் நடந்த போட்டியொன்றில் திலக்ராஜ் சர்மா (இந்தியா) வீசிய ஒரு ஓவரில் ரவி ஷங்கர் சாஸ்திரியும் (இந்தியா) ஆறு சிக்ஸர்களை அடித்தமை குறிப்பிடத் தக்கது. படத்தில் பார்படோசைச் சேர்ந்த சேர் கார்பீல்ட் ஸோபர்ஸ்சை காணலாம்

சோனியா உங்களுக்குத்தான்.....

மும்பையில் பெண்கள் தண்ணி அடிப்பதும், சிகரெட் பிடிப்பதும் சாதாரண விஷயம். தமிழ்நாட்டில்தான் அதைப் பெரிதுபடுத்துகிறார்கள். நான் நிறைய பீர் குடிப்பேன். சிகரெட்டும் குடிப்பேன். இதில் என்ன தவறு? ஆண்கள் குடிக்கலாம். பெண்கள் குடித்தால் தப்பா? இப்படி பெண்ணியம் பேசியிருப்பது நடிகை சோனியா அகர்வால்தான். இப்படி தண்ணீர் தேசத்திற்காக குரல் கொடுத்த சோனியா, இப்போதெல்லாம் பீர் அடிப்பதைக் குறைத்து விட்டாராம். காரணம் லேசாக முன்னால் எட்டிப் பார்க்கும் தொப்பை.

முகப்பில்
விக்ரம்
தியா

அஜித் கண் கலங்கியது ஏன்?

ஒரே ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது...அஜித் எந்த வம்புதும்புக்கும் போகமாட்டார். ஆனால், வந்த வம்பை விடமாட்டார். ஆனது ஆகட்டும் என்று மோதிப் பார்த்துவிட்டுத்தான் மறு வேலை. 'சினிமாவில் நான் சந்தித்த சோதனைகள் நிறைய. அவற்றை மீறித்தான் ஒரு முன்னணி கதாநாயகனாகப் புகழ் பெற்றிருக்கிறேன். எனது இடத்தை யாருக்கும் விட்டுத் தரமாட்டேன். அதேபோல, மற்றவர் இடத்தை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று குறுக்கு வழியில் செல்லமாட்டேன். சினிமாதான் எனக்கு பணம், புகழ், நிம்மதி, நல்ல அந்தஸ்து கொடுத்தது. அவற்றை என்றைக்குமே நான் மறக்க மாட்டேன். அதை மறந்தால் நான் ஒரு நன்றிகெட்ட மனிதன் ஆகிவிடுவேன். சினிமா மூலம் கிடைக்கிற புகழை கார் ரேஸுக்காகப் பயன்படுத்துவேன். கிரிக்கெட் பிரபலம் ஆனதைப் போலவே, கார் ரேஸையும் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவேன்...சத்தியம்' என்று அஜித் உணர்ச்சி மிகுதியால் கண் கலங்கினார். அது சாதிக்கப் பிறந்த கண்ணீர்த் துளி.

மடியில் கனமில்லை; வழியில் பயமில்லை! -சினேகாவுடன் நடிப்பது குறித்து ஸ்ரீகாந்த்.

'போஸ்' படத்தில் மிலிட்டரி கமாண்டோவாக நடிக்கிறார் ஸ்ரீகாந்த். இதற்காக டில்லியில் பதினைந்து நாட்கள் மிலிட்டரி கேம்பில் பயிற்சி எடுக்கப் போகிறாராம். முக்கிய ஆட்களைப் பிடித்து பாமிஷன் வாங்கிவிட்டார்கள். படத்தில் இவருக்கு ஜோடி, அதே அழகானப்பட்ட சினேகா! ஒரு பத்திரிகை விடாமல் கிசுகிசு எழுதியும் மறுபடியும் சினேகாவின் அருகாமைதான் ஸ்ரீகாந்திற்கு முக்கியமாப் போச்சா?

கேட்டால், 'மடியிலே கனமில்லை; வழியிலே பயமில்லை' என்றார் தென்கச்சி சுவாமிநாதன் ஸ்டைலில்! இதுக்கு முன்னாடி நாங்க சேர்ந்து நடிச்ச இரண்டு படமும் சூப்பர் ஹிட். அதனால் அதே காம்பினேஷன் இருந்தா நல்லாயிருக்கும்னு சொன்னாங்க. எப்பவுமே ஹீரோயின் விஷயத்தில் தலையிட மாட்டேன் என்பது என் பாலிஸி. இந்தப் படத்திலும் அந்தப் பாலிஸியை ஃபாலோ பண்ணிட்டேன். தேடித் தேடிப் பார்த்தாலும் முகத்தில் ஒரு எக்ஸ்பிரஷனும் காட்டாமல் பதில் சொன்னார் ஸ்ரீ. ச்சேய்... இந்த ஆம்பிளைங்க மனசுகளிலும் என்ன இருக்குங்கறதை கண்டே பிடிக்க முடியலைப்பா....!

விக்ரமும் டைரக்டர் தரணியும் வாடா...போடா...பழக்கம். சென்னையில் இருவரும் சேர்ந்து படித்தவர்கள். படிக்கிற காலத்திலேயே இப்படியெல்லாம் பேர் வாங்கணும். ஜெயிக்கணும் என்றெல்லாம் பேசிக்கொள்வார்களாம். பல வருட கனவை ஒன்றாக்கி இருவரும் தூள் பரத்தியிருந்ததைத்தான் நாடே கொண்டாடியதே. நாம் வேறு சொல்ல வேண்டுமா என்ன? விஷயம் அதுவல்ல....இரண்டு பேரும் சேர்ந்து புதிய சினிமா கம்பெனி துவங்கும் திட்டம் வைத்திருக்கிறார்கள். தரணி இயக்க, விக்ரம் நடிக்க, இனி அடிக்கடி படங்கள் வரக்கூடும்.

வேதனையில் உழலும் தியா!

'குறும்பு' படம் ஓடும், பெட்டி பெட்டியாகச் சம்பாதிக்கலாம் என்று கனவு கண்டவர்தான் தியா. ஆனால், 'குறும்பு' படம் வந்ததும் தெரியவில்லை...போனதும் தெரியவில்லை. இதனால் வீட்டிலேயே அடைந்து கிடந்த தியா, கஸ்தூரிராஜா இயக்கத்தில் தனுஷ் ஜோடியாக நடித்து வந்த 'ட்ரீம்ஸ்' படத்தை ஆவலுடன் எதிர்பார்த்தார். ஆனால்,அந்தப் படம் சம்பந்தமாக கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ள காரணத்தால், படப்பிடிப்பு இன்னும் தொடங்கப்படவில்லை. தவிர, வேறெந்தப் படமும் ஒப்பந்தம் ஆகாத நிலையில், வேதனையில் உழன்றுகொண்டிருக்கிறார் தியா, பாவம்தான்.

பார்ட்டி வைத்த சில்க்!

யார் யாரோ முழுக்கத் திறந்து, கவர்ச்சி என்ற பெயரில் ஆபாசமாக ஆடிக்கொண்டு இருப்பதால் கதிகலங்கிப்போய் இருக்கிறார் டான்ஸ் மாஸ்டர்கள் லலிதா - மணியின் வாரிசு ஜூனியர் சில்க். இதற்குப் பரிகாரம் என்னவென்று யோசித்த அவர், தனக்குப் பிடித்தவர்கள் மற்றும் நெருக்கமான சினிமா பிரமுகர்களுக்கு வடபழனியிலுள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் பார்ட்டி வைத்துள்ளார். அது பிறந்தநாள் பார்ட்டி என்பதால், தண்ணி ஆறாக ஓடியதாம். சரி, பட வாய்ப்பு குவிந்ததா?

தனுஷ் - சிம்பு டைரம்

யார் ஆரம்பித்து வைத்த பிரச்சினையோ...தனுஷ், சிம்பு வட்டாரத்தில் புகைந்து கொண்டிருக்கிறது. தனுஷும், சிம்புவும் எங்களுக்குள் போட்டி இல்லை என்று பேட்டி கொடுக்கிறார்கள். ஆனால், உள்ளுக்குள் பொருமித் தீர்க்கிறார்கள். தனுஷின் 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' நன்றாக இல்லை என்று யாரோ இரண்டு பேர் தியேட்டர் வாசலில் நின்றுகொண்டு வதந்தி பரப்பிக்கொண்டிருந்தார்களாம். அந்த இரண்டு பேரை அனுப்பியது சிம்புதான் என்று மறைமுகமாகக் குற்றஞ்சாட்டுகிறார் தனுஷ். படம் நன்றாக இருந்தால் கூட்டம் தானாக வரும். அவர் சொல்லும் அந்த இரண்டு பேர்தான் தமிழ்நாடா? அவர்கள் சொன்னால் பொதுமக்கள் படம் பார்க்காமல் திரும்பிவிடுவார்களா? என்று சிரிக்கிறார் சிம்பு. கூத்தாடி ரெண்டு பட்டா ஆத்தாடின்னு ரசிச்சுட்டு போக வேண்டியதுதான்!

அட...என்னவோ இருக்கு!

வசீகரன் அப்பாவிப் பூச்சி, ப்ரியாமணி சீன்னப் பெண் என்று கதைக்கிறார்கள். சமீபத்தில் அவர்கள் ஜோடியாக வந்து, சென்னை திரையரங்கில் இந்திப் படம் பார்த்து இரசித்திருக்கிறார்கள். இந்த ஜோடியைப் பார்வையாளர்கள் கண்களால் கைது செய்து இருக்கிறார்கள். அட்டே, என்னவோ இருக்கு.

ஐஸ்வர்யா ராயோடு டூயட் பாடும் மச்சக்காரர் விஜய்யா? விக்ரமா?

கோலிவூட்டின் இப்போதைய கிளுகிளு எதிர்பார்ப்பு....ஐஸ்வர்யாராய் யாருக்கு? என்பதுதான். உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐஸ்வர்யா ராயை நடிகையாக முதலில் அங்கீகரித்தது தமிழ் சினிமாதான்.

இப்போது பாலிவூட்டில் பயாஸ்கோப் காட்டி ஹாலிவூட்டிலும் கால் பதித்திருக்கிற ராயின் கலையுலக பூர்வாசிரமம் கோலிவுட் என்கிற மரியாதையை ஐஸ் இன்னும் வைத்திருக்கிறார். ஷங்கரின் 'ஜீன்ஸ்' மணிரத்னத்தின் இருவர்' படங்கள் மூலம் பிஸியான பிறகு பாலிவுட் போய்விட்ட ஐஸ்...'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்'க்குப் பிறகு தயாரிப்பாளரும் இயக்குநருமான மாதேஷ் இயக்கத்தில் விஜய் இருவேடங்களில் நடிக்கும் படத்திற்கு ஐஸை ஒப்பந்தம் செய்ய முயற்சி எடுத்தார். தொடர்ந்து டைரக்டர் ஷங்கர் ஆஸ்கார் ஃபிலிம்ஸிற்காக பண்ணும் புதிய படத்தில் விக்ரமிற்கு ஐஸை ஜோடியாக்க முயற்சிக்கிறார். இப்படிப்பட்ட பரபரப்பான நிலையில் ஐஸோடு டூயட் பாடும் மச்சக்காரர் விஜய்யா? விக்ரமா? என எதிர்பார்ப்புக் கிளம்ப....ஐஸோ குருவுக்கு முதலிடமா? நண்பருக்கு முதலிடமா? என குழம்பிப் போனார். தற்போதைய நிலவரப்படி தனது குரு ஷங்கருக்காக சிஷ்யர் மாதேஷ், ஐஸ் மீதான தனது படையெடுப்பைக் கைவிட்டுவிட்டதாகக் கேள்வி. எது எப்படியோ...தமிழ் சினிமா இரசிகர்கள் மறுபடியும் ஐஸைத் தரிசிக்கிற 'மச்சக்காரன்'கள் ஆகிவிட்டார்கள்.

சினிவிசிட்

மோதல்! அனுராதா vs அபிநயஸ்ரீ

முன்னாள் கவர்ச்சி நாயகியும், இந்நாள் கவர்ச்சி நாயகியும் கடுமையாக மோதிக்கொண்டார்கள். நிஜத்தில் அல்ல, படத்தில். 'சூப்பர்டா' படத்தில் அனுராதாவுடன் இணைந்து படுகவர்ச்சி காட்டி ஆடியுள்ள அபிநயஸ்ரீ வேகமான அசைவுகள் கொடுத்து தன் அம்மாவையே ஆட்டத்தில் மிரட்டிவிட்டாராம். அவர்களது போட்டி நடனத்தில் வந்து விழுந்த வார்த்தைகளைக் கவனியுங்கள். "எங்கப்பாவுக்கு நாலு பொண்டாட்டி; நான் நாலுபேருக்கு இப்ப வப்பாட்டி, நான் நல்லா கடுவேன் கோதும சப்பாத்தி, அத ஆசைப்பட்டு கெட்டார் ஒரு குஜராத்தி, மூணு வருஷம் சேட்டு வீட்ல ரொட்டி சுட்டேன், அஞ்சு வருஷம் அப்பர் ஆத்துல ஆப்பம் சுட்டேன். நான் ஆறாம் வருஷம் ஆலிவுட்டுல ஸ்டார் ஆனேன். நான் காரைக்குடி ஆச்சி...என் பிளவுசு லூஸா போச்சு" என்று போய்க்கொண்டே இருக்கிறது இந்தப் பாடல். எல்லாம் வல்ல தமிழ் ரசிகனே, ஜமாய்...ஜமாய்.

'மெல்லிசைப் புயல்' கபிலேஷ்வருடன் சில நிமிடங்கள்!

இந்திய சினிமாத்துறைக்குள் புதிய வரவாக ...தாலும் மெல்லிசைப் பாடல்களில் மனங்கவர் ...களுக்கு இசையமைத்து 'மெல்லிசைப் புயல்' என்ற ...த்தோடு இருக்கும் இளைய இசையமைப்பாளர் ...ஷ்வர் இலங்கைக்கு வந்திருப்பதை அடுத்து அவரைக் ...ம் சந்தர்ப்பம் எமக்குக் கிட்டியது. புதிய தயாரிப்பில் ...ருந்த கபிலேஷ்வர் முரசுக்காகப் புன்னகையோடு பேச ...ந்தார்.

கே :- கபிலேஷ்வர் என்பது ...வுக்காக வைத்த ...?

ப :- அப்படியெல்லாம் ...ல, இது அப்பா, அப்பா ...ச பெயர்தான்.

கே :- இசைக்கும் ...களுக்கும் எப்படித் தொடர்பு?

ப :- என்னோட அப்பா ...ணாவியார். அப்படியேதான் ...கும். 7 வயசில இருந்தே மியூசிக் பக்கமாக நான் ...ப்பட்டுட்டேன்.

கே :- மெல்லிசைப் பாடல்களுக்கே இசை அமைத்த ...களுக்கு சினிமாவுக்குள்ள போக வேண்டுமென்ற ஆர்வம் ...வந்தது?

ப :- இசையைப் பொறுத்தவரைக்கும் மெல்லிசைப் ...களிலிருந்து பிரகாசிக்கிறத விடவும் நம்மள ...யுலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடியது ...தான்.

கே :- ஏற்கெனவே சினிமாவில் இருக்கும் ...சையமைப்பாளர்களில் உங்களை ...சயினால் பாதிச்சவங்க ...ன்னு தெரிஞ்சுக்கலாமா?

ப :- நிச்சயமா. இந்தச் சந்தர்ப்பத்தில கூட ...சொல்லலை ...ன்னா நல்லா இருக்காது. ...த்து இசையில இசைஞானி இளையராஜா, ...மாங்கு இசையில தேனிசை தென்றல் தேவா, ...த்திய இசையில பத்மஸ்ரீ ஏ.ஆர்.ரகுமான் இவங்க ...ு பேரையும் குறிப்பிடலாம்.

கே :- உங்களைப் பார்க்கிறப்போ கார்த்திக் ...ராஜா போல் சாயல் தெரியுதே. இப்படி யாராவது ...சொல்லியிருக்காங்களா?

ப :- அதை ஏன் கேக்கிறீங்க. என்னைப் பார்க்கிற ...தமே முதல்ல இப்படித்தான் நினைக்கிறாங்க. உங்கள ...ரீ சில பேர் நேரடியாகவே கேக்கிறீங்க.

கே :- இசைப் புயல் ஏ.ஆர்.ரகுமான், மெல்லிசைப் ...ல் கபிலேஷ் இதப் பத்தி என்ன நினைக்கிறீங்க?

ப :- எதுவுமே இல்ல. ஏ.ஆர்.ரகுமான் அளவுக்கு ...ன்னால கற்பனபண்ண முடியல. எல்லாத்துக்கும் ...ண்டவனோட அனுக்கிரகம் வேணும்.

கே :- புதுப் படத்துக்கு இசையமைக்கிறதா கேள்வி. ...துகுறித்த ஏதாவது தகவல சொல்ல முடியுமா?

ப :- ஆர்.பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கிற ...ந்தோஷ் குமார் பிலிம்ஸ் இன்டர்நெசனல் வழங்கும் 'ரீல் ...ன்னன்' அப்படிங்கிற படத்துக்கு இசையமைக்கிறேன்.

இந்தப் படத்தோட கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எஸ்.கே.குமார் செய்றார். வர்ற மே மாசம் இந்தப் படம் வெளியாகுது.

கே :- இதுவரைக்கும் எத்தனை மெல்லிசைப் பாடல் சி.டி.க்களை வெளியிட்டிருக்கீங்க?

ப :- 'இதயம் உனதல்லவா', 'மலரே மௌனமா', 'காதல் நயக்ரா', 'கணசம்' இந்த நாலுந்தான்.

கே :- 'மெல்லிசைப் புயல்' என்கிற பட்டம் எப்ப கிடைத்தது?

ப :- 2003ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 11ஆந் திகதி கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் இளையராஜி அவர்களினால் இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. அதுக்கப்புறம் சிறந்த இசையமைப்பாளருக்கான சான்றிதழும் கனடாவிலேயே கிடச்சது.

இது கனடா அரசினால் வழங்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு 11ஆம் மாதம் குயின்ஸ் பாக்கில் வைத்து பலாச்சுளை என்ற பாடலுக்காக சிறந்த இசையமைப்பாளருக்கான விருது வழங்கப்பட்டது.

கே :- 'ரீல் மன்னன்'தான் உங்கட முதல் படமா?

ப :- இல்லை. இதுக்கு முன்னமே தாமரை சினிஆர்ட்ஸ் தயாரித்த 'மீனா', சந்தோஷ் குமார் பிலிம் இன்டர்நெசனலின் 'மெல்லினமே'. இந்த இரண்டு படமும் இன்னும் வெளியாகவில்லை.

கே :- உங்களுடைய மெல்லிசைப் பாடல்களுக்கு பாடகர்களை எவ்வாறு தெரிவு செய்வீர்கள்?

ப :- புதியவர்கள் என்றில்லாமல் பின்னணிப் பாடகர்களான சுஜாதா, சுவர்ணலதா, மகாநதி சோபனா, சுரபிகா - நெடுங்கனி, ஹரினி, இளையராஜாவின் மகள் பவதாரணி, உன்னிகிருஷ்ணன், ஹரிஸ்ராகவேந்திரா, ஸ்ரீனிவாஸ், ஆனந்த், ஜெயம் - யாழ் இவங்கெல்லாம் பாடியிருக்காங்க.

கே :- எத்தனை வருஷமா இசைப் பயணம் செய்றீங்க?

ப :- என்னோட 17 வயசில தொடர்ந்து படிக்கிறதா, மியூசிக் பக்கமா போறதா என்று ரொம்பவும் குழப்பமா இருந்துச்சு. நல்லா யோசித்தபோது மியூசிக்தான் சரின்னு முடிவு எடுத்தேன். இதுவரைக்கும் 7 வருடங்களா போராடிக்கிட்டிருக்கேன்.

ஆரம்பத்திலிருந்த பரபரப்பு கொஞ்சம் தணிந்து கபிலேஷ்வர் மௌனமாகிப் போக, இனியாவது வெற்றிகள் அவரை உற்சாகப்படுத்தட்டும் என்ற வாழ்த்துக்களோடு விடைபெற்றேன். மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் அவரைச் சந்திப்போம்.

-மதி.

'ரீல் மன்னன்' திரைப்பட துவக்க விழாவில் தயாரிப்பாளர் ராவுத்தர், விஜயகுமார், பாக்கியராஜ், பாண்டியராஜன், இளம் இசையமைப்பாளர் கபிலேஷ்வர் மற்றும் திரைப்படக் குழுவினர்.

மிதுன் - திபு
படம் : உள்ளம்

அனுபவி ராஜா, அனுபவி

பிரபலமான ஒரு கவிஞரின் பெயரை முன்பாதியிலும் கடவுளின் பெயரைப் பின்பாதியிலும் வைத்துள்ள இயக்குநர், தனது இயக்கத்தில் நடித்த மூன்றெழுத்து இளம் கதாநாயகியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டாராம். அது என்னவெனில், தான் இயக்கிய தமிழ்ப் படத்தில் அவரைக் கதாநாயகியாக நடிக்க வைப்பதற்கு பலத்த சிபாரிசு செய்ததே தான்தான் என்று சொல்லி நம்ப வைத்து அதற்குப் பிரதியுபகாரமாக அந்த நடிகையைத் தனியீது தனிப்பட்ட அன்பைப் பொழியுமாறு வற்புறுத்தினாராம். இதைக் கேட்டு முதலில் மிரண்டுபோய் அடம்பிடித்த இளசு, பிறகு கனியத் தொடங்கிவிட்டதாம். இப்போது இயக்குநர் முகத்தில் பரம திருப்தி தெரிகிறது. ம்....அனுபவி ராஜா, அனுபவி.

கமலுக்கு ஜோடி சேர போட்டி போடும் நடிகைகள்!

'விருமாண்டி' விஷயத்தில் தனக்கெதிராக டார்ச்சர் தந்த அரசியல்வாதிகளுக்கு நக்கலான பதிலடி தரும் விதமாக 'கிருஷ்ண லீலா' எனும் காமெடி படத்தை துவங்கவிருக்கிறார் கமல். இயக்குவது கே.எஸ்.ரவிக்குமார்.

இந்தப் படத்தின் ஹீரோயின் வாய்ப்பை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று துடியாய் துடிக்கிறார்கள் மீனாவும், ரம்யாகிருஷ்ணவம்சியும். இதில் கமலுக்கு எந்தவித தர்மசங்கடமும் இல்லை. சிக்கல் ரவிக்குமாருக்குத்தான். காரணம்...மீனாவும், ரம்யாவும் ரவிக்கு நெருக்கமானவர்கள். அதனால்தான் மனிதர் மண்டை காய்கிறார்.

ரவிக்குமாரைப் பொறுத்தவரை இதற்கு ஒரே வழி...கேரக்டருக்கு மீனா, கிளாமருக்கு ரம்யா என ரெண்டு நாயகி கதையாக கதைவிடுவதுதான். ஆனால், 'விருமாண்டி' என்ன நினைக்கிறாரோ? அவர் பார்த்து முடிவெடுத்தால்....கௌதமி கூட கதாநாயகியாக இருக்கலாம்.

அர்ஜுன் படத்தில் சாயாசிங்

'திருடா திருடி' புகழ் சாயாசிங் நடிக்கும் 'கவிதை' படப்பிடிப்பு முடிந்தது. நல்ல வாய்ப்புகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அவர். இயக்கும் 'ஜெய்ஞாயா' என்ற படத்தில் வைலாவைத் தவிர ஒப்பந்தமாகி இருக்கிறார். அடுத்து ஹரி இயக்கத்தில் 'அருள்' என்ற படத்தில் இன்னொரு கதாநாயகியாக விக்ரமுடன் சேர்ந்து ஒரு பாடலுக்கு ஆட சம்மதம் தெரிவித்துள்ளார். என்றாலும், அவர்கள் கேட்ட தேதிகள் இவரிடம் இல்லாததால், நடிப்பது பற்றி இன்னும் இழுபறிதான்.

அடுத்து புதுப்பட மனோஜ்குமார் இன்னொரு கதாநாயகியாக விக்ரமுடன் சேர்ந்து ஒரு பாடலுக்கு ஆட சம்மதம் தெரிவித்துள்ளார். என்றாலும், அவர்கள் கேட்ட தேதிகள் இவரிடம் இல்லாததால், நடிப்பது பற்றி இன்னும் இழுபறிதான்.

சேரன் - சினேகா
படம் : ஆட்டோகிராப்

கடைசி ஆசை

நான் வாடகைக் காற்றை
சுவாசித்து வாழ்பவன்
இன்றோ நாளையோ
நான் இருமிச் செத்தால்

என் இறுதி ஊர்வலத்திலேனும்
வாய் திறந்து அழுதுவிடு.
இதுவே என் கடைசி ஆசை
என் இறுதிச் சடங்கேனும்
இன்பமாய் அமையட்டும்.

-சி.கண்ணன், லண்டன்.

விழிக்க மறுக்கும் கண்கள்

மனதோர வார்த்தைகள்
அவை மறக்க முடியாத
நிஜங்கள்
நீ காயப்படுத்திய என்
இதயம்
அதில் கறைபடாத உன்
எண்ணங்கள்.

என்னை ஏற்கத்
தெரியாத
உன் பெண்மை
சிரிப்பின் இடையிலும்
உன்னை எண்ணும்
என் காதல்

உன் கண்ணில்
மறைந்து போன என்
கடித வார்த்தைகள்.
காலாவதியாகிப் போன
கவிதைகள்.
இவைகள் கூட
அழுகின்றன.

உன் எண்ணங்களை
சுமந்து கொண்டு
வாழ்வேன். பிரியாது;
என்றும்; எப்போதும்
இவைகள்தான் இனி
என் வாழ்க்கை வேட்கை
எல்லாமே.

புகையில் என்
இதயத்தை குளிப்பாட்ட
எனக்கு தெரியாது
மதுபானம் கூட நான்
தொட்டுவிட முடியாத
தூரத்தில்.

புதுயுகப் பெண்களுக்கு
இவை பிடிக்கிறது.
காதலுக்கும் தகைமையாக்கி
இருக்கிறார்கள்.
புதுயுகப் பெண்ணே அதனால் தான்
உன்னிடம் இருந்து
எனக்கு காதல் கிடைக்கவில்லையோ?

கனாக்கண்டது போல்
இருக்கிறது.
ஆனால், எப்போதோ
விழித்து விட்டேன்.
கண்களை மட்டும்
மூடிக்கொண்டு.

-த.மு.ஜசான், மாங்குளம்.

கொடுத்து வைத்தவன்!

முதல் பார்வையிலேயே
மனசு நடுங்கியது
இதயத்தை சிலிர்க்க வைக்கின்ற
வதனங் கண்டு...!

எனக்குள்....
குறுந்தூர வீரனைப்போல்
எண்ணச் சிறகு
எட்டிப் பாய்ந்தது!

உன்னோடு
பேசவேண்டும்
என்கின்ற
எண்ணத்தின்
தீர்மானம் எனக்குள்...!

என்
உஷ்ண மூச்சுக்களை
அதிகரித்தபடி
உன்னோடு பேச
நகர்ந்தபோதுதான்
உணர்ந்தேன்
பின்னாலிருந்தது
உன் காதலனென...!

நீ
கைகோர்த்தபடி நடந்தாய்
அவனுடன் மகிழ்வாய்...!

அதைக்கண்ட
அதிவேக ரயில் கடந்த
தண்டவாளத்தின் அதிர்வுபோல்
என்னிதயம்...!

மின்னல் தாக்கிய
வலியுடன்
சிலையாய் என்னுடல்!

-எப்.லெனார்ட் குமார்,
ஹப்புத்தளையூர்.

ஏன் இப்படி?

யார் திட்டினாலும்
ஏற்கிறேன் - ஆனால்
நீ திட்டினால்
அது என்னை
முள்ளாய் குத்துகிறதே
ஏன்?

யாரிடம் எதை
மறைத்தாலும்
உன்னிடம்
என்னால் எதையும்
மறைக்க முடியவில்லையே
ஏன்?

துன்ப வலையில் சிக்கித்
தவிக்கும் போது
உன்னோடு சில விநாடி
கதைத்தால்
இன்பத்தின் உச்சத்தில்
மனங்குளிர்ந்து
நிற்கிறேனே ஏன்?

யாரிடமும் காட்டாத
பாசத்தை
உன் மேல் காட்டுகிறேனே
ஏன்?

யாரிடமும் கொடுக்காத
பொருளைக் கூட
உனக்கென்றால்
உடனே கொடுக்கிறேனே
ஏன்?

ஏன்?....ஏன்?....ஏன்?...
ஏனென்றால்
நீ எந்தன் என்
உயிரல்லவா!
உயிரின்றி உடலால்
என்ன தான் செய்ய
முடியும்!

நட்புக்குள்
இத்தனை சுகமா?
இத்தனை சுகங்களை
நட்பு தந்தால்
பிரிவு எனும் வார்த்தை
ஏன்? அகராதியில்
இருக்கிறது.
பிரிவே தெரியாத
நட்புதான்
உன்னதமான உறவு.

-நண்பி, காரைதீவு - 120.

வேட்டையாடும் காதல்

வயசுக் கோளாறு வந்து
காமத்தைப் பிய்த்துண்ணும்.

நெருப்பெரியும் கண்களில்
நிழலென நீ விழ
நொறுங்கிப்போவேன்
நெருஞ்சி முள்ளில்
நின்று கொண்டு
நிலவு சுகிப்பேன்.

யௌவனம் பொழியும்
உன்னழகு மேகங்களில்
நீரள்ளிப் பருக
உதடுகள் விரியும்
அதில்
உணர்ச்சிகள் ளியும்.

தீ கொண்டு
தாகம் தீர்க்கும்
அதிசயம்
இங்கேதான் நிகழ்கிறது.

நீரள்ளி என்மீது கொட்டினாலும்
அடங்காத தீ
நீயள்ளிக் கொள்கையில் மட்டும்
நின்று போவது எப்படி?

நிதானம் தவறி
புதினம் பார்க்கும்
புத்தியை
தியானம் தவறிய
தலைகீழ் தவத்தால்
திருஷ்டி கழித்ததுன் செய்கையில்
தீர்ந்து போனது ஆண்மா.

என் தலைமுடி கோதி நீ
மெல்ல என்
முகம் வருடிக் கொடுக்கையில்
அரைவாசி உயிர் போனதாய்
அனுமானிப்பேன்.
கடித்துக் குதறும்
வேட்டை நாயாய் நிற்கும்
காதலை
இதயத்துள் அவிழ்த்து விட்டு
இம்சை பண்ண உத்தரவிடுவேன்.

-இப்னு காசீம்,
கிண்ணியா - 05.

நாளை வருவான் ஒரு மனிதன்

நாளை வருவான் ஒரு மனிதன்
ஞாலத் திசைகள் கோலமிட
நாளை வருவான் ஒரு மனிதன்.

மாறி லத்துக் கழனியினை
மாற்றி யுழக்கி வரப்பிட்டு
ஏணி பெற்ற வாழ்க்கையினை
எருவிட்டாக்கும் நல்லுழவன்
நாளை வருவான் ஒரு மனிதன்

சாதி ஒன்றாய் சமயம் ஒன்றாய்
நீதி ஒன்றாய் நிறமொன்றாய்
நிறை கண்டாய் விஞ்ஞானி
மொழி ஒன்றாய் நிலை யொன்றாய்
நாளை வருவான் ஒரு மனிதன்.

வானக் கூரை பந்தலில் கீழ்
வையகத்துப் பெருமனையில்
மானிடத்துப் பிள்ளைகளை
மருவி மகவாய் விருந்தோம்ப
நாளை வருவான் ஒருமனிதன்.

-ம.அஜித்தா,
யாழ்.வட்டு இந்துக் கல்லூரி.

கவிதை எழுதுதலும் வாசித்தலும்

(பயிற்சிக் களம்)

சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

பேரில் என்ன இருக்கிறதாமோ?

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை
யோகலிங்கம் சங்கரப்பிள்ளை
செல்லநாச்சியார் சங்கரப்பிள்ளை
இளமையில் இ.செல்லநாச்சியார்,
தம்பதியர்கள் நெடுநாள் தவத்தின்
பின்பு பிறந்த ஏகபுத்திரன்
பிறந்த நிகழ்வைப் பதிந்தபோது
எஸ்.செல்வராஜயோகலிங்கரத்னம்.

தாத்தா –
யோகலிங்கம், அப்பருக்கப்பர்.
பாட்டா –
இராசரத்தினம், அம்மாக்கையா.
ஆரது பேரை முன்னால் வைப்பது
என்ற வாதம் முடிந்த போது
இராச யோக லிங்கரத்தினம்
என்ற பேரன் பேருள் தாத்தா
பாட்டா பேரை இரண்டாய்ப் பிளந்தார்.
ரா, யோ, லி, ர, அ, இ, உ எதும்
முதலில் வருவது கேடெனச் சொன்னார்.
சோதிட நிபுணர் கணவதிப் பண்டிதர்.
ளௌ, ஞா, ஜே, செ
நாவில் ஒன்று நல்ல விசேஷம்.
பேரில் செல்வம் வலிய நுழைந்தது.
திகரம் அகன்றதும், சஜ ஆனதும்,
வழுவல, கால வகையினானே)

வீட்டில் அம்மா ராசா எனவும்
அப்பர் மறாய் யோகம் எனவும்
தொடங்கிய ஆட்டம்
தோல்வி வெற்றி இல்லாதொழியவும்
செல்வம் என்று அழைக்கும் முடிவு.
கொழும்பு மாமி வெட்டைப் பேர் எனத்
தம்பி என்று கெட்டுப் பிறகு
பள்ளியில் மறுபடி செல்வம் மீண்டது.
பட்டப் பேர்களும் வந்து போயின.
படிப்புக் கொருந்சம் ஏற மறுத்தது.
இடையிடை தடிமல் காய்ச்சல் வந்தது.
சாதகம் பொதுவாய் நல்லது எனினும்
கிரகம் சிலது கோளாறென்று
செவ்வாய், சனிக்கு ஏதேன் செய்தால்
நிலைமை திருந்தும் என்றார் சாத்திரி.
மேலும் ஏழு கிரகம் இருப்பதைக்
கோமிற் குருக்கள் எடுத்துக் காட்டக்
கிரக பூசை மாசா மாசம்
நடந்தது, அத்துடன்
டியூசன் செலவும் இருந்தது.
கொஞ்சம்
மருந்துச் செலவும் இடைமிடை போனது.
கிரகப் பலனை மாற்றேலாது,
பிறந்த நேரம் தன்னை அந்தப்
பிரமாவாலும் மாற்றேலாது.

ஊழ் முந்துறுமே என்ற போதிலும்
நியூமரோலஜி கூலி தரும்மே!
தம்பிக் கிலக்கம் எட்டுமிரண்டும்
பேரில் கொஞ்சம் எழுத்தை மாற்றச்
சாதக பலனும் சரியாய்த் திரும்பும்.
பாட்டா தாத்தா பங்கில் கையை
வைப்பது தவிர்த்துப் பேரின் முதலில்
மாறிச் Shelvam ஆனது.
இடங்கள் மாறின வேறிரு எழுத்து
புதிதாய் ஒரு 'o' வந்து முளைத்தது.
காலையும் மாலையும் ஐம்பது தடவை
ஆங்கில எழுத்தில் புதிய முறைக்கு
மூன்று மாதம் விடாது எழுதியும்
போதிய திருத்தம் இல்லை என்பதால்
மறுமுறை கையில் ரேகையும் பார்த்து
இருந்த கிரகம் ஒன்பதின் பலனும்
புளூட்டோ நெப்டியூன் யூரேனஸ் உடன்
செயற்கைக் கோள்கள் நிலையும் பார்த்து
வள்ளுவராண்டும் சாலிவாஹன
வருஷம் மாதம் தேதியும் எல்லாம்
போட்டுச் சரியாய்க் கூட்டிப் பார்க்க
வண்ணார்பண்ணை டபுள்யூ என்று
பேரின் முன்னால் வந்து நின்றது.
படிப்பு மட்டும் மாட்டேன் என்றது.

லங்கைப் படிப்பு போ போ என்றது.
லண்டன் படிப்பு வா வா என்றது.
பட்டம் மட்டும் வரவே இல்லை.
ஆனாற் சிறிதோர் வேலை வந்தது.
காலப்போக்கில் பேரும் மாறி
டபுள்யூ.எஸ்.ஸி.ரட்ணமானது.
விம்பிள்டன் அவன் ஊருமானது.

ராசியும் எண்ணும் பேருடன் சேரின்
லண்டன் சீமை யோகம் கூடும்
சுடுவைக்க வீடு இருந்து
அம்மா அப்பா இரங்குவரென்றால்
பேரில் என்ன இருக்கிறதென்று
எவனாம் சொன்னான்? பேயன்.

–சி.சிவசேகரம்.

"எள்ளல் இளமை பேதமை மடன் என்று
உள்ளப்பட்ட நகை நான்கு"

என்பார் ஆசிரியர் தொல்காப்பியனார். மெய்ப்பாட்டியலில் எட்டு வகை மெய்ப்பாடுகளைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவற்றுள் நகைச்சுவையே முதலிடம் பெறுகிறது.

நகைச்சுவை - சொல்லுவோனின் திறமையை ஒட்டி அமைவதாகும். நகைச்சுவையானது அறிவாளியின் படைப்பு என்றால் மிகையல்ல. கற்பனையும் உடன் சேர்வது. எனவே, நகைச்சுவை என்பது இலக்கியத்தில் ஒளிவீடும் சுவையாகும்.

வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சீர்த்து எடுத்துக் கொண்டால், அவை நம்மை வாட்டித் துன்புறுத்தாது தப்பலாம். துன்பத்தில் துவண்டு போகாதிருக்க, அவற்றைப் பார்த்துச் சிரிக்கக் கற்றுக்கொள்வது நல்லது.

"நகைச்சுவை என்பது மனிதனை உயர்த்தும் அறிவுப் புரட்சி" என்றும் சொல்லியிருக்கிறார்கள். சமூகத்தில் உள்ள மூடநம்பிக்கைகள் மற்றும் சீர்கேடுகளைச் சீரியுக்குள்ளாக்கி, அந்த அபத்தத்தை உணரச் செய்வது - ஆயிரமாயிரம் பக்க ஆழ்ந்த விளக்கங்களை விட அதிக பலனைத் தர வல்லது. இன்றும் நமது பல தீவிர நம்பிக்கைகளும், விசுவாசங்களும் சீரியுக்குள்ளாக்கப்பட வேண்டியவையே. இல்லையேல், எதிர்காலம் முழுவதும் பிறர் நம்மைப் பார்த்துச் சிரிப்பர்.

சிரிக்கவும் சிந்திக்கவும் இரு கவிதைகள்.

இளநரை

இளமையிலேயே நரை வந்ததென்ன என்று
காரண காரியம் கேட்பீரேயானால்
இந்தக் குமாய்த் தண்ணீர் மீதுதான்
எனக்குப் பெருத்த சந்தேகம்.
விளம்பரங்களைப் பார்த்து
ஏமாந்து வாங்கும்
சோப்பு
ஷாம்பு
கூந்தல் தைலங்களின்
மகிமையையும் இருக்கலாம்.

பாரம்பரியக் குறையொன்றுமில்லை.
என் தாத்தா
அறுபது வயதிலும்
பிசிராந்தையைப் போல்
கருமயிர் கோதியவர்.

பித்த நரைதான் என்றார்
கிராமத்து வைத்தியர்
மருதாணி செம்பருத்தித்
தலைங்கள் தந்தார்.
வெறும் வயிற்றில்
கருவேப்பிலையை
இரண்டு மாதம் தின்னச் சொன்னார்.

வெளிநாட்டுப் பட்டம் பெற்ற
கைராசி டாக்டரோ
இரும்புச் சத்துக் குறைவு என்று
டொனிக்குகளாக எழுதித் தீர்த்தார்.

ஆனால்
எதற்கும் அசையாது
தான்தோன்றியாய்ப் படர்ந்து
செழித்து நின்றது நரை.
காற்றும் சூழலும் விஷமாகிவிட்டதும்
அரசியல் புழுதியில்
அனைத்துமே
நரகமாயுள்ளதும்
ரேஷன் அரிசியும், கலப்படப் பொருள்களும்
காரணமாகலாம் தான்....

இளமையிலேயே முதுமையின் தோற்றம்
இன்று எதிலுமுள்ளதென்று
ஆளுக்கு ஒரு காரணம்
ஆராய்ந்து பார்த்து
ஆரவாரத்துடன் மாற்றம் கூறுகின்றனர்.
எனக்குள் பொருமி நொதிக்கும்
பொறாமை, பொச்சரிப்பு
கோபதாபங்களின் பலனாயுமிருக்கலாம்.

இல்லத்தரசியின் இடியொரு பக்கமும்
இந்தப் பிள்ளைகள் படுத்தும் பாடும்
உற்றார் உறவினர் நமட்டுச் சிரிப்பும்
அலுவல் தலைவலி அவதியும் என்று
முற்றிலும் உதிர்ந்து வாழ்க்கையாகாமல்
இவ்வளவுக்காவது
தரித்திருக்கிறதே என்று
எனக்குள் ஒரு நிம்மதி.

இன்னும் கொஞ்சக் காலம்
இப்படியே சமாளித்துவிட்டால் – பின்பு
வயசாச்சே என்று
பழியைத் தீர்க்கலாம்
அவையில் முந்தியிருந்து
வெண்மயிர் கோதலாம்!
–கால சுப்பிரமணியம்.

பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி

பெயர் :
சே.இசைஅமுதன்.
வயது : 22
முகவரி : இல. 56,
முதலியார் குளம்,
செட்டிகுளம்.
பொழுதுபோக்கு:
தினமுரசு பார்த்தல்.

பெயர் : கு. மதனன்
வயது : 20
முகவரி : சாரதா வீதி,
காரைதீவு–06(E.P)
பொழுதுபோக்கு:
பேனா நட்பு,
இசைத்துறை.

பெயர் : கே.குமார்
வயது : 24
முகவரி : AL.
DHANOOB,
p.o.Box-127119,
DOHA, QUTAR.
பொழுதுபோக்கு :
பத்திரிகை, பேனா
நட்பு.

பெயர் : டி.பிரசாந்தன்
வயது : 22
முகவரி : kaamco,
p.o.Box-10843,
Wakrah Camp,
DOHA, QUTAR.
பொழுதுபோக்கு : தினமுரசு,
ரீவி.

உதடுகளுக்கு என்ன தேவை?

பார்ப்பவர்களைச் சட்டென்று கவரும் உதடுகளுக்குத் தேவை லிப்ஸ்டிக். உங்கள் மூடு, உடை, விருப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ப நிறத்தைப் பயன்படுத்தச் சிறந்த இடம் உதடுகள்தான்! இளஞ்சிவப்பு முதல் பிரவுண் வரை, வைலெட் முதல் கறுப்பு வரை எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்!

லிப்ஸ்டிக் வெவ்வேறு வகைகளில் கிடைக்கும்.

★ கிளாஸ்:- இது பளபளப்பானது, அதே நேரத்தில் மிகக் குறைந்த அளவில் நிறத்தைத் தரக் கூடியது. இலேசான நிறம் பெறச் சிறந்தது. ஆனால் அதிக நேரம் நீடிக்காது.

குறிப்பு:- லிப் பென்ஸிலால் உதடுகளில் நிறத்தைப் பூசிவிட்டு லிப் கிளாஸ் தடவினால், நீண்ட நேரம் நீடிக்கும்.

★ மெட்டாலிக் (ஷிம்மர்):- இதைப் பார்த்தால் அதிக நிறம் கொண்டது என்று தோன்றலாம். ஆனால் இதைத் தடவினால் இலேசான நிறத்தைத் தரும். வெளிச்சத்தில் மின்னும் தன்மை கொண்டது.

குறிப்பு:- அதிக அளவில் நிறத்தை விரும்பினால், மேட் லிப்ஸ்டிக்கை உதடுகளில் பூசிய பின்னர் இதைத் தடவலாம்.

★ க்ரீம்:- இதில் அதிக அளவில் கன்டிஷனரும், மாய்ஸ்சுரைஸரும் உள்ளன. உதடுகளுக்கு மென்மையான தோற்றத்தைத் தரக் கூடியது, அதே நேரத்தில் அதிக அளவில் நிறமும் பெறலாம்.

குறிப்பு:- உதடுகளின் வெளிப்

புறத்தை லிப் பென்ஸிலால் வரைந்து விட்டு க்ரீம் லிப்ஸ்டிக்கைத் தடவினால் உதட்டைவிட்டு வெளியே வராது.

மேட்:- ஆழமான மற்றும் அதிக அளவில் நிறத்தைப் பெறச் சிறந்தது மேட் லிப்ஸ் டிக். இதில் பளபளப்பு இருக்காது. அதே நேரத்தில் உதடுகளை உலர வைக்கும் தன்மை கொண்டது.

குறிப்பு:- உதடுகள் உலராமல் இருக்க முதலில் மாய்ஸ்சுரைஸரைப் பூசி அதன் பிறகு மேட் லிப்ஸ்டிக் தடவ வேண்டும்.

லாங் லாஸ்டிங்:- அதன் பெயரைப் போலவே, இது 5 முதல் 8 மணி நேரம் நீடிக்கும். ஆழமான நிறத்தைத் தரும், எளிதில் அழிந்துவிடாது. ஆனால் உதடுகளை உலர வைக்கும்.

குறிப்பு:- உதடுகள் உலர்ந்து விட்டதைப் போல் தோன்றினால் கன்டிஷனர் தடவலாம்.

லிக்விட்:- திரவ வடிவில் இருக்கும் இந்த லிப்ஸ்டிக்குடன் அதைத் தடவ சிறிய பிரஷ் இருக்கும். நீண்ட நேரத்திற்கு அழியாமல் இருக்கும். பளபளப்பு தேவையென்றால் இதன் மேல் லிப் கிளாஸ் தடவலாம்.

குறிப்பு:- இது விரைவில் உலர்ந்துவிடுவதால் இதைப் பயன்படுத்தும்போது கவனம் தேவை.

லிப் பென்ஸில் :- இது உதடுகளை மேலும் அழகாக்குகிறது.

லிப்ஸ்டிக்கின் நிறத்தை அதிகமாக்க, லிப்ஸ்டிக் தடவுவதற்கு முன் லிப் பென்ஸில் தடவலாம்.

லிப் பென்ஸில் தடவுவதால் லிப்ஸ்டிக் உதடுகளைவிட்டு வெளியே பரவாமல் இருக்கும்.

உதடுகளைப் பெரிதாக்க உதட்டுக்கு சற்றே வெளியே லிப் பென்ஸிலால் வரைந்து, அதன் பிறகு லிப்ஸ்டிக் தடவலாம்.

உதடுகளைச் சிறியதாக்க, உதடுகளில் ஃபவுண்டேஷன் தடவி, உதட்டுக்கு உட்புறம் லிப் பென்ஸிலால் உதட்டின் வடிவத்தை வரைய வேண்டும். அதற்குள் லிப் ஸ்டிக் தடவலாம்.

∴பேஷன் டிப்ஸ்

காலில் பகுதி கிழிந்த ஜீன்ஸ் பேன்ட்டை முழங்காலுக்கு மேல் வெட்டி அதை ஷார்ட்ஸாக மாற்றலாம்.

கிளாஸ் அணிவது வெறும் ∴பேஷன் என்று நினைத்து, கண்டதை அணிந்துவிட வேண்டாம். கண்ணுக்கே உலை வைத்துவிடக் கூடும்.

குர்த்தா பொதுவாக முழங்காலுக்கு மேல் 4 முதல் 5 அங்குலம் உயரம் இருக்க வேண்டும். ஆனால், உங்கள் இடுப்புப் பகுதியின் அளவு அதிகமாக இருந்தால் குர்த்தாவை சற்று நீளமானதாக்கிக்கொள்வது நல்லது.

கூலிங் கிளாஸ் அணிந்து கண்ணாடியில் பார்த்தால் கண்கள் தெரியக்கூடாது. அப்படித் தெரிந்தால், அந்த லென்ஸ் உங்கள் கண்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்காது.

உடைகள் வாங்கும்போது கவனம். இறுக்கமான உடைகள் உங்களைக் குண்டாக காட்சியளிக்க வைக்கும். சரியாகப் பொருந்தும் உடைகளே சிறந்தவை.

மெல்லிய நெடுக்குக் கோடுகள் (Vertical Stripes) போட்ட உடைகள் உங்களுக்கு மெலிந்த தோற்றத்தைத் தரும்.

பழைய 'டாப்ஸ்' அல்லது 'சல்வார் கமீஸை' புதியதாக மாற்ற எளிய வழி. புதிய பட்டன், லேஸ் அல்லது எம்பிராய்டரி சேர்த்தால் புது உடை ரெடி!

ஆக்ஸிடைஸ்ட் நகைகள் எந்த விதமான உடையோடும் அழகாகத் தோன்றும். தங்க நகைகள் போல் இல்லாமல் இவற்றை மார்டன் உடைகளோடும் அதிக அளவிலும் அணியலாம்.

கோடை காலத்தில் எப்பொழுதும் 'பேஸ்டல்' நிற உடைகளை அணியுங்கள்.

புதிய ∴பேஷன் : குட்டையான கை அல்லது கையில்லாத 'ஸ்லீவ் லெஸ்' உடை.

பழைய ∴பேஷன் : நீண்ட கை வைத்த உடைகள்.

நலமாக வாழ்வோம்

யோகமுத்ரா

செய்முறை :

1. விரிப்பின் மீது பத்மாசனம் செய்து அமரவும்.
2. கைகளை முதுகுக்குப் பின்னால் கொண்டுவந்து வலது கை மணிக்கட்டை இடது கையால் பற்றிப் பிடிக்கவும்.
3. மெதுவாக முன்னால் குனிந்து மார்பை முன்னோக்கித் தள்ளி வயிற்றை எவ்வளவுக்கு உள்ளே இழுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு உள்ளே இழுத்து, நெற்றி தரையில் படும்படி வைக்கவும்.
4. சாதாரண மூச்சில், கண்களை மூடியபடி 50 எண்ணிக்கை இருக்கவும்.
5. மெதுவாக எழுந்து நிமிர்ந்து அமரவும் திரும்பவும் முன்னால் வளைந்து செய்யவும்.
6. மூன்று முறை செய்து முடிக்கவும்.

பத்மாசனத்தில் கண்களை மூடி சிறிது நேரம் இருந்துவிட்டு, கால்களைப் பிரித்து நீட்டவும்.

குறிப்பு :

1. அடி முதுகுவலி, கழுத்துவலி உள்ளவர்கள் முடிந்தளவு செய்து விட்டு விடவும். வலி அதிகம் ஏற்பட்டால் மச்சானம் சில வாரங்கள் செய்துவிட்டு இந்த ஆசனத்தை செய்யவும்.

2. பத்மாசனம் போட முடியாதவர்கள், அர்த்த பத்மாசனம் சுகாசனம் செய்து முன்னால் குனிந்து இந்த ஆசனத்தைச் செய்யலாம்.
3. மூன்று மாத பயிற்சிக்குப் பிறகு முன்னால் குனிந்து கைகளை கட்டியபடி உயர்த்திப் பிடித்துப் பழகலாம்.

யோகமுத்ரா செய்வதால் ஏற்படும் நன்மைகள் :

1. மலச்சிக்கல், அஜீரணம் ஆகியவற்றைப் போக்குகிறது.
2. நரம்புத் தளர்ச்சி, தாது பலமின்மை ஆகியவற்றைப் போக்குகிறது.
3. தொடர்ந்து செய்துவந்தால் குண்டலினி சக்தி எழும்புகிறது.
4. கல்லீரல், மண்ணீரல் வீக்கம் ஏற்படாமல் செய்கிறது. மஞ்சள் காமாலை நோய் வராமல் தடுக கிறது.
5. இடுப்பு வலி, முதுகு வலி, முதுகிலுள்ள எலும்புகள் ஒன்றோடு ஒன்று உராய்வதாலும் ஒன்றின் மீது ஒன்று ஏறுவதாலும் ஏற்படும் வலிகளைப் போக்குகிறது.
6. கோப உணர்ச்சி, படபடப்பு ஆகியவற்றைப் போக்குகிறது.
7. நீண்ட நேரம் அமர்ந்து எழுத்து வேலை, தட்டச்சு செய்தல், படம் வரைதல், கார், ஸ்கூட்டர் ஓட்டுதல் ஆகியவற்றால் ஏற்படும் முதுகு வலி, முதுகு தசை வலி, தோள்பட்டை வலி ஆகியவற்றைப் போக்குகிறது.
8. மூல வியாதிக்கும், நீரிழிவு நோய்க்கும் அதிக பலனைத் தரும்.
9. இவ்வாசனம் செய்கின்ற போது நுரையீரல் பலப்படுகிறது.
10. வயிறு சிறுத்து, மார்பு விரிந்து, அழகிய தோற்றம் உண்டாகும்.
11. பெண்கள் தங்கள் உடலை கட்டுக்கோப்புடன் வைத்துக்கொள்ள உதவும்.
12. முகத்தில் அழகு (தேஜஸ்) ஏற்படும்.
13. வயிற்று வலி, வயிற்றுப் போக்கு (அமீபாயாஸிஸ்) ஆகியவை விரைவில் குணமாகும்.
14. உடல் எடை, தொந்தி குறையும்.

வேடிஸ் ஸ்பெஷல்

முகம் பொலிவு பெற குறிப்புகள்

சாதாரணமாக நடப்பதை விட சற்று மெதுவாக நடக்க முயலுங்கள்.

மகிழ்ச்சியான, மன நிறைவான உணர்ச்சிகளை தினமும் பத்து நிமிடங்கள்

மனதிலே கொண்டுவாருங்கள்.

சாதாரணமாகப் பேசுவதை விடக் குறைவாகப் பேசுங்கள். இனிமையாகப் பேசுங்கள்.

உங்களுக்காகத் தினமும் 30 நிமிடங்களை ஒதுக்குங்கள். அந்த முப்பது நிமிடங்களுக்குள் மற்றவர்களை நுழைய விடாதீர்கள்.

சாப்பிட்ட உடனே எழுந்து ஓடாதீர்கள். அமர்ந்து பின்னர் எழுந்து செல்லுங்கள்.

பேருந்தில் போகும் போதும், ஒரு கூட்டத்தில் பங்கேற்கும்போதும், மற்ற நேரங்களிலும் மக்களின் முகங்களைப் பாருங்கள்.

பிறர் மேல் உள்ள அன்பை வார்த்தைகளில் வெளிப்படுத்துங்கள்.

உங்கள் கோபத்திற்கு உரிய காரணங்களைக் கண்டுகொள்ள முயலுங்கள்.

அழகான மரம், மலர்

போன்ற இயற்கைக் காட்சிகளை நின்று இரசியுங்கள்.

உங்கள் முகங் கூட மலர்ச்சியாக இருக்க முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். பிறரைப் பார்க்கும் போது புன்முறுவல் பூத்துப் பழகுங்கள்.

'வேகமாகப் போகிறவன் முகம் கவர்ச்சியாகவோ, அருளானதாகவோ இருக்க முடியாது' என்பதை உணருங்கள்.

சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது : ஷோபா

தேவையான பொருட்கள்:-

நிபன் சான்ட்விச்

தேவையான பொருட்கள்:

பாண்	- 1
பட்டர்	- 100 கிராம்
உருளைக்கிழங்கு	- 100 கிராம்
கரட்	- 50 கிராம்
பீற்றூட்	- 50 கிராம்
பெரிய வெங்காயம்	- 1
மிளகுத் தூள்	- 2 தேக்கரண்டி
உப்புத் தூள்	- அளவாக

செய்முறை :-

உருளைக்கிழங்கை அவித்து உரித்து உராய்கருவியில் உரசிக்கொள்ளவும்.

கரட்டையும், பீற்றூட்டையும் சுத்தஞ் செய்து உராய்கருவியில் உரசி வேறு வேறாக வைத்துக்கொள்ளவும்.

வெங்காயத்தைச் சுத்தஞ் செய்து குறுணலாக வெட்டிக்கொள்ளவும்.

உருளைக்கிழங்கு, கரட், பீற்றூட் இவற்றைத் தனித்தனி பாத்திரங்களில் இட்டு பட்டர், மிளகு, உப்புத் தூள், வெங்காயம் இவற்றை ஒவ்வொன்றுடனும் அளவாகச் சேர்த்து நன்கு கலந்து கலவைகளாக்கவும்.

பாணை மெல்லிய துண்டுகளாக வெட்டி நான்கு பக்கக் கரைகளையும் அகற்றி பட்டரை ஒவ்வொரு துண்டிலும் பூசவும்.

ஒரு பாண் துண்டின் மேல் கிழங்குக் கலவையை வைத்து அழுத்தமாகப் பூசி அதன் மேல் இன்னுமொரு துண்டை வைத்து பீற்றூட் கலவையை வைத்து அழுத்தமாக்கி பின் இன்னுமொரு துண்டை மேலே வைத்து அதில் கரட் கலவையை வைத்து அழுத்தமாகப் பூசி அதன் மேல் ஒரு பாண் துண்டை வைத்து விரும்பிய வடிவில் வெட்டிக்கொள்ளவும்.

இந்த முறை அர்ஜுனுக்குத் தெரியாமல் விசாரிப்பது என்று தீர்மானித்துவிட்டேன்.

அர்ஜுன் அடுத்த வாரமும் பம்பாய் போக வேண்டி இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், இதை விசாரித்துத் தீர்த்துவிடலாம் என்று தீர்மானித்தேன். மனசுக்குள் ஒரு முள் போல இருந்தது அந்தச் சந்தேகம். எதற்காக கிரெடிட் கார்டு மூலம் இத்தனை செலவு செய்திருக்கிறார்? எதற்காக என்னிடம் எல்லாம் கம்ப்யூட்டர் தப்பு என்று பொய் சொல்லியிருக்கிறார், என்பதற்குக் கிடைத்த வழக்கமான விடைகளை நான் நம்ப விரும்பவில்லை. அர்ஜுன் வேறு எதற்கோ பொய் ஜோடனை செய்கிறார் என்று உள்ளுணர்வில் தெரிந்தது. அந்த 'வேறு ஏதோ' இந்த ரூபத்தில் வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

கிரெடிட் கார்டின் பெரும்பாலான பில்கள் ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டல் பில்களாக இருந்ததால் ராதாகிருஷ்ணன் சாலையில் ரோட்டை ஒட்டி இருந்த அந்தப் பெரிய ஓட்டலுக்குப் போனேன். நிறுத்த இடம் போதாமல் தெருவில் வழிந்தன கார்கள். பெரிய தலைப்பாகை போட்டவர் கண்ணாடிக் கதவைத் திறந்து திறந்து, ஏஸி உள் சுகத்துக்குள் அனுமதித்துப் புன்னகைத்தார்.

நான் முதலில் 'ரிஸப்ஷன்' டெஸ்கில் உட்கார்ந்திருந்த சில்க் சுந்தரியிடம் விசாரித்தேன். அவள் தன் எதிரே இருந்த கம்ப்யூட்டரில் எதையோ விரல்களால் வினவிவிட்டு, "கிரெடிட் கார்டு டிப்பார்ட்மெண்ட் முதல் மாடியில் ஆர்ட் காலரிக்குப் பக்கத்தில் இருக்கிறது" என்றாள்.

அங்கே அக்கவுண்ட்ஸ் மனேஜர் தியாகராஜன் என்பவரைச் சந்தித்தேன்.

தியாகராஜன் தாம் படித்த எம்.பி.ஏ. எல்லாம் பயன்படுத்தி என்னைக் குளிப்பாட்டி உட்காரவைத்து "ஸோ? யு ஆர் மிஸஸ் அர்ஜுன்? அர்ஜுன் எங்கள் வேல்யுபிள் கஸ்டமர். இந்த பில் எல்லாம் அவர் நேரா சைன் பண்ணதுதான் என்று தெரிய வேண்டும். அவ்வளவுதானே?"

"தியாகராஜனும் தம் கம்ப்யூட்டரை கேட்டார். ஆம் அவருடைய பில்கள்தாம். எல்லாம் செட்டில் ஆகிவிட்டதே! வெய்ட் எ மினிட்!" தயக்கம்.

"அர்ஜுன் இங்கே தங்கியிருக்கிறாரே!"

"தங்கியிருக்கிறாரா?"

"ஆம், ரூம் நம்பர் 1112 இன்னும் 'செக் அவுட்' ஆகவில்லை என்று கம்ப்யூட்டர் சொல்கிறது."

"அப்படியா?" என்றேன், உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு.

டெலிபோனை எடுத்து "பேசறீங்களா?" என்றார்.

"இல்லை. நேரில் போய்ச் சந்திக்கிறேன். நான் அவருடைய மனைவி அல்லவா?"

"ட்ரூ! ட்ரூ! எனிதிங்? வேறு எதாவது சேவை?"

இந்த சேவையே போதும் என்று பதினோராவது மாடி பன்னிரண்டாம் எண் அறைக்கு லிப்டில் செல்லும்போது என் மன எண்ணங்களைக் கட்டுப்படுத்தினேன். இதற்கு என்ன அர்த்தம்? பம்பாய் போகிறேன் என்று ஓட்டலில் மறைந்திருக்கிறாரே என்ன காரணம்? பிஸினஸ் விஷயமாகத் தலைமறைவாக இருக்க வேண்டிய கட்டாயமா? அப்படியானால் போன தடவை கூட பம்பாய் போகவில்லையா? அந்த பாலாமணி சொன்னது நிஜம்தானா? எதற்காகத் தலைமறைவாக இருக்க வேண்டும்?

அங்கே சென்று கதவருகில் இருந்த பொத்தானை அழுத்த, உள்ளே இன்னிசையுடன் கூப்பிட்டது. கதவுக்கு மேல் 'டு நாட் டிஸ்டர்ப்' என்று அட்டை மாட்டியிருந்தது. மறுபடி பொத்தானை அழுத்த சற்று நேரம். ஒரு யுகம் எனக்கு.

கதவு ஒருக்களித்துத் திறக்க, அர்ஜுன் அரை டிராயரில் நின்றுகொண்டு கடுங் கோபத்துடன் "ஹு தி ஹெல்....." என்று சொல்லி முடிப்பதற்குள் என்னைப் பார்த்து "ரே.....கா!! நீயா? இங்க எப்படி?"

"உள்ளே வரலாமா?"

அர்ஜுன் கதவை முழுதும் திறக்காமல் "கொஞ்ச நேரம் 'லாபி'ல் இரேன்....டிரெஸ் பண்ணிக்கொண்டு....."

"உள்ளே வரலாமா?" என்று கதவைத் தள்ளித் திறந்தேன்.

எந்த மனைவியையும் தீப்பற்றி எரிய வைக்கும் காட்சி அது. படுக்கையில் ஒரு பெண் 'ஹு இஸ் இட் டார்லிங்?' என்று குரல் கொடுத்தாள். பச்சை நிறத்தில் மெலிசாக நைட் டிரஸ் போட்டுக்கொண்டு சோம்பல் முறித்தாள். அறை முழுவதும் அவள் பெண்மைச் சாதனங்கள் ஆரவாரித்தன.

"ரேகா! லுக்! நான் எல்லாத்தையும் விளக்கமாச் சொல்றேன்!"

"மை காட்! விளக்கமா?"

"யார் கண்ணா அது!"

"ஷட் அப்!"

"இதுக்கெல்லாம் ஒரே ஒரு விளக்கம்தான் அர்ஜுன்."

"நான் சொல்றதைக் கேளு. எதும் அவசரமா முடிவு பண்ணிடாதே ரேகா! வீட்டுக்குப் போ. உடனே வரேன்"

"அர்ஜுன் கம்டா! காப்பி ஆ.....றிப் போறதில்லை என்ன இது பாதில!"

இதுவரை நான் பற்பல காரணங்களுக்காகச் சேமித்து வைத்திருந்த கண்ணீர் எல்லாம் ஒரே சமயத்தில் மதகு திறந்தது போல் மார்பில் கொட்டியது.

"ச்ச்சே! கடவுள்தான் உன்னைத் தண்டிக்கணும்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு வந்தேன்.

அர்ஜுன் அரை டிராயரும் வெறும் மார்பும் ஹவாய் சப்லுமாக என்னை லிப்ட் வரை தொடர்ந்து வந்தபோது ஒரு வெள்ளைக்கார ஜோடி எங்களை வினோதமாகப் பார்க்க, நான் லிப்ட் அருகில் இருந்த 'ஆஷ்டிரே'யை எடுத்து சிகரெட் சாம்பலை அர்ஜுன் முகத்தில் வீசினேன்.

கண்ணைக் கசக்கிக்கொள்ள காலி லிப்ட் வந்து திறந்துகொண்டது.

அர்ஜுன் அதைத் தடுத்து நிறுத்தி, "சொல்றதைக் கேட்டுட்டுப் போ. எங்க போறே! இது ரொம்ப சின்ன விஷயம். பெரிசு பண்ணாதே! ஐயேம் ஸாரி ஸாரி! மன்னிப்புக் கேட்டுக்கறேன்" என்று ஏதேதோ சொன்னார்.

நான் இருக்கப் பிடிக்காமல், அவரைப் பார்க்க பிடிக்காமல் லிப்ட் அருகே இருந்த காரிடாரில் நடந்து .பயர் எக்ஸிட் என்று அறிவித்த கதவைத் திறந்து ஓடி, சுழல் படிகளில் வெறிபிடித்தாற் போல் பதினொரு மாடிகள் இறங்கினேன். கீழே வந்தேன்.

என்ன செய்வது? எங்கே போவது? யாரிடம் முறையிடுவது? எல்லோரும் தெரிந்து வைத்திருந்தார்கள்.

கீதா, ஏன் அர்ஜுனின் அப்பா அம்மாவுக்குக் கூடத் தெரிந்திருந்தாலும் ஆச்சரியமில்லை. உலகமே எனக்கு எதிராகச் செய்த சதி - என்ன செய்வேன் என்று மலைப்பாக இருந்தது. அந்த வீட்டுக்குப் போக மாட்டேன்.

ஆட்டோ ரிக்ஷாவுக்குக் காத்திருந்த போது அர்ஜுன் அவசரமாகப் பனியன் மாட்டிக்கொண்டு ஓடி வந்து "ஸ்டாப்" என்று கத்தி, கொஞ்ச தூரம் தொடர்ந்தார். எங்கே போவது? உடனே யாரைப் பார்ப்பது? கீதாவைப் பார்க்கலாமா? கீதாவும் இந்த சதியில் இருப்பாள்! முற்றிலும் அவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் யாராவது நிறுத்தி, "அய்யா, என் கதையைக் கேளுங்கள்!" என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. இல்லை ஏதாவது கோவிலில் போய் உட்கார்ந்துகொள்ளலாம் போல் இருந்தது.

"எங்கம்மா போவணும்?"

"திருவல்லிக்கேணி கோவிலுக்கு போங்க."

வாசலில் சின்னதாக ஒரு தேரை அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். செருப்பு வைக்கவும் அர்ச்சனைச் சாமான்கள் விற்கவும் இருந்த பெண், "வாம்மா மவராசி! தட்டு வாங்கிட்டுப் போம்மா" என்று இடுப்பில் ஒரு குழந்தையும் அருகில் இரண்டு குழந்தைகளுமாகப் பூ தொடுத்துக் கொண்டிருந்தாள். பிராமண விதவைகள் தூணுக்குத் தூண் உட்கார்ந்திருந்தார்கள். உள்ளே நுழைந்தேன்.

சன்னிதியில் திரை போட்டிருந்தது. சுற்றி வந்தேன். சலவைக்கல்லில் சகஸ்ர நாமமும் ஆழ்வார் பாசுரங்களும் பொறித்திருந்ததைச் சிரத்தையில்லாமல் படித்தேன். மனத்துக்குள் முந்நூறு எண்ணங்கள் அலைந்தன. எதிர்காலம் என்ன எனக்கு? இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எவ்வாறு போராட வேண்டும்? அங்கே ஒரு மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு உள்ளங்கையைப் பார்த்துக்கொண்டு சோர்ந்திருந்தேன். கண்ணீர் கை ரேகையை அழித்தது. டில்லிக்குக் கடிதம் எழுதினால் அப்பா என்ன சொல்வார்?

எழுதுவது -சுஜாதா

'உடனே வந்து விடு, இல்லை நான் வந்து மாட்டரை செட்டில் பண்ணுறேன்' என்பார்.

அம்மா, 'புருஷான்னா அந்த மாதிரி சபலமா வெளில போற மாதிரி ஏன் நடந்துக்கணும். நீ சாயங்கால வேளையில் தலையை விரிச்சுப் போட்டுண்டு இருப்பாயாம். உன் மாமியார் சொன்னாள்!' என்பாள்.

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)

உதவும் கலைஞர்கள்

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நல்வாழ்வுக்கு உதட்டுச் சாயம், லிப்களாஸ் விற்பனையில் வரும் வருமானம் வழங்கப்பட உள்ளது.

அமெரிக்காவில் உள்ள பிரபல அழகுசாதனத் தயாரிப்பு நிறுவனமான மேக் காஸ்மெடிக்ஸ், தங்களது தயாரிப்புகளைப் பிரபலப்படுத்துவதற்காக சில இசைக் கலைஞர்கள், மாடல் அழகிகள் ஆகியோரைப்பயன்படுத்த தீர்மானித்துள்ளது. அவர்களில் கிறிஸ்டினா ஆக்ரீல்லாவும் ஒருவர். இவர்கள் இந்த நிறுவனத்தின் உதட்டுச் சாயம், லீப்களாஸ் ஆகியவற்றின் விற்பனையை அதிகரிக்க உதவுவார்கள். இவற்றின் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதி, எயட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நல்வாழ்வுக்கு வழங்கப்பட உள்ளது. எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட உள்ளன.

அரைகுறைாக உடையணிந்தால் ஏகத்துக்கும் விமர்சிப்பவர்களுக்கு இந்தச் செய்தி கொஞ்சம் சங்கடமாக இருக்கும் என்று நம்பலாம். தோற்றம் எப்படி என்பதை விடவும், அதற்கான நோக்கம் என்ன என்று பார்க்கும்போது மனம் நெகிழ்ந்துபோகிறது. எயிட்ஸினால் இயன்ற பாதிக்கப்பட்டவர்களுக்கு வழிகளில் நமது உதவியும் போய்ச் சேர வேண்டும் என்று எவரேனும் எண்ணிக் கருமமாற்றினால் நல்லது.

மனந் திறந்த நடிகை

இப்போதெல்லாம் நாம் சந்தேகிக்கும் நபர்களில் எவருமே உள்ளதை உள்ளபடி சொல்பவராக இல்லை. வாயைத் திறந்தாலே உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்பவராகவும் சுத்தப் பொய் பேசுபவராகவுமே இருக்கின்றனர். இங்கே படத்தில் நடிகை தனக்கு இப்படித்தான் மனந் திறந்து பேசமுடியும் என்று கூறுகிறார். ஜேர்மனியில் 'ஜேர்மனேல்' என்ற பெயரில் சர்வதேச திரைப்பட விழா நடக்கிறது அல்லவா? உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் சுமார் 400 திரைப்படங்கள் போட்டியிடும் இதில், அமெரிக்காவின் புகழ் பெற்ற நடிகர் எதான் ஹாக்,



நடிகை ஜூ லி டெப்லி ஆகியோர் நடித்த 'பீபோர்சன் செட்' (சூரிய அஸ்தமனத்துக்கு முன்னால்) என்ற படம் திரையிடப்பட்டது. அதையொட்டி விழாவில் பங்கேற்ற இருவரும் புகைப்படக்காரர்களுக்கு விசேஷ போஸ் கொடுத்தனர். அப்போது நடிகர் எதானுடன் நடிகை ஜூ லி மனம் திறந்து பேசிய காட்சியைப் படத்தில் காணலாம்.

கவர்வது அழகு

படத்தைப் பார்த்ததுமே இதற்கு முன்பொருமுறை குழந்தையுடன் முதலைக்கு உணவு கொடுத்து நம்மிடம் கண்டனப் பாட்டு வாங்கிய ஆசாமிதான் என்று புரிந்திருக்கும். அதே நபர் இப்போது நிகழ்ச்சியை வித்தியாசப்படுத்துவதற்காக அழகி ஒருத்தியை தனக்கருகில் வைத்துக்கொண்டு முதலைக்கு உணவு கொடுத்து நிகழ்ச்சி நடத்தினார். பாவம்! முதலையும் நிகழ்ச்சிப் பார்வையாளர்களும் ஸ்டீபனின் தந்திரத்தையா அழகியின் அழகையா பார்ப்பது என்ற குழம்பிப் போய்விட்டார்கள்.

உங்களுக்கு எப்படி?

அவுஸ்திரேலியா, கோல்ட் கோஸ்டில் உள்ள முதலைப் பண்ணையில் முதலை வேட்டைக்காரர் ஸ்டீபன் இர்வின் தரும் உணவைக் கவ்விப் பிடிக்க, நீரிலிருந்து எழுகிறது முதலை. உடன் அமெரிக்க மாடல் அழகி ஜோன்னா க்ருயா.



6 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

"அவனது கால்களை காப்பாற்ற முடியுமாக இருந்தால் தவிர, யாரும் அவனைத் தொடக்கூடாது" என்று உரத்த குரலில் சத்தமிட்டார். அவர் தனக்குத் தெரிந்தவரும் உறவினருமான டொக்டர் ரோதாமை உடனே ஆஸ்பத்திரிக்கு வரும்படி மன்றாடினார். உடனே டொக்டர் எனது தந்தை அனுமதிக்கப்பட்டிருந்த ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்தார். எனது தந்தையை அவர் பரிசோதித்தார். யாரும் அந்த பையனுடைய கால்களைத் துண்டிக்க வேண்டாம் என வேண்டிக் கொண்டார்.

அப்போது எனது தந்தையார் வலி நீங்கினாலும் மிக்க அதிர்ச்சியுடன் விழிகளைத் திறந்து பார்த்தார். அருகிலிருந்த அவரது தாயார் அவரது கால்கள் காப்பாற்றப்பட்டது தொடர்பாக கண்ணீர் மல்க விசயங்களை விபரித்தார். எனது தந்தையின் கால்கள் காப்பாற்றப்பட்டது. அவரது தாயின் மனவுறுதியினால் எனும்போது, மனவுறுதியின் அவசியமும் எச்சந்தர்ப்பத்திலும் நிலைகுலையாது இருப்பதன் அவசியத்தையும் அச்சந்தர்ப்பத்தைவைத்து நான் கற்றுக் கொண்டேன்.

எங்களது வீடு ஒரே ஒரு படுக்கை அறை கொண்ட வீடாக இருந்தது. வீட்டின் வரவேற்பறையில் பலர் தூங்க வேண்டி இருந்தது. ஆனால் பிற்காலத்தில் எனது தந்தையின் கடின உழைப்பினால் நாங்கள் அடிப்படை வசதிகளை அதிகமாகப் பெற்றோம். அப்போது கூட எனது தந்தை தனது பழைய வாழ்கையை மறக்காதவராகவே இருந்தார்.

எனது தந்தை, எனது தாயை ஒரு அங்காடியில் வைத்தே சந்தித்தார். அடிக்கடி அந்த அங்காடிக்கு பொருட்கள் வேண்டுவதற்காகச் செல்லவேண்டி இருந்தது. அவரது தன்னம்பிக்கை, நகைச்சுவை உணர்வு எனது தாயை அதிகமாக ஈர்த்தது. நீண்டகால நட்புக்குப் பிறகு எனது பெற்றோர் 1942இன் ஆரம்ப கட்டத்தில், ஜப்பானியர் பார்ல் துறைமுகத்திற்கு குண்டு போட்ட சொற்ப காலத்திற்குள் மண வாழ்வில் இணைந்தனர்.

சிக்காக்கோவுக்கு அருகே உள்ள ஒரு சிறு நகரத்தில் அவர்கள் குடியேறினர். அப்போது என்னு தந்தையார் கடற்படையில் இணைந்தார். அது உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரர் ஜீன் டனியின் பெயரைக் கொண்ட ஒரு விசேட கடற்படைப் பிரிவாக இருந்தது.

அவர் கடற்படையில் நூற்றுக் கணக்கான இளம் மாலுமிகளைப் பயிற்றுவிக்கும் அதிகாரியாக விளங்கினார். அம்மாலுமிகள் அப்போதய யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களது "பயிற்சி முடித்து அவர்கள் வெளியேறும் போது அவர்களில் பலர் உயிருடன் திரும்புவது சாத்தியமில்லை" என தான் உணர்ந்து அக் கணத்தில் மிக மனவேதனையடைந்ததாக நாங்கள் வளர்ந்தபோது அவர் எங்களிடம் துக்கம் தளும்பக் கூறினார்.

தனது சகோதரன் சகோதரிகளுடன் ஹிலாரி

அவர் இறந்தபோது அவரின் கீழ் பணியாற்றிய பலரிடமிருந்து எங்களுக்கு அஞ்சலிக் கடிதங்கள் வந்தன. அக்கடிதங்களில் பலர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பி வைத்தனர். அப்படங்களில் ஏதோ ஒரு வகை குறிப்பிட்ட மாலுமிகளுக்கு மத்தியில் முன்வரிசையில் அவர் கம்பீரமாக வீற்றிருந்தார். அப்படங்களில் எனது தந்தை 1942களில் இருந்த சினிமா நட்சத்திரங்களை விட எனக்கு அழகானவராகத் தெரிந்தார்.

எனது தந்தையார் ஸ்க்ரேண்டனிலிருக்கும் அவரது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார். தனது ஒவ்வொரு குழந்தையையும் ஞானஸ்தானம் பண்ணுவதற்காக கோர்ட் ஸ்ரீட் மெதடிஸ்ட் தேவாலயத்திற்கு அனுப்பிவைத்தார். அவர் சிறு வயதில் தினமும் வழிபாடு செய்து வந்த தேவாலயமது. எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது எனது பாட்டி ரொதாம் காலமானார். எனக்கு அவரைத் தெரியும்போதே அவர் பார்வைக்குறைபாட்டுடன் இருந்தார். அப்படி அவர் இருந்தும் ஒவ்வொரு நாளும் எனக்கு அவர் ஆடை அணிந்து தலைவாரி விடுவார். ஆனாலும் நான் எனது பாட்டனாருக்கே நெருங்கியவளாக இருந்தேன்.

நான் பிறந்தபோது அவருக்கு அவரது ஐம்பதாண்டு பணியின் காரணமாக ஒரு தங்கக் கடிகாரம் பரிசாகக் கிடைத்தது. அவர் ஏற்கனவே ஓய்வு பெற்றிருந்தார். அவர் மிகவும் அன்புமிகுந்தவராக இருந்தார். அவர் அந்தத் தங்கக்கடிகாரத்தை எனக்கு அன்புடன் பரிசாகத் தந்தார்.

எனது தந்தையாரோ தனது குழந்தைகளுடன் எப்போதும் கண்டிப்பானவராகவே நடந்து கொள்வார். அவர் எனக்கு அதில் விலக்களித்தார் என்றே கூறவேண்டும். எனது சகோதரர்கள் பலமுறை இதுபற்றிய குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளனர். எனது பாட்டனாரோ அவர்களுக்காக வேண்டி எனது தந்தையுடன் பேசுவார். அவர் எல்லோர் மீதும் மட்டற்ற அன்பைப்பொழியும் ஜீவனாக இருந்தார். எனது பாட்டனார் எனது வாழ்வில் மறக்க முடியாதவராகவே இருந்தார்.

(இன்னும் வரும்...)

ஹிலாரியின் திருமண வாழ்வை அச்சுறுத்தும் அடுத்த மோனிக்காவா?

ஹிலாரியின் கணவரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான பில் கிளிண்டனின் வலையில் மீண்டுமொரு அழகிய பெண் சிக்கியுள்ளதாக வெளிவந்துள்ள தகவல் - நம்மை மட்டுமல்ல; ஹிலாரியையும் பாரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வெள்ளை மாளிகைக்குள் காதல் லீலையை நடத்திய பில் கிளிண்டன், இப்போது கனேடிய பெண் அரசியல் வாதி ஒருவருடன் சல்லாபித்துத்திரிவதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கிளிண்டனின் இப்போதைய புதிய காதலியான அந்தப்பெண்-கனேடிய பழமையாளர் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடும் செல்வாக்கு மிக்கவராக இருப்பவர். நீண்ட காலமாக இவர்கள் இருவரிடையேயும் கனிந்து வந்த உறவு இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இச் செய்தி ஊடகங்களில் வெளிவந்தவுடன் அதிகம் கலங்கிப்போய் உள்ளாராம் ஹிலாரி. உண்மை நிரூபிக்கப்பட்டால் விவாகரத்து நிச்சயம் என்கிறார் அவர்- இதுவும் ஹிலாரி என்ற பெண்ணின் புதிய கதைதான்.

வெனிஸ் நகரத்தின் மரணம் - 1902

இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.

ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்தவைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப் போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.

1902 ஜூலை 15ம் திகதி வெனிஸ் நகரத்து மக்கள் ஆச்சரியம் தரும் காட்சி ஒன்றினை காண்பதற்காக காலையில் எழுந்தனர்.

சுமார் 1000 வருடங்கள் பழமைவாய்ந்த நகரத்தை அலங்கரித்த மணிக்கூண்டு கோபுரமானது இருந்த இடத்திலிருந்து மறைந்திருந்தது. அது முழுமையாக அழிந்து சுக்குநூறாகி கற்குவியலாக புனித மாக் சதுக்கத்தில் காட்சியளித்தது.

ஏலவே அந்தக் கோபுரத்தின் 324வது அடியில் ஒரு வெடிப்புக் காணப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும், இதுபோன்றதொரு அழிவினை யாருமே எதிர்பார்க்கவில்லை. இன்றுவரையும் அக்கோபுரம் அழிந்த விபரம்பற்றி யாருக்குமே புரியவில்லை.

இவ்வாறு திருப்தியோடு தெரிவித்துக் கொண்டு வெற்றிக்களிப்போடு விடை பெற்றார்.

உண்மையில் தனது பெயர் உலக நாடுகளில் பேசப்பட வேண்டும் என்ற தற்புகழ்ச்சிக்காகவோ அல்லது தேர்தல் நோக்கங்களுக்காகவோ அந்த உரையை அவர் அங்கு நிகழ்த்தியிருக்கவில்லை.

தேர்தலுக்காகவே கோசம் எழுப்பி... தேர்தல் நோக்கங்களுக்காகவே கோரிக்கை வைத்துப் பழக்கப்பட்டுப்போன தமிழர் அரசியல் வராலாற்றில் வைகுந்த வாசனின் நடவடிக்கைகளும் அந்தப் பட்டியலில்தான் சேர்க்கப்பட்டிருந்தது.

1975இல் காங்கேசன்துறைத் தொகுதியில் இடைத் தேர்தல் நடந்ததல்லவா! அந்தத் தேர்தலில் தந்தை செல்வாவை எதிர்த்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வி. பொன்னம்பலம் போட்டியிட் டிருந்தார்.

அப்படியான ஒரு தோற்றத்தையும் கருத்தியலையும் அன்று திட்டமிட்டு உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட வர்கள் தமிழரசுக் கட்சியில் அங்கம் வகித்திருந்தவர்கள்தான்.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பவை எழுதப்பட்ட போது அதைப் பொறுக்க முடியாமல் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் திட்டித் தீர்த்தார்கள். ஒப்பந்தம் எழுதிய தந்தை செல்வாவைக் கொச்சைப்படுத்தினார்கள்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அமிர்தலிங்கமும் எதிர்த்துக் கருத்துக் கூறியிருந்தவர்தான். ஆனாலும், அதை உள் வீட்டுப் பிரச்சினையாகவே அவர் அணுகியிருந்தார். ஆனால், ஜீ.ஜீ.பொன்னம்பலம் அரசியல் நோக்கங்களுக்காகவே அதை எதிர்த்திருந்தார்.

மலையைப் புரட்டப் போய் எலியைப் பிடித்து வந்திருக்கிறார் செல்வநாயகம் என்று கிண்டலும் கேலியாகவும் மேடைகளில் கொச்சைப்படுத்தியிருந்தார். ஆனாலும், அப்போது தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரை தமிழ் யூ.என்.பி. என்றுதான் பலரும் வர்ணிப்பார்கள்.

அந்தளவிற்கு காலாகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் செல்லப் பிள்ளைகளாக இருந்தவர்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் அப்போது அரசாங்கத்தில் அமைச்சராக அங்கம் வகித்திருந்தவர்.

அவர் அமைச்சராக இருந்த போதுதான் இலங்கைத்தீவில் முதன் முதலில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கந்தளாய், கல்லோயா குடியேற்றத் திட்டங்கள் குறித்து அன்று தொடக்கம் இன்று வரை அந்தக் கட்சியினர் வாயே திறப்பதில்லை. அப்போது அதை எதிர்த்து ஜீ.ஜீ.பொன்னம்பலம் எதுவிதக் கருத்தையும் கூறியிருக்கவில்லை.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் பறிக்கப்படுவதற்கு எதிராக அவர் அன்று குரல் கொடுத்திருந்தால் தந்தை செல்வாவை விமர்சிப்பதற்கு அருகதை உள்ளவராக அவர் இருந்திருப் பார்.

அல்லது மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட விடயத்தில் அரசோடு இணைந்து மக்களுக்கு விரோதமாகச் செயற்படாதிருந்திருந்தால் தமிழரசுக் கட்சியினரை அவர் விமர்சிப் பதில் நியாயமிருந்திருக்கும்.

இவ்வாறுதான் அன்று பட்டி தொட்டி யெங்கும் சாதாரண மக்கள் கூடக் கருத்து தெரிவித்திருந்தனர். அண்மையில் குமார் பொன்னம்பலத்தோடும் மோதலில் நேரு வோடும் நெருக்கமாக இருந்த ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

மனம் திறந்து சில விடயங்களைப் பேசினார். துரையப்பாவின் மறைவிற்குப் பின்பு அவரது ஆட்கள் எப்படித் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு மாறினார்கள் என்ற விடயத்தையும் தெளிவாகக் கூறியிருந்தார். இது குறித்து பின்பு ஆராயலாம்.

அவர் கூறியவைகள் இதுதான்

இன்று ஜீ.ஜீ. பொன்னம்பலம் வழிவந் தவர்கள் தியாகிகளாகவும் மாமனிதர் களாகவும் சித்திரிக்கப்படுகின்றார்கள். "அறிந் தறிந்து செய்த பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும் என்பது தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று!

ஆனால், கடந்த காலத் தவறுகள் குறித்து அவர்கள் இன்று வரை எந்த விதமான சுயவிமர்சனங்களுக்கும் தங்களை உட்படுத்தாமை குறித்து சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன.

தாம் மாபெரும் வரலாற்றுத் தவறுகளை விட்டவர்கள் என்ற குற்றவுணர்வு கூட அவர்களுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. வரலாற்றைத் திருப்பிப் பார்த்து தங்களை சுயவிமர்சனங்களுக்கு உட்படுத் தாதவர்கள் மீண்டும் அதே தவறுகளையே இழைப்பதற்குத்தான் சந்தர்ப்பம் அதிகம்!

குறிப்பாக இன்று புலிகள் இயக்கத்தால் துரோகிகளாகச் சித்திரிக்கப்பட்டி ருப்பவர்கள் மாற்றுக் கருத்துக் கொண்டி ருக்கும் ஈ.பி.டி.பி. யினரும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும்தான். அவர்க ளோடு சேர்த்து ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் புளொட் போன்ற அமைப்புக்களையும் துரோகிகளாகவே புலிகள் காண்பித்து வருகின்றனர்.

ஈ.பி.டி.பி.யினர் அரசியல் அரங்கி லிருந்து ஓரங்கட்டப்பட்டுவிட்டால் அதன் பின்புதான் புலிகளோடு ஒட்டிக்கொண்டிருப் பவர்களுக்கு மீண்டும் சனியன் பிடிக்கும். அதுவரை ஈ.பி.டி.பி.யினருக்கு எதிரான துருப்புச் சீட்டாக யாரையும் பயன்படுத்தப் புலிகள் தயாராகவே இருக்கின்றார்கள்.

இதுதான் நான் சந்தித்த அந்தப் பிரமுகர் கூறிய வார்த்தைகள். இந்த இடத்தில் ஒரு விடயம்!

ஈ.பி.டி.பி.யினர் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அரசியல் தளத்தில் மாற்றுக் கருத்து கொண்ட சக்திகளுக்கு இன்னமும் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. இது குறித்துப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். ஆனாலும், வரவேற்கத் தக்க அரசியல் நகர்வுகளை வரவேற்றே ஆகவேண்டும்!

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்து ஜீ.ஜீ. பொன்னம்பலம் கொண்டி ருந்த நிலைப்பாட்டிற்கும், ஈ.பி.டி.பி. யினரோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவோ கொண்டிருக்கும் நிலைப்பாட்டிற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு!

ஜீ.ஜீ பொன்னம்பலம் அன்று அங்கம் வகித்திருந்த அமைச்சரவையால் திட்டமிட்டுப் பறிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்களை ஈ.பி.டி.பி. யினர் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருப் பதுதான் அந்தப் பாரிய வேறுபாடு!

குறிப்பாக திருமலையில் திட்டமிட்ட குடியேற்றங்களால் தமிழ் பேசும் மக்களின் சனத்தொகை விகிதாசாரம் பாரியளவில் குறைக்கப்பட்டு வரும் ஆபத்தான சூழல் குறித்து ஈ.பி.டி.பி. யினர் சிந்தித்துக் காரியமாற்றியிருந்தது வரவேற்கத் தக்க ஒன்றாகும்!

திருமலையில் தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரத்தைப் பாதுகாப்பதற்காக நான்கு தமிழ்க் கிராமங்களை உருவாக்கி அங்கு நிலமற்ற தமிழ் மக்களைக் குடியேற்றினார்கள் ஈ.பி.டி.பி.யினர். தேவா நகர், நித்தியபுரி, வரோதயநகர், லிங்கநகர் போன்றவைதான் அந்தக் கிராமங்கள். அப்போதும் ஈ.பி.டி.பி. யினர் அரச தரப்புடன் உறவுகளையே பேணி வந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆனால், இன்று யார் துரோகிகள்? யார் தியாகி கள்?..... இந்தக் கேள்வி களுக்கு வரலாற்று ரீதியான அநுபவங்களின் அடிப்படை யில் விடை காண வேண்டி யுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை பேரினவாதத் திற் குப் பறித்துக் கொடுத்த தமிழ்க் காங்கிரஸ் கட்சி யினர் தியாகிகள் தானா?..... நிலப் பறிப் புக்கு எதிராகத் தமிழ் பேசும் மக்களின் குடியேற்றங்களை நிறுவிக் கொடுத்த ஈ.பி.டி.பி. யினர் துரோகிகள் தானா?

புலிகள் அமைப்போடு ஒட்டிக் கொண்டிருப்பதால் ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் வழிவந் தவர்கள் தியாகிகளாகவே சித்திரிக்கப்படுவது குறித்த முரண்பாடு களும் கேள்விகளும் மக்கள் மத்தியில் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.

"இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே" என்றுதான் பாடத் தோன்றுகிறது.

இவ்வாறு நான் சந்தித்த அந்தப் பிரமுகர் கூறியிருந்தார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் தலைமை தவிர அன்று அக் கட்சியின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருந் தவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குடை யவர்களாகவே இருந்துள்ளார்கள்.

சாவகச்சேரியில் குமாரசாமி, பருத்தித் துறையில் நடராஜா, காங்கேசன்துறையில் பாஸ்கரன், கிளிநொச்சியில் ஆனந்த சங்கரி, தீவுப்பகுதியில் ஏ.ஈ.தம்பிஐயா போன்றவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குடையவர்களாகவே இருந்தனர்.

இதுதான் அன்று ஜீ.ஜீ பொன்னம் பலத்தின் பலமாக இருந்தது. தனது சகாக் களின் பலத்தில் நின்றுதான் அன்று பொன்னர், தந்தை செல்வாவின் நடவடிக் கைகளைக் கொச்சைப்படுத்தி வந்தவர்.

அதே போல் வைகுந்தவாசன் ஐ.நா. சபையில் நிகழ்த்திய முன்னெடுப்பையும் தந்தை செல்வாவின் தலைமையில் இல்லாத தமிழரசுக் கட்சியினர் கொச்சைப்படுத்துவதில் பின்னிற்கவில்லை. இது வைகுந்தவாசனின் 'ஸ்ரண்ட் விளையாட்டு' என்று கேலியாக பிரசாரம் செய்திருந்தனர்.

உண்மையில் விளம்பர அரசியலுக்காக தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையை வெற்றுக் கோசங்களாக மாற்றி உயர்த்திப் பிடித்தவர்கள் யார்?

இந்த இடத்தில் சில விடயங்களைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்!

"இலங்கை அரசின் அரசியலமைப்பை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை! இந்த கோசத்தை முன்னிறுத்தி நாங்கள் தேர்தலில் குதிக்கின்றோம்! அற்காக எனது பாராளுமன்ற பதவியையும் துறக்க நான் தயார்! முடிந்தால் அரசு சார்பாக அரசிலமைப்பை ஏற்றுக்கொண்டு ஒரு வேட்பாளர் போட்டியிட முன்வரட்டும்! மக்களின் தீர்ப்பு எதுவாக இருக்கும் என்பதை பார்ப்போம்" என்று தந்தை செல்வா அன்றைய அரசுக்கு சவால் விட்டிருந்தார். சொன்னபடி தனது பாராளுமன்ற உறுப்புரிமையையும் இராஜி னாமாச் செய்துகொண்டார் தந்தை செல்வா!

அப்போது இடதுசாரிகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் இணைந்திருந்த கூட்டரசாங்கம் பதவியில் இருந்தது. இடதுசாரி முக்கியஸ்தரான வி. பொன்னம்பலம் அரசு சார்பு வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார்.

வி.பி சாதாரண மனிதரல்ல. மக்கள் மத்தியில் ஆழமாகப் புகுந்து வேலை செய்து செல்வாக்குப் பெற்றிருந்த ஒருவர். தந்தை செல்வா போகாத குச்சு ஒழுங்கையெல்லாம் வி.பி. போய்வந்திருக்கிறார்.

அப்போது வி பொன்னம்பலத்திற்கும் தந்தை செல்வாவிற்கும் கடும்போட்டி என்றுதான் பரபரப்பாக பேசப்பட்டது.

நன்றி:- பூகோளம்

தொடரும்.....

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

முட் பாதையில் மரித்த மிதவாதம்

கேட்டது தமிழீழம்! கிடைத்தது பிறந்தநாள் 'கேக்'!!

1977இன் பொதுத் தேர்தலை யடுத்து நாடெங்கும் இனக் கலவரம் தலைவிரித்து ஆடியது. கொழும்பி லிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் அகதிகளாக இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கானவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தஞ்சம் அடைந்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த கல்லூரிகள் பலவும் அகதிகளுக்கான தற்காலிக தங்குமிடங்களாக மாறின. இத்தகைய சூழலில்தான் யாழ்ப்பாண மாநகர பொது நூலக கேட்போர் கூடத்தில் தென்னிலங்கையிலிருந்து வந்த புத்திஜீவிகளும், பிரமுகர்களும், சட்டத்தரணிகளும் கூடினர். தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் என்றொரு அமைப்பைத் தோற்றுவித்தனர்.

பிரபல தொழிற்சங்கவாதியும் மூத்த பிரமுகருமான கே.சி.நித்தியானந்தா இக் கழகத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். பிரபல சட்டத் தரணிகளான ந.ரவீந்திரன், க.கந்தசாமி ஆகியோர் இணைச் செயலாளர்களாயினர். மற்றும் பல்வேறு பிரமுகர்கள் இக் கழகத்தின் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தென்னிலங்கை யிலிருந்து இடம் பெயர வைக்கப்பட்டவர் களுக்குத் தாயகத்திலேயே மறுவாழ்வு வழங்குவது என்பதே இவர்களின் முதல் இலக்கு என வரையறை செய்தனர். கெக்கிராவ, தம்புள்ள போன்ற தென்னிலங்கை நகரப் பகுதிகளில் வாழ்ந்து அகதிகளாக இடம்பெயர்ந்த மலையக மக்களில் பெரும்பான்மை யானவர்கள் மீண்டும் தென்னிலங் கைக்குத் திரும்ப விருப்பம் அற்றவர்களாக இருந்தனர். அகதி முகாம்களில் வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்த இம் மக்களை மீளக் குடியேற்றுவதில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முழுக் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது.

தமிழ் அகதிகளின் தமிழர் தாயகப் பகுதிகளில் மறுவாழ்வு பெறுவதை விரும்பியிருக்காத ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டது. அரசாங்க அனுமதியின்றி காடுகள் வெட்டப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்தது முதல், அகதிகளுக்கான உலருணவு விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது ஈறாகப் பல்வேறு



முட்டுக்கட்டைகள் அரசாங்கத் தரப்பிலிருந்து போடப்பட்டன. எனினும் ஆரவாரமான பிரசாரம் எதுவுமின்றி ஆக்கபூர்வமான செயற் திட்டங்கள் ஊடாக தமிழ் அகதிகள் புனர்வாழ்வுகழகத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (T.R.R.O.) தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பல்வேறு வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புக்கள் மனப் பூர்வமான ஒத்துழைப்புகளைத் தாராளமாக வழங்கின. இவ் வகையில் ஒக்ஸ்பாம் (Oxfam), நொவிப் (Novib), றெட்பானா (Red Barna) போன்ற

(அரசியல் தொடர்)

அமைப்புக்கள் குறிப்பிடத்தக்கன. தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நேரடியாக நிதியுதவிகளையும் பொருளுதவி களையும் வழங்குவதில் காணப்பட்ட சட்ட பூர்வ முட்டுக்கட்டைகளை வெற்றிகர மாகத் தாண்டுவதற்கு கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மிசனரிகள் முன்வந்தன. வவுனியாவின் அருட்தந்தை இம்மனுவல், செட்டிகுளம் பிரதேச பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் போன்றோர் முன்னணியில் நின்று தமிழ் அகதிகளின் மறுவாழ்வுப் பணிகளுக்கு உதவினர். அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த மக்கள் பாலமோட்டை, கணேசபுரம், கென்பாம், டொலர் பாம், கண்ணாட்டி போன்ற பல இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

அத்துடன் 1977 இனக் கலவரம் தொடர்பாக பூரண விசாரணை நடத்த ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் தமிழ் அகதிகள்

1977 ஜூலை பொதுத் தேர்தலின் போது "தமிழீழத் தனியரசு" என்று உரத்துக் கோஷமெழுப்பியவர்கள், ஆகஸ்ட் இனக்கலவரப் பாதிப்புக்களையும் மறந்து அமிரின் பிறந்த நாளுக்கு விழா எடுத்த போது, "எழுவான் கரையான்" என்ற புனைபெயரில் வெளியிடப்பட்ட "கேட்டது தமிழீழம்! கிடைத்தது பிறந்த நாள் கேக்!!" துண்டுப் பிரசுரம் பரபரப்படையச் செய்து விட்டது.

புனர்வாழ்வுக் கழகம் (T.R.R.O.) அரசை வற்புறுத்தியது. இதனையடுத்து ஓய்வு பெற்ற நீதிபதி சன்சோனி என்பவர் தலைமையில் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. சன்சோனி ஆணைக்குழுவின் முன்பாக தமிழர் தரப்புச் சாட்சியங்களை நெறிப்படுத்தும் பணியிலும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தது.

ஆனால், இந்த வேளையில் பதினேழு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி அந்தஸ்தில் விடுதலைக் கூட்டணி இருந்தது. எதிர்க் கட்சித் தலைவராக இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தமிழர் ஒருவர் இடம்பெற்று விட்ட பெருமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பூரித்துப் போயிருந்தனர். இதனால் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த கூட்டணித் தலைவர் அ.அமிர்த லிங்கம் அவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுத்து மகிழ்ந்தனர். அமிர்தலிங்கம் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டத் திற்கான ஒழுங்குகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பில் கதிரேசன் மண்டபத்தில் அமிர்தலிங்கம் அவர்களது பிறந்த நாள் பாராட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்த போதுதான் "கேட்டது தமிழீழம்! கிடைத்தது பிறந்தநாள் கேக்!!" எனத் தலைப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழின உணர்வின் பால் உண்மையான அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட இளைஞர் களைப் புறந்தள்ளிவிட்டு, கூட்டணித் தலைவர்கள் சலுகைகளுக்கு விலை போகக் கூடிய சிலரைத் தமது கைப் பிடிக்குள் வைத்துக் கொண்டனர். இவ்வாறானவர்களுக்கு கமநல உத்தியோகத்தர் பதவி போன்ற வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்துவிட்டு, சிலுவர்கள் தமது சிஷ்யப் பிள்ளைக ளாக்கிக், தத்தம் சொந்த அபிலாசை களைத் தீர்த்துக்கொண்டனர். ஆனால், இது பெரும்பாலானவர்களுக்கு உடன் பாடானதாக இருக்கவில்லை. அதனா லேயே 1977 ஜூலை பொதுத் தேர்தலின் போது "தமிழீழத் தனியரசு" என்று உரத்துக் கோஷம் எழுப்பியவர்கள், ஆகஸ்ட் இனக் கலவரப் பாதிப்புக்களையும் மறந்து பிறந்த நாளுக்கு விழா எடுத்தபோது தமது அதிருப்தியைத் துண்டுப் பிரசுரமாக வெளிப்படுத்தினர்.

"எழுவான் கரையான்" என்று புனைபெயர் பூண்டவரால் எழுதப்பட்ட இத் துண்டுப் பிரசுரம் கதிரேசன் மண்டபத்தில் விநியோகிக்கப்பட்டதும் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் மத்தியில் ஒரே பரபரப்பு! துண்டுப் பிரசுரத்தில் காணப்பட்ட வாசகங்க ளுக்குப் பதிலளிக்க முடியாத பதகளிப்பு! அடுத்தது என்ன?

(தொடர்ந்து வடியும்....)

இணைந்து எழுதுவது
த.சபாரத்தினம்
+
அம்பி மகன்

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

நெஞ்சினில் என்ன காயமோ...? 47

உடனே அருகிலுள்ள குடும்ப வைத்தியரிடம் சென்று அவரின் ஆலோசனையைப் பெற்றான். அவர் கொடுத்த மாத்திரைகளுக்கு வலி சற்று குறைந்தபோதும் பூரணமாக மாறவில்லை. ஒரு வாரம் கழிந்த நிலையில் திடீரென முதுகுவலி ஏற்பட்டது. மீண்டும் குடும்ப வைத்தியரிடம் சென்றான். சிறுநீர், இரத்தம் ஆகியவற்றைப் பரிசோதிக்குமாறு வைத்தியர் ஆலோசனை கூறினார். அந்தப் பரிசோதனைகளில் எந்தக் குறைபாடுகளும் இருக்கவில்லை. அவன் உட்கொண்ட மாத்திரைகள் அதிகரித்த அளவுக்கு உடல் அறிகுறிகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. தலைவலி, முதுகுவலி, நெஞ்சுவலி, காதுக்குத்து என்பன தோன்ற ஆரம்பித்தன. அவனின் குடும்ப வைத்தியரோ அவனது உடலில் எந்தப் பாரிய நோய்களும் இல்லை என உறுதியாகக் கூறினார்.

வாரங்கள் மாதங்களாகியபோதும் அவனின் உடல் அறிகுறிகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அவனால் முன்பு போல தனது தொழிலில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தான். குடும்பத்தில் நிலவிய மகிழ்ச்சி மறைந்து போனது. இந்த மாற்றங்கள், அந்தக் குடும்பத்தின் முன்னேற்றத்தைக் கண்டு சகிக்க முடியாத ஒரு சிலரின் மாந்திரிக செயற்பாடுகளால் ஏற்பட்டதோ என ஐயுறவும் செய்தன. மொஹமட் பொதுவாக இப்படியான மாந்திரிகச் செயற்பாடுகள் பற்றி நம்புவதில்லை. ஆனாலும் ஏதோ ஒரு விதத்தில் உடல் அறிகுறிகளைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் என்ற நப்பாசையில் அவற்றுக்கும் சம்மதித்தான். மந்திரித்த நீரை 3 மாதத்துக்கு தவறாது உட்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையை சிரமேற்கொண்டான். மூன்று மாதங்களும் மறைந்தன. அவனது உடல் அறிகுறிகள் மறையவில்லை.

இறுதி முயற்சியாக கொழும்பு சென்று பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றில் அவனைப் பரிசோதிப்பது என்ற முடிவுக்கு உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்தனர். இதற்கான செலவுகளில் அரைவாசியைப் பொறுப்பு எடுப்பதற்கு விடுமுறையில்

> உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவிந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இலங்கை வந்திருந்த சவூதியில் பணிபுரிகின்ற மொஹமட்டின் நெருங்கிய நண்பன் ஒருவன் இணங்கினான்.

மொஹமட் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். உடல் மருத்துவ நிபுணர் (PHYSICIAN), சத்திரசிகிச்சை நிபுணர் (SURGEON), இருதய நோய் நிபுணர் (CARDIOLOGIST), நரம்பியல் நிபுணர்கள் (NEUROLOGIST & NEURO SURGEON) என பல்வேறுபட்ட தொழில்சார் விற்பன்னர்களால் அவன் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டான். சிறுநீர், இரத்தப் பரிசோதனைகள், X RAY சோதனைகள், SCAN சோதனைகள், CT SCAN என பல்வேறுபட்ட பரிசோதனைகளும் செய்யப்பட்டன. இவற்றின் முடிவுகளைப் பரிசோதித்த அனைவரும் அவனது உடலில் எந்த ஒரு பாரிய பிரச்சினையும் இல்லை என்றே கூறினர். காதுவலி இருந்தமையால் அவன் காது - மூக்கு - தொண்டை (ENT) வைத்திய நிபுணரிடமும் அனுப்பப்பட்டான்.

வருடங்கள் இரண்டு கழிந்துவிட்ட நிலையில், தான் வலிகளை உணர்ந்தபோதிலும் வைத்தியர்கள் அவனை சுகதேகி எனக் கூறியது மொஹமட்டை மேலும் கலக்கமுற வைத்தது. ENT நிபுணரிடம் தனது பிரச்சினைகளைக் கூறியபோது, அவன் கண்களில் நீர் முட்டியது. குரல் தளதளக்க ஆரம்பித்தது. ENT நிபுணர் அவனைப் பரிசோதித்துவிட்டு அவனது காதில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை எனக் கூறி, அவனது மனது கலக்கமுற்றிருப்பதால் உளமருத்துவ நிபுணரிடம் (PSYCHIATRIST) அவனை அனுப்பினார். உளமருத்துவத்தின் பரிந்துரைப்படி, உளமருத்துவத் துறை விடுதியில் (WARD) அனுமதிக்கப்பட்டான்.

ஏறத்தாழ ஒரு வார காலம் அவன் விடுதியில் தங்கியிருந்தபோது அவனது மனச்சோர்வைக் குறைப்பதற்கான மருந்துகள்

உள மருத்துவம்

வழங்கப்பட்டன. அவனது மெய்ப்பாட்டு அறிகுறிகளை குவியப்படுத்திய அறிவாற்றல் சார் நடத்தை மாற்றுச் சிகிச்சையும் வழங்கப்பட்டது. பின்னர் 3 மாதங்கள் தொடர்ச்சியாக இந்த சிகிச்சை முறைகளுக்கு உட்பட்டபோது, அவனது அறிகுறிகள் சிறிது சிறிதாக மறைந்தன. மீண்டும் வேலையில் ஆர்வம் பிறந்தது."

தொடர்ந்து வரும்.....

பணமே வேண்டும் மனமே

அன்பு உங்களின் உறவை ஆழப்படுத்தட்டும். சுதந்திரம் உங்களின் வாழ்க்கைக்கு சிறகுகள் வழங்கட்டும்.

சென்னையில் என் லை.ப் புரோகிராமில் பங்கேற்ற ஒரு தம்பதி, "ஸ்வாமிஜி! எங்களுக்கு ஒரே ஒரு பையன். எங்கள் குடும்பம் மிக மகிழ்ச்சியான குடும்பம். எங்களுக்கிடையில் மிக ஆழமான அன்பு இருக்கிறது. எங்களுடைய ஒரே மகனும் சுறுசுறுப்பானவன். படிப்பிலும் திறமைசாலி. ஆனால், அவனைப் பற்றி எங்களுக்கு ஒரு வருத்தம் உண்டு. அவனுக்கு பணத்தின் அருமையே புரியவில்லை. நாங்கள் இன்று வசதியாக வாழ்கிறோம் என்றாலும் இருவரது பெற்றோர்களும் வெகு சாதாரண நிலைமையிலிருந்து படித்து, உழைத்து வாழ்க்கையில் நல்ல நிலைமைக்கு வந்தவர்கள். எங்கள் சின்ன வயதில், எங்களுக்கு எது எதுவெல்லாம் கிடைக்கவில்லையே என்று நாங்கள் ஏங்கினோமோ அவையெல்லாம் எங்கள் மகனுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசையுடன் பார்த்துப் பார்த்து வாங்கித் தருகிறோம். ஆனாலும், அவனுக்குப் பணத்தின் அருமையை எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை" என்று அவர்கள் கூறினார்கள்.

பணத்தின் அருமையைப் புரிந்து கொள்ளாமல் அவன் என்ன செய்கிறான்? என்று நான் கேட்டேன்.

கடைக்குப் போனால், நூற்றைம்பது ரூபாயில் ஒரு டிரஸ் வாங்கிக் கொடுக்கிறேன் என்றால், ஐநூறு ரூபாய் விலையுள்ள டிரஸ்ஸைக் காட்டி, "இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. இதை வாங்கிக் கொடுங்கள், என்பான். "விலை அதிகம்"என்றால் ஐநூறு ரூபாய் தானே!"என்பான். நினைத்தபோதெல்லாம் "பெப்சி குடிக்க பத்து ரூபாய் கொடு' என்பான். பணம் தர மறுத்தால் "ஜஸ்ட் டென் ரூப்பீஸ் கூட தராத கஞ்சனாக இருக்கிறார்களே!" என்பான். இதுபோல எக்கப்பட்ட உதாரணங்கள் சொல்லலாம்" என்றார் அந்தப் பெண்மணி.

"நீங்கள் உங்கள் குழந்தைக்குப் பணத்தின் அருமை தெரியவில்லை என்று குறை சொல்லுகிறீர்கள். ஆனால், நான் சொல்லுவேன். இன்று பல பெரியவர்களுக்கே கூட பணத்தின் அருமை தெரியவில்லை என்று நான் கூறினேன்.

இந்த இடத்தில், பொதுவாகப் பணம் பற்றிய மனித மனத்தின் தன்மை குறித்து கொஞ்சம் சொல்ல நினைக்கிறேன். பிசினஸ் வட்டாரத்தில் ரவுண்டு .ிபிகர் சைக்காலஜி என்று ஒன்று உண்டு.

அது என்ன? ரவுண்டு .ிபிகர் சைக்காலஜி? ஒருவர் ஒரு பிசினஸ் பேசி முடிக்கிற தருணம். பதினேழாயிரத்து முன்னூறு ரூபாயில் வந்து நிற்கிறது என்றால், உடனே பதினேழாயிரத்து முன்னூறு வேண்டாம். அதை ரவுண்டாக்கி பதினேழாயிரத்தில் முடித்துக்கொள்ளலாம் என்பார். இன்னொருவரும் அதற்குச் சம்மதம் தெரிவிக்க பிசினஸ் டீல் முடியும். இதுதான் ரவுண்டு .ிபிகர் சைக்காலஜி.

இந்த ரவுண்டு .ிபிகர் சைக்காலஜி பற்றி நான் சொல்லும் ஒரு உதாரணம் இது. கடவுளை விரும்பி, வேண்டி தவம் இருந்தான் ஒருவன். கடவுள் அவன் முன் தோன்றி, "என்ன வேண்டும்?" என்று கேட்டபோது, "எனக்கு நாற்பதாயிரத்து இருநூறு ரூபாய் கடன் இருக்கிறது. அத்தனை பணத்துக்கு வழி செய்தால், என் கடனை அடைத்துவிடுவேன்" என்றான்.

"சரி! எவ்வளவு ரூபாய் வேண்டும்?"

"நாற்பதாயிரத்து இருநூறை ரவுண்டாக்கி, நாற்பத்தி ஒரு ஆயிரமாகக் கொடுத்து விடுங்கள்."

கடவுள், அவன் மீது அனுதாபப்பட்டு, அவனது கடன் தொகைக்கு ஓராயிரம் கூடுதலாக நாற்பத்தி ஒரு ஆயிரத்து இருநூறு ரூபாய் கொடுத்தார்.

கேட்டதை விடக் கூடுதலாகக் கிடைத்ததற்காக நியாயமாகப் பார்த்தால் அவன் சந்தோஷப்பட்டிருக்க வேண்டாமா? அவனுக்குத் திருப்தியில்லை.

"அதையும் ரவுண்டாக்கி, நாற்பத்து இரண்டாயிரமாகக் கொடுத்துவிடுங்களேன்!" என்றான்.

ஆக, மனித மனம் எவ்வளவுதான் பணம் இருந்தாலும், இன்னும் கொஞ்சம் இருந்தால் நன்றாக இருக்குமே என்றுதான் நினைக்கும். ஆனால், பணத்தைப் பற்றிய மிக முக்கியமான உண்மையை நாம் மறந்தே போய்விடுகிறோம்.

முற்றும்

முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

தவறுக்கு வருந்துகிறோம்

குறுக்கெழுத்துப் போட்டி இல: 56

திருத்தம்

இடமிருந்து வலம் :

1. நாத்திகனுடைய கருத்துக்கு எதிர்க் கருத்துக் கொண்டவன்.

10. தீபமேற்றும் சட்டி (திரும்பியுள்ளது).

குறுக்கெழுத்துப் போட்டி 58

1	2	3	4	5
6	■	7	8	■
9	10	■	11	■
12	■	13	14	15
16	17	18	■	19
20	21	22	23	24

இடமிருந்து வலம்

1. அதி உயர் பதவி ஒன்று.
7. கரை (திரும்பியுள்ளது).
9. பசுவின் பெண் கன்று.
13. இயல்பு (குழம்பியுள்ளது)
16. அழிவில்லாத வித்தை (குழம்பியுள்ளது).
20. சுறுசுறுப்புக்கு உவமையானது (குழம்பியுள்ளது).

மேலிருந்து கீழ்

1. சர்வாதிகாரம் உள்ள இடத்தில் காணமுடியாதது.
3. ஒழுக்கம்.
4. தஞ்சம் (குழம்பியுள்ளது).
13. மிடற்றால் பிறக்கும் இசை (குழம்பியுள்ளது).
15. பணமென்றால் இதுவும் வாய் திறக்கும் - பழமொழி (குழம்பியுள்ளது).
17. இடியேறு (குழம்பியுள்ளது).

குறுக்கெழுத்துப் போட்டி 56 விடைகள்

ஆ 1	த் 2	தி 3	க 4	ண் 5
டா 6	■	ட 7	■	ன 8
தோ 9	■	ல் 10	க 11	அ 12
டை 13	கா 14	■	ப 15	ல் 16
■	ங் 17	■	ல் 18	■
யொ 19	கை 20	ப 21	ப் 22	ம் 23

போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 25.02.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-58
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

32

பெயர்:.....
முகவரி:.....
.....
தொழில்: .....
கையொப்பம்: .....

உண்மை நேர்மை வெளிப்படத் தன்மை

* ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
* மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-02-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சேலை?
நெடுந்தீவு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 30

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ச.அருள்மேரி.
10ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

இவ்வார சிறு கதைகள்

கெளரவம்

- சுண்டுக்குழி கஜோல்,

வழமைபோல் ஆபீஸுக்குச் சென்றேன். இருந்தும் சற்றுத் தாமதித்துவிட்டேனோ என்ற உணர்வுடன் மனேஜரின் இரைச்சலை எண்ணியபடி படிகளில் வேகமாய் ஏறினேன். சனியன் பிடிச்ச லிவ்ட் இண்டைக்கெண்டு வேலை செய்யுதில்ல. பெரிய தொல்லை என்னெண்டால் மணிக்கூடும் ஓடாது நிண்டதுதான். ஏழு அடுக்குகளைக் கொண்ட மாடிப் படிகளை ஏறி ஏறி சேட்டும் வியர்வையால நனைஞ்சு போட்டுது. ஒரு மாதிரி ஏறி ஓட்டமும் நடையுமாய் ஆபீஸுக்குள் நுழைந்தேன். மனேஜர் என்னைக் கண்டவுடன் சிரித்தபடி வரவேற்றார். நானும் பல்லை இளித்துக்கொண்டு கையெழுத்து இடும் புத்தகத்திற்கு அருகிலே வந்தேன். நிமிர்ந்து தொங்கிய மணிக்கூட்டைப் பார்த்தேன். அட அரை மணித்தியாலம் முந்தி வந்திட்டேன். தேவையில்லாமல் அவசரப்பட்டு ஓடி வந்தேனே என எனக்குள்ளே திட்டித் தீர்த்தேன். கையெழுத்திட்டுவிட்டு நிமிரும்போது, "என்ன சுமன் நாளைக்கு கம்பனியைச் செக் பண்ண சிங்கப்பூரில் இருந்து ஆட்கள் வாறாங்க. ஒரு வேலையும் வைக்காமல் செய்து முடியுங்க. போன வருஷம் போல இந்த வருஷமும் எங்கட கம்பனிதான் பரிசைத் தட்ட வேணும்" என்றார் மனேஜர்.

"யோசிக்காதையுங்க சேர்! நேற்றோட முடிச்சிட்டன். இண்டைக்குச் செக் பண்ணுறது மட்டும்தான்."

"வெரிகுட் சுமன். எனக்குத் தெரியும் நீங்க முடிச்சிருப்பீங்களெண்டு. இருந்தும் சொல்ல வேண்டிய கடமைக்குச் சொன்னேன்."

"தாங்யூ சேர்" என்று சொன்னபடி எனது அறைக்குள் நுழைந்தேன்.

கதிரையில் அமரும்போதுதான் நேற்று தங்கைக்கு ஆம்பிளைப் பிள்ளை பிறந்ததாய் நண்பன் முகுந்தன் சொன்னது ஞாபகம் வந்தது. அங்கே போவோமா விடுவோமா எண்டு மனம் தத்தளித்தது. மனேஜருக்கு வேலையெல்லாம் முடிச்சதாய் பொய் சொல்லிப் போட்டன். அரையும் குறையுமாய் உள்ள வேலையைச் செய்து முடிச்சிட்டு நிச்சயமாய் 'லஞ்ச்' எடுக்க முதல் தங்கச்சிகிட்ட போகத்தான் வேணும். வேலையை மும்முரமாய் செய்ததில் ரீ மேசைக்கு வந்ததே தெரியல. நிமிர்ந்து பார்த்தபோது நேரம் பதினொண்டு நாப்பத்தைஞ்சு. பதிவுகளை மேற்கொண்டேன். மீண்டும் செக் பண்ணி சரிசெய்துகொண்டேன். வழமையாக ஒரு மணிக்கு லஞ்சுக்குப் போகும் நான் இண்டைக்கு 12.30திற்கே வீதியில் இறங்கினேன். ஒரு கடையில் பழங்களையும் முட்டைகளையும் வாங்கிக் கொண்டு ஆட்டோ ஒன்றை மறித்தேன்.

"மேம்பால ரோட்டில இருக்கிற முதல் ஒழுங்கையில் அறுபத்தி நான்காம் நம்பர் வீட்டை விடப்பா."

ஆட்டோ மெல்ல நகரத் தொடங்கியது.

தங்கச்சியப் பார்த்து அஞ்சு வருஷம் எப்பிடியிருக்கிறாளோ? என்னை விட மூண்டு வயசுக்கு இளையவள். நான்தான் மூத்தவன். தங்கச்சி, அம்மா, அப்பா, பாட்டியோட எங்கட குடும்பத்தில அஞ்சு பேர், சின்னக் குடும்பம். அப்பாவும் பாடசாலையில் கிளார்க். அம்மாவும் வங்கியொண்டில காசாளர். ஏன் பாட்டிகூட ஓய்வு பெற்ற அதிபர். செல்வாக்கான குடும்பம். கஷ்டம் எண்டால் என்னெண்டு தெரியாது. அப்பா, தங்கச்சி பிறந்த காலம் தொடக்கம் பணம் சேர்க்கத் தொடங்கிவிட்டார். வாழ்க்கையில நான் படிச்சு பல்கலைக்கழகம் கிடைச்சபோதுதான் ஆடம்பரமாய் கொண்டாடினனாங்கள். தங்கைக்கு ஒவ்வொரு வயது முடியும்போதும் ஏன், பெரியவளானபோதும் கொண்டாடினதைப் பார்த்து ஊரே வாயில விரலை வைச்சாங்கள். நானும் தங்கச்சியில உசிர வைச்சிருந்ததால அவளுக்கு செய்யுற கொண்டாட்டங்களை விரும்பினேன். என்னைப் பற்றி நினைக்கேல. அன்றொருநாள் ஏ. எல். படிச்சுக்கொண்டிருந்த தங்கச்சி பாடசாலைக்கு போனவள் இருண்டும் வரேல. அப்பாவும் அம்மாவும் நானும் சேர்ந்து இரவு முழுவதும் தேடினோம். இரண்டு நாளாய்த் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. அம்மாவும் பாட்டியும் வீட்டில ஒப்பாரி. பொலிஸுக்குக் கூட அறிவிச்சம். ஆனால் அஞ்சு நாளைக்குப் பிறகுதான் கதை தெரிஞ்சுது. தன்னோட அடிப்பான், வேலை வெட்டியில்லாதவன் என்று அவன் கூறும்போது என்னையறியாமலே கண்ணீர் வரும். அப்பா அம்மாவின்ர சொல்ல நான் தட்டாதபடியால்தான் இண்டைக்கும் இருப்பத்தேழு வயசாப் போயும் ஊரார் மத்தியில நல்ல பெயருடன் இருக்கிறன். முதல் ரெண்டு பிள்ளைகள் இருக்கிறதாய் அறிஞ்ச நான் மூண்டாவது பிறந்ததை அறிஞ்சவுடன் நேற்று வீட்டை சொன்னதும் வில்லங்கமாய்ப் போச்சு. அப்பா கொடுக்கை இழுத்துக் கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்திட்டார்.

"டேய் நீதான் கொள்ளி போட ஒரே ஒரு பிள்ளை. மறந்திடாதேயடா. அவளைப் பற்றிக் கதைச்சால் நான் பொல்லாதவனாயிடுவன்" என்று சத்தம் போட்டார்.

அதோட கதையை நிறுத்திப் போட்டன். இரவு யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தனான். என்னைக் கண்டால் சந்தோசப்படுவாள்,

"அண்ணே வீடு வந்திட்டு, இறங்குங்கோ" என்றான் ஆட்டோக்காரன். நான் மீண்டும் கனவு கலைந்தவன் போல் கண்ணைக் கசக்கிக்கொண்டு மீட்டருக்கு காசைக் குடுத்திட்டு வீட்டிற்குள் சென்றேன்.

சற்றுக் குனிஞ்சுதான் உள்ளே செல்ல வேண்டியிருந்தது. சென்ற நான் தங்கையைக் கண்டவுடன் திகைத்துவிட்டேன். மெலிந்துபோய் கிழிந்த பாயில் குழந்தையை அருகில் அணைச்சபடி நித்திரையாகக் கிடந்தாள். பிள்ளை அச்சொட்டா அப்பாவைப் போல இருந்தது. மெல்லக் குனிந்து குழந்தையை தூக்கினேன். திடுக்கிட்டு அழத் தொடங்கினான். தங்கச்சி திடீரென விழிச்சு என்னைப் பார்த்தாள்.

"எப்பையண்ணா வந்தனீ" எண்டு கேட்டபடி என்னைக் கட்டிப் பிடிச்சு அழுதாள். என்னாலையும் அழுகையை அடக்க முடியயேல. அவளைச் சமாதானப்படுத்தினேன். "நான் வந்தது வீட்டுக்குத் தெரியாது உனக்குள்ளேயே வைச்சுக்கொள். வெளியில சொல்லிப்போடாதே" என்று கூறியபடி கொண்டு வந்த பொருட்களைக் குடுத்தேன். கணவர் வேலையில்லாமல் அலையிறதையும் கூறினாள். மூவாயிரம் ரூபாய் காசை எடுத்துக் கொடுத்தேன்.

"அடிக்கடி உன்னைப் பார்க்க வருவன். எதுவும் தேவையெண்டால் ஆபீஸ் நம்பருக்கு ரெலிபோன் பண்ணு. வீட்டை எடுத்திடாதே. சரி போட்டு வாறன்" என்றபடி குழந்தைக்கொரு முத்தம் கொடுத்தேன். வெளியில் வந்தேன். அப்பொழுது ஆட்டோச் சத்தம் கேட்டது. யார் வாறாங்கள் எண்டு மறைஞ்சு நிண்டு பார்த்தேன். என்னால நம்ம முடியவில்ல. கையில பைகளைச் சுமந்துகொண்டு அப்பா வந்துகொண்டிருந்தார். நான் அவருக்குத் தெரியாது மறைஞ்சுகொண்டேன். நான் நிண்டதைக் கவனியாது வீட்டுக்குள்ளே சென்றார். சற்று எட்டிப் பார்த்தேன். தங்கச்சியை கட்டிப் பிடிச்சு அழுதுகொண்டிருந்தார்.

'நான் வந்ததை வெளியால சொல்லிப் போடாதே. வீட்டுக்குத் தெரியாமல் நான் வந்தனான்" என்று அப்பா சொன்னது காதில விழுந்தது.

'இப்ப எங்க போட்டுது வரட்டுக் கௌரவம்' என்று மனதிற்குள் நினைத்தபடி சத்தம் போடாது வெளியேறினேன்.

கொடைக்கானல்

- நீ.பி.அருளானந்தம், கல்கிசை.

கொடைக்கானலிலுள்ள அந்த இடம் பூராகவே தைல வகைகள் விற்கும் கடைகளால் நிறைந்திருக்கின்றன. அந்த வீதியாலே நடந்து போகின்ற உல்லாசப் பிரயாணிகளை, அங்கே தைல வியாபாரம் செய்யும் எண்ணெய் வாணிபர்கள் அந்தப் பொருட்களை வாங்காமல் போவதற்கு விடுகிறார்களில்லை.

"யூக்கிலிப்ஸ் ஒயில்.....மூட்டுவலித் தைலம்.. வாங்க சார்.... வாங்கிக்குங்க சார்...."

எல்லாக் கடைகளிலிருந்தும் தொடர்ந்து இதே மாதிரியான விற்பனைக் குரல்கள்தான் அவ்விடமிருந்து அங்கே போகின்றவர்கள் செவிகளில் வந்து விழுந்துகொண்டிருக்கின்றன.

உடலுக்கு இதமான குளிர்ச்சி கொடுக்கும் சுகஸ்தானமாகிய கொடைக்கானல் என்கிற இடத்திலே தயாரிக்கப்படும் விசேஷித்த ஒரு பொருளாய் விற்கப்படுகிறது.

அங்கே கடை விரித்திருக்கும் வியாபாரிகளது அழைப்புகளோடு அவ்விடமிருந்தெல்லாம் வீசிக்கொண்டிருக்கும் தைல வகைகளின் கார மணம் பனிக்காற்றுடன் கலந்து வந்து நாசிக்குள் புகுந்து, உடல் நரம்புகளின் உள்ளேயெல்லாம் சென்று பாய்வது போல குமரய்யாவிற்கு இருக்கிறது.

கொடைக்கானல் குளிர் சுவாத்தியத்துக்கு உடம்புக்கு அது மிகவும் இதமாக இருக்கிறது அவருக்கு.

அவரைத் தவிர அங்கே சொகுசு பஸ்ஸில் வந்திறங்கிய பிரயாணிகளெல்லாம் மிகவும் உற்சாகத்தோடு எதிரே தெரிகின்ற மலைப்பாதை வழியே நடந்து, கண்ணாடிக் கம்பளம் போன்ற பனிமூட்டம் பசுமை அடர்ந்த மலைக்காடுகளை மறைத்து அகலும் அழகைப் பார்க்கப் போய்விட்டார்கள்.

இவர் நிற்கும் இடத்தில் நெருப்புத் தணலில் சோளப் பொத்தியை வாட்டி, உப்பு மசாலாத் தூள் தடவியும் அந்தச் சுவையான உணவு நன்றாக விற்பனை நடக்கிறது. மண்ணிலிருந்து உடன் பிடுங்கிவந்த கரட் கிழங்குகளை செவ்வனே கழுவி செவ்வந்திப்பூ நிறம் போலிருக்குமதை கத்தியால் வெட்டிப் பதித்து உள்ளே உப்பு மிளகாய்த் தூளிட்டும் ஒரு பக்கத்தில் வியாபாரம் அமோகமாகப் போகிறது. எல்லாவற்றிக்கும் போட்டியாக மலிவு விலையில் உப்பிட்டவித்த வேர்க்கடலை வியாபாரம் இன்னொரு பக்கம். அங்கே நிற்கிறவர்கள் எல்லாருடைய வாயும்தான் ஆடிக்கொண்டிருக்கின்றன.

குளிருக்கு நல்ல பசி இருக்குமாமே?

அதனால், அந்த இடத்தில் நின்றபடியே ஓரிரு கணப்போது கடந்து போவதற்குள் கையை மேலே உயர்த்தி விறைத்துச் சோம்பல் முறித்தார் குமரய்யா.

அதன் பிறகு அந்தக் கடைகளுக்கு முன்னே நின்றபடி மாறி மாறி அந்த நொறுக்குத் தீனிகளை ஒவ்வொன்றாக வாங்கி அவர் தன் வாயினிலே போட்டுக்கொண்டார். அவற்றில் உறைப்பென்ன, உப்பென்ன, எல்லாச் சுவையும் அளவோடு "ஆகா...அமிர்தம்..." என்ற மாதிரி மனத் திருப்தியாக இருந்தது அவருக்கு. கொஞ்சம் வாய் ருசி அடங்கிப் போக எதிர்க் கடையிலே நுழைந்து யாழ்ப்பாணத்துப் பாஷையான 'தேத்தண்ணீர்' என்ற சொல்லை வாயிலிருந்து வெளியே வரமுதல் உள்ளே விழுங்கிவிட்டு, 'பிளாக் டீ' என்று கேட்டு வாங்கிக் குடித்தார்.

மனைவி இறந்தபின் தட்டத்தனியே வீட்டில் கிடந்து மனம்வெதும்பிக் கொண்டிருந்த இவரை மகன்தான் வெளிநாட்டிலிருந்து ஒரு தொகைக் காசை அனுப்பி இப்படி ஒரு உலாப் போவதற்கு வைத்திருந்தான்.

"அப்பா...வீட்டில தனியாயிருந்தா பழைய நினைவெல்லாம் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்து, அம்மாவை நினைச்சு நினைச்சு நீங்கள் வலுவா மனம் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பியள்... அப்பிடி இருக்காம உங்கட மனசைத் தேற்றிக்கொள்ள அதுக்கு நான் ஒரு வழி சொல்லுறன். அதுக்காகத் தான் இப்ப நான் உங்களுக்கு இந்தக் காசையே அனுப்பி வைக்கிறேன். அங்க உங்களுக்கு விருப்பமான இடங்களையெல்லாம் பாருங்கோ" என்று ஆலோசனை கூறினான்.

'இவ்வளவு வயசாகியும் ஒரு இடமும் போய் என்னால பாக்கக் கிடைக்கேலயே' என்ற மனக் குறை முன்பெல்லாம் அவருக்கு இருந்தது. ஆனால், மனைவி இறந்தார் பிறகு எங்கேனும் போய்த் திரிய அவருக்கு அவ்வளவாக விருப்பமில்லை. என்றாலும் இன்றைய காலப் பொழுதில் இப்படியாகவேனும் எங்காவது போய் மனதிலுள்ள கவலையினை நிவர்த்திப்போம் என்ற கொள்கையில் இவ்விடமாக வர அவர் வெளிக்கிட்டுவிட்டார்.

அவருடைய ஆருயிர் மனைவி தவமணி! தன் மனைவியை அதிலே நின்றபடி ஒரு கணம் நினைத்ததும் மனதிலே கவலை வந்துவிட்டது அவருக்கு.

தன்னுடன் அவள் வாழ்ந்த காலத்திலெல்லாம் பொறுமையே பூஷணம் என்றிருந்தாளே!

என்று நினைத்ததும் இன்னமும் உள்ளுக்குள்ளே மிகவும்

துணைவி அழைக்கிறாள்

கவலை அதிர்ந்தது அவருக்கு. இந்த எண்ணங்களில் குமைந்துகொண்டே நில நடை – என்று பலகையில் எழுதிப் போட்டுக் கிடந்த அந்த இடத்தின் மலையோரப் பாதை வழியாக மேல் நோக்கி அவர் நடக்க ஆரம்பித்தார். உறுதியான சதுரக் கருங் கற்கள் பதித்திருந்த அந்தப் பாதையிலே நடக்கும்போது குமரய்யாவிற்கு மனம் நன்றாகத்தானிருந்தது.

அந்தப் பாதை வழியாக இளம் காதல் ஜோடிகளெல்லாம் ஒருவரையொருவர் கைகளால் இடுப்பை வளைத்து இறுக்கிப் பிடித்தபடி கிளுகிளுப்புடன் நடந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது விழிமலர்கள் நண்பகல் கமலங்களாய் அகல மலர்ந்திருக்கின்றன. ஜோடி ஜோடியாகத்தான் எல்லோரும் அந்தக் குளிரின் சுகத்தை அவ்விடத்தில் அநுபவிக்க வந்தவர்களாகத் தெரிகிறார்கள்.

குமரய்யா அவர்களையெல்லாம் பார்த்து, ஏறித் தாழும் பெருமூச்சுக்களை விட்டுக் கண் கலங்கிக்கொண்டே தன் மனைவியை வெகுவாக நினைத்துக்கொண்டார். இதனால் உணர்ச்சி அவருள்ளில் பொங்கி எழுந்தது. அதை அடக்கிக்கொள்ள மலை முகடுகளைப் பார்க்கின்றார் அவர்.

ஒரு பொழுது அவர் பார்வையில் மலையும் அதை மூடிய அடர்ந்த காடும் பளிச்சென்று கண்களுக்குத் தெரிகிறது. இன்னோர் பொழுது அவை யாவுமே வெண்பனிப் புகாரில் மறைந்து வெள்ளை வெளேர் என்று மாத்திரம் காணக் கிடைக்கிறது.

அங்கே பனிக்கூட்டம் மலைகளை மறைப்பதைப் பார்த்து மனைவியை பறிகொடுத்தது போல் அவர் ஏங்குகிறார்.

இந்த இடத்தின் குளிருக்கேற்ற ஆடைகளை அவர் அணிந்திருக்கவில்லை. இப்போது அணிந்திருக்கும் ஆடையெல்லாம் பனிக் குளிருக்கு உப்பியது போல அவருக்குத் தெரிகிறது. குளிர் ஊசிக் குத்தலாய் உடம்பில் தைத்தது அவருக்கு.

உடனே குமரய்யா தன் மனைவியை மீண்டும் நினைக்கிறார். உயரமும் உறட்சியும் திரட்சியுமா எடுப்பாயிருக்கும் அவள் தனக்குப் பக்கத்தில் தன்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நடந்து வருவதான பிரக்ஞையில் அவர் இருக்கிறார்.

அவரின் உள்ளம் சிலிர்த்து இதயம் நின்று அடித்துக்கொண்டது. உண்மையிலேயே தனக்குப் பக்கத்தில் தவமணி நடந்து வருகின்றது போல்தான் அவருக்கு ஒரு பிரமை.

அந்தப் பிரமையில் முழுவதும் மூழ்கிப்போய் தவமணியுடன் நேருக்கு நேர் கதைப்பதாகக் கற்பனை செய்துகொண்டு வார்த்தைகளைக் கொட்டத் தொடங்கினார்.

"தவமணி! கவனமம்மா! கவனமாப் பாத்து வாம்மா!" என்று தனக்குத்தானே முதலில் சொல்லிக்கொண்டார். பிற்பாடு கண்ணில் தெரிகின்ற காட்சிகளையெல்லாம் ஒவ்வொன்றாக அவளுக்குக் காட்டி ஒரு குழந்தை போல குதூகலிப்புடன் பேசத் தொடங்கி விட்டார்.

"பூவைப் பாரன்...இந்தக் குளிருக்கு ஜில்லெண்டு உசிராக் கிடக்கு. காடுகளையும் தான் பார்...எல்லாம் பச்சை பச்சையா பாக்கக் கண்ணுக்கு குளிர்ச்சியாக் கிடக்கு...பார்க்கிற எல்லாத்திலையும் உசிர்ப்பிருக்கு... காஞ்சு செத்ததாமெண்டு இந்தக் குளுமையான இடத்தில ஒண்டுமேயில்லை...இந்தக் குளிர் சுவாத்தியத்துக்கு அப்படியா ஒண்டையுமே பாக்கத் தெரியேல்ல...இங்க கட்டாயம் வா. நாங்க ரெண்டு பேரும் இதையுந்தான் ஒருக்காப் போய்ப் பாக்க வேணும். இந்த இடந்தான் உங்கின பலபேரும் கதைக்கிற அந்த சூசைட் ஸ்பொட்.....காதலில தோல்வி அடைஞ்ச வயஎல்லாம் இதில விழுந்துதான் செத்திருக்கினமாம்...பயங்கரமான ஒரு இடந்தானிது... பாவங்கள் அப்பிடிப்பட்ட காதல் ஜோடிகள். அதுகளுக்கு இந்த இடத்தில விழுந்துதான் சாகிறதுக்கு கொடுப்பினை இருந்திருக்கு.....அட்ட நான் இங்க ஏதோ உனக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறன்...நீ எங்கினையா அங்கயெல்லாம் போய்க்கொண்டிருக்கிறாய்... தவமணி சொல்லுறதைக் கொஞ்சம் கேள். அங்காலயாயெல்லாம் நீ போவாத..... அதான் அபாயமான இடங்கள் அங்கினையாப் போவத. ஐயையோ என்னையும் இதில சரிச்சு. விழுத்திற மாதிரியிருக்குது..ஆ...ஆ...

அந்தத் திடமான கம்பீரமான மலையில் இருந்து அவருக்கு கால்கள் சறுக்கிவிட்டன. பனி மூட்டத்துக்குள் பாரமற்ற பஞ்சைப் போல் பறந்து கொண்டிருப்பதாகத்தான் இப்போது அவருக்கு உணர்வு இருக்கிறது.

அந்த உணர்வுகளின் சிலிர்ப்பில் அவரின் ரோமங்களெல்லாம் குத்தீட்டி போல் நேராக நிமிர்ந்துவிட்டன. பள்ளத்தாக்கிலே திட்டுத் திட்டாகவிருக்கும் பாறைப் படுக்கைகளின் மேல் அவரின் உடல் மோதிச் சிதறக் காத்திருக்கும் அந்த சொற்ப வேளைக்குள்ளே தன்னுடைய கால முள் நிற்கப் போகும் தறுவாயிலே

முதன் முதலாக அவர் கனடாவில் இருக்கும் தன் ஒரேயொரு மகனை நினைக்கிறார்.

அதற்குள்ளாகவே இறந்துபோன மனைவியையும் ஒருமுறை மின்னல் வேகத்தில் நினைத்துக்கொண்டார்.

அதே போழ்தில்..... கீழே அதலபாதாளத்தில் மதாளித்து வளர்ந்து நிற்கும் யூக்கிலிப்ஸ் மரங்களின் நீட்டமான இலைகளிலிருந்து வழியும் பனித்துளிகள் பொட்டுப் பொட்டென்று பாறைகளில் விழுந்துகொண்டிருக்கின்றன. பாறைப் படுக்கையை இரத்த அபிஷேகத்துக்கு ஆயத்தப்படுத்துகின்றதைப் போல் அந்தக் கற்பீடத்தை நனைத்துக்கொண்டிருக்கின்றன பனித்துளிகள்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

சிந்தித்துப் பார்க்க...

அன்புதான் சந்நியாசம்!

ஒருமுறை செய்த தவறை மீண்டும் மீண்டும் செய்யாதே. ஒவ்வொரு நாளும் புதிய தவறுகளைக் கண்டுபிடி. படைப்பவனாக இரு. புதிய விதங்களில் அபாயங்களை எதிர்கொள். இதுதான் சந்நியாசம் ஆகும். ஆபத்தான வாழ்க்கை வாழ்வது, அபாயத்தை எதிர்கொள்வது, எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல் வாழ்வது, இதுதான் சந்நியாசம் ஆகும். வாழ்க்கையின் மீது அதிகப்படியான அன்பு கொள்வதே சந்நியாசம் ஆகும்.

சொல் உயிருடன் கூடியதாக இருக்க வேண்டும்.

அது உள்ளத்திலிருந்து வர வேண்டும். அது உள்ளத்தைத் தொட வேண்டும்.

அப்பொழுதுதான் அது உங்கள் உள்ளத்தை அடையும்.

உள்ளம்தான் மற்றொரு உள்ளத்தோடு தொடர்புகொள்ள முடியும்.

விஷயங்களைத் தள்ளிப் போடாதே, கால தாமதப்படுத்தாதே; எல்லாத் தள்ளிப் போடுதலும், காலதாமதப்படுத்துதலும் மீண்டும் எச்சரிக்கையான வாழ்க்கைக்கு வழி செய்கிறது. இப்பொழுதே செய்; நீ விஷயங்களைப் புரிந்துகொண்டால் அது நிகழட்டும்.

கெட்டவனும் நல்லவனைப் போலவே மிகவும் அழகாக சுவாசிக்கிறான். பாவியும் ஞானியைப் போலவேதான் இயற்கையால் ஒத்துக்கொள்ளப்படுகிறான். இயற்கை வேற்றுமையை உண்டாக்குவதில்லை. ஆனால், நாம் இருமை, அடிப்படையாலான சிந்தனையால் ஒன்றுக்கொன்று எதிரானவையாக நினைக்கிறோம்.

ஜாக்கிரதையோடு தவறு செய்தால் ஒரே ஒரு விஷயம்தான் நடக்கும். ஒரே தவறை திரும்பத் திரும்பச் செய்யமாட்டாய். ஒருமுறை அந்தத் தவறைச் செய்துவிட்டால் அதில் நீ அருபவம் அடைந்துவிடுகிறாய். நீ அதைப் பற்றி ஜாக்கிரதையடைந்து விடுவாய். பிறகு அது மறைந்துவிடும். இதை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள்.

- ஓஷோவின்
பொன் மொழிகளிலிருந்து.....

☼ தேர்தல் ஏப்ரல் இரண்டாம் திகதியாமே....?

-ஆர்.குமரேசன், கினலன்.

உங்கள் ஆதங்கம் புரிகிறது. ஒருநாள் முந்தி வைத்திருந்தால், வாக்களிக்கும் நமக்கெல்லாம் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும்தான்!

✉✍✉

☼ இந்த உலகத்தில் எதுவுமே சரியில்லை என்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?

-எஸ்.பத்மா, கொழும்பு - 10.

நானும் சரியில்லை என்று சொல்ல நாதடுக்கிறது. ஆனாலும், உலகில் மிகப் பெரிய பணக்காரர்களான நாற்பத்து மூன்று பேருடைய வருமானம் மட்டும் வறுமையில் வாடும் இருநூறு கோடி மக்களுடைய மொத்த வருமானத்தை விட அதிகம் என்றிருக்கையில், நீங்கள் சொல்வதை எப்படி மறுக்க முடியும்!

✉✍✉

☼ நடிகர் சிவகுமாரின் வாரிசு தன்னை நிலைநிறுத்திக்கொண்டுவிட்டாரா?

-ஆர்.எப்.நஸ்லியா, நிககொள்ள.

சிவகுமாரின் வாரிசாகத் தன்னை நிறுத்தியிருப்பவர் பிரசாந்தான்! அதாவது பத்திரிகையாளர்களுக்கு கிசுகிசு எழுத எதையுங் கொடாத நடிப்புலக வாரிசு!

✉✍✉

☼ கொலைகளை வெறுப்பது சரி. முத்தத்தின் மீது உங்களுக்கு அப்படி என்ன வெறுப்பு?

-ஐ.காந்தன், கொழும்பு - 06.

வெறுப்பா? சேச்சே! மற்றவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பார்த்து ஒரு எரிச்சல். அவ்வளவுதான்! "முத்தத்தின் சத்தம் பீரங்கி ஏற்படுத்தும் ஒலி இல்லைதான். ஆனால், அதன் எதிரொலி எத்தனை நாட்கள் நீடிக்கிறது!" என்னும் அமெரிக்கக் கவிஞரோடு எனக்கும் உடன்பாடே!

✉✍✉

☼ தமிழர் - முஸ்லிம்கள் உறவுகள், ஊடாட்டங்கள் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

-எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர் - 1ஏ.

கத்திச் சுத்திச் சுத்துமாத்துச் சுத்தியபடியே...தமிழர்களாகிய நாம் முடிசூடி ஆள்வதற்கு முஸ்லிம்கள் எவ்வாறு தடையாக இருக்கிறார்கள் என்பதையும், ஏகப் பிரதிநிதித்துவ உச்சத்திற்கு வந்துவிட்ட நாம் இன்னமும் தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருப்பவர்களுடன் எப்படிப் பேசுவது என்றும், திறை செலுத்தி வாழ வேண்டிய சின்னச் சின்ன சமூகங்களுக்குப் புத்திமதிகள் சொல்லி, அவர்களைத் திருத்தி, நம்முடன் சேரச் செய்ய வேண்டும் என்று வலு பாந்தமாக பாசிலம் கக்க பெரும் பெரும் பேராசிரியர்களும் நம்மிடையே உள்ளபோது நமக்கென்ன மனக் கவலை? வீண் தயக்கங்களை ஒழித்து மன நிறைவோடு ஏகப் பிரதிநிதித்துவ இறையடி ஏத்தலாம்!

முஸ்லிம்களின் அச்சம், உயிர்ப் பயம், பொருளாதார அழிப்பு, விவசாய - வியாபாரத் தடையும் பிடுங்கல்களும்.... இவற்றுக்கெல்லாம் காரணம் யாரென்பது, இன்னும் நாங்கள் பேசத் துணியாத பேசாப் பொருளே! பிறகெங்கே உறவும் ஊடாட்டமும் உரத்த சிந்திப்பும்? சுத்தாதீங்கடா டோய்!

✉✍✉

☼ கோவில்?

-ஏ.எம்.அக்தர் பர்வீஸ், கெக்கிராவ.

அலைகள் இன்னும் ஓயவில்லை.

✉✍✉

☼ திருமணம் செய்துகொண்டால் மட்டும்தான் பொறுப்புக்களைச் சுமக்க வேண்டி வருமா?

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

வெளியே சுமப்பதா....!அதனுள்ளேயே நெரிந்தபடி அல்லவா நாம் இருப்போம்!

✉✍✉

☼ அஷ்ரஃப் இருந்திருந்தால் முஸ்லிம்கள் இப்படிப் பிளவுபட்டு தேர்தலுக்கு முகங்கொடுத்திருக்க மாட்டார்கள்தானே? ஒற்றுமைப்பட முடியாமல் போனதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

-ஏ.அகமது முகம்மது, காத்தான்குடி.

நூஆ ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முன்னதாக மு.கா, ஜனாதிபதியுடன் பேசுவதற்கு முந்தியிருந்தால் ஒற்றுமை ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருந்திருக்கும்.

✉✍✉

☼ சில நேரங்களில் இரண்டு கால்களாலும், சில நேரங்களில் மூன்று கால்களாலும், சில நேரங்களில் நான்கு கால்களாலும் நடப்பது எது?

-எம்.பிரியதர்ஷினி, கொழும்பு - 13.

உங்கள் கேள்விக்குப் பதில் : மனிதன். இளைஞனாக இரண்டு கால்களில் உறுதியாகவும், முதுமையில் கைத்தடியுடனும், குழந்தையாக நான்கு கால்களிலும் தவழ்கிறான். கால்கள் அதிகமாக அதிகமாக வலிமை குறைந்தவையாகின்றன. ஆயிரங்கால் அட்டையிலிருந்து எட்டுக்கால் பூச்சி வரை இது பொருந்தும். மண்புழுவுக்குக் கூட கண்ணுக்குத் தெரியாத கால்கள் உண்டு. அதே சமயம், ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும் அருச்சுனனே கௌரவர்கள் பயத்திற்குக் காரணமான பலவானாகிறான்.

நீதி : பிறர் கால்களை நம்பாமல் சொந்தக் காலில் நில்லுங்கள். (இது பொதுவாகச் சொல்லப்பட்ட பதில்தான். கூட்டமைப்பினருக்குச் சொன்னதாக யாரும் குதர்க்கம் காணக் கூடாது.)

✉✍✉

☼ மகேஸ்வரன் இம்முறை தேர்தலில் நிற்பாரா?

-எஸ்.ஆர்.விஸ்வா, கொழும்பு - 05.

ஈ.பி.டி.பி.யைத் திட்டி மூச்சு முட்டக் கத்தினாலாவது புலிகள் அனுமதி கொடுப்பார்கள் என்று முயன்றார். அந்தோ, இனி வியாபாரத்திலும் விழுந்தது மண்!

✉✍✉

☼ என் மகன் நாலாம் வகுப்பில் படிக்கிறான். அவன் பேசும் விஷயங்கள், அறிவுக் கூர்மை எல்லாம் சில சமயங்களில் பெரும் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. அவனுடைய அளவுக்கு மிஞ்சிய புத்திசாலித்தனமும் ஏதாவது கோளாறாக இருக்குமோ என்று கவலைப்பட வைக்கிறது. என்ன செய்யலாம்?

-வீ.குருநாதன், யாழ்ப்பாணம்.



வீண் கவலை வேண்டாம். பொதுவாகவே இன்றைய சிறுவர்களின் அறிவு நான், நீங்கள் எல்லாம் வியப்படையும் படியாகத்தான் இருக்கும்!

✉✍✉

☼ இந்தத் தேர்தல் நிரூபிக்கப் போவது எதை?

-ஏ.சிவா, வைரவபுளியங்குளம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்றொரு கட்சி முன்னொரு காலத்தில் இந்நாட்டில் இருந்தது என்ற வரலாறை!

✉✍✉

☼ உங்களை 'மறை கழன்ற ஆசாமி' என்று சொன்னால் கோபம் பொத்துக் கொண்டு வருமா?

-ர.ரவிகுமார், நானாட்டான்.

'மறை கழன்றவர்கள் எல்லோரும் மேதைகள் அல்ல. ஆனால், மேதைகள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் மறை கழன்றவர்களாகத்தான் தோற்றம் தருவார்கள்' என்று ஒரு மேதை சொல்லியிருக்கிறார். எனக்கேன் கோபம் வர வேண்டும்!

✉✍✉

☼ ஐஸ்வர்யாராயின் மரபணுவை எடுத்து குளோனிங் முறையில் பெண்களை உருவாக்கிவிட்டால் எல்லோருக்கும் அழகான பெண்கள் கிடைத்துவிடுவார்களல்லவா?

-என்.ஜீவேந்திரன், கண்டி.

சல்மான் கானையோ, அரவிந்த சாமியையோ குளோனிங் செய்து ஆண்களை உருவாக்கிவிட்டால், இவர்கள் முஞ்சையைச் சகித்துக்கொண்டு காலம் கடத்துவதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று அவர்கள் முந்திவிடப் போகிறார்கள். கவனம்!

✉✍✉

"மஞ்சத்திற்குரியவர் நெஞ்சத்திலிருப்பதால் கண் துஞ்சவேயில்லையடி"

கதிரவன் ஒளியால் கலகலப்புடனும் சுறுசுறுப்புடனும் பிரகாசித்து இயங்கிக் கொண்டிருந்த பூமியைப் பார்த்துப் பொறாமை கொண்ட எவரோ, அதன் மகிழ்ச்சிக்குக் காரணமான ஒளியை மெல்ல உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களும், பெண்களும் மங்கலாகத் தெரிய ஆரம்பித்தார்கள்.

மணலில் படர்ந்து கிடந்த அடம்பன் கொடியில் இருந்த மலர் மொக்குகளைப் பிடித்து அதன் இதழ்களைப் பிரித்து மலர்போல விரியச் செய்து விளையாடிக் கொண்டிருந்தனர் பெண்கள்.

பளீரிட்ட அந்த மலர்களும் அவற்றைப் பிடித்திருந்த அந்த மங்கையரின் கைகளிலிருந்த வளையல்களும் ஒளி மங்கிய அந்த வேளையில் மின்னி ஒளிர்ந்தன.

குதிரையின் குளம்புகளைப் போலப் பிளவுபட்டுக் கிடந்த இலைகளையுடைய அடம்பன் கொடிகளிலே பூத்திருந்த மலர்களோ, குதிரையின் கழுத்தில் போடப்பட்ட மாலையில் உள்ள மணிகளைப் போல சின்னச் சின்னதாய் ஒளி வீசித் தெரிந்தன.

மணலில் தத்தித் தத்தி இரை பொறுக்கியபடியும், கடலுக்கு மேலாகவும், தரையிலுள்ள மரங்களை நாடியும் பறந்து திரிந்த பறவைகள், கூடு செல்லும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்து பதற்றமுடன் குறுக்கும் நெடுக்குமாக வானில் நீந்தின.

அவற்றின் ஓசையுடன், கடற்கரையை விட்டுச் செல்ல ஆரம்பித்துவிட்ட மனிதர்களின் அரவமுமாக விழாக் கோலாகலம் கொண்டிருந்தது கடற்கரை.

இந்தக் களேபரங்களில் சம்பந்தப்பட்டுக் கொள்ளாமல் சற்றுத் தள்ளி ஒரு படகு மறைவில் அமர்ந்திருந்தனர் வரோதயனும் நளினியும்.

"எல்லோரும் போய்விட்டனர்" என்று தனக்குள்ளாகச் சொல்லிக்கொள்பவன் போல முணுமுணுத்தான் வரோதயன்.

சிப்பிகளை அடுக்கியபடியே அவனைக் கடைக்கண்ணால் மின்வெட்டாக ஒரு பார்வையை வீசிப் பழையபடி குனிந்திருந்தாள் நளினி.

இருளைப் பழிக்கும் அவள் கொண்டையிலிருந்து பிரிந்து, பொன்னைப் பழிக்கும் அவள் முகத்தில் சுருண்டு விழுந்த மயிர்க் கொத்தை இடது கையால் அலட்சியமாகத் தள்ளிவிட்டுக்கொண்டதில் அவள் தலை சிலுப்பிய விதமும், அந்தச் சிலுப்பலில் அசைந்த அவள் அழகுகளும் வரோதயனைத் தாக்கின.

'பேசாமல் இருந்தபடியே தனது அத்தனை ஆயுதங்களாலும் கொலை செய்கிறாள் ராட்சஸி' என்று மனதுக்குள் நினைத்தவனாக, "இருட்டிவிட்டால் நாமும் போக வேண்டும்..." என்று வெளியே சொற்களை உதிர்த்தான்.

"உம்" என்ற ஒற்றைச் சொல்லோடு சிப்பிகளில் கவனமாயிருந்தாள் நளினி.

அவன் உணர்ச்சிகள் நிலைதடுமாறுவதைத் தன் கடைவிழிகளால் கவனித்து, வெட்கமும், மகிழ்ச்சியும் உடல் பூராகவும் ஊடுருவி ஓடுவதை நளினி உணர்ந்தாள். அந்த ஆண்மகனின் உணர்ச்சிகளை அலைக்கழிக்கக் கூடிய சக்தி தனக்கிருப்பதை நினைத்து இரகசியமாகப் பூரிப்படையவும் செய்தாள்.

"ஏதாவது சொல்லேன்?" வரோதயனே மீண்டும் பேசினான். அவள் சற்றே நிமிர்ந்து விழியம்புகளை வீசிவிட்டு மீண்டும் குனிந்தாள்.

"இப்போ பேசப் போகிறாயா இல்லையா?"

'களுக்' கென்ற மதுரகீதம் போல் சிரிப்பொலியொன்றை வெளியிட்டாள். பிறகு,

"பேசாவிட்டால்..?" என்று கேட்கவும் செய்தாள்.

"தண்டனை கிடைக்கும்"

"உங்கள் ராஜாங்கத்தில் எடுத்ததற்கெல்லாம் தண்டனைதான்

போலிருக்கிறது!"

"எடுத்ததற்கெல்லாமில்லை, கொடுக்காததற்குத்தான்....."

"கொடுக்காததற்கா?"

"ஆமாம், கேட்டதைக் கொடுக்காததற்கு"

"என்ன கேட்டீர்கள்....?" என்று ஆரம்பித்தவள், உதடுகளைக் குவித்தபடி அவன் பார்வை நிலைகுத்தியிருந்த இடத்தைக் கண்டு கேள்வியை முடிக்காமல் மீண்டும் தலை குனிந்தாள்.

"கேட்டதைக் கொடுக்காவிட்டால் தண்டனையை நான் கொடுத்துவிடுவேன்" என்று அவள் கையைப் பற்றி மலர் விரல்களை அழுத்தினான்.

"உம்! வலிக்கிறது."

"தண்டனையை நான் இன்னும் கொடுக்கவே இல்லையே?"

"போதும், போதும். விடுங்கள்" என்று முகத்தில் பொய்க் கோபத்தைக் காட்டி எழ முயன்றாள்.

"இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு என்னுடைய ராஜாங்கம்.....இங்கு தண்டனை விதிக்கப்பட்டவர்கள் யாரும் தப்ப முடியாது" என்றான் சிரித்துக்கொண்டே. அவளை இழுத்து எதிரே அமர்த்தினான். முகத்தைக் கரங்களால் நிமிர்த்தினான்.

அவன் எதற்கு ஆயத்தமாகிறான் என்பதை உணர்ந்துகொண்ட நளினி, வெட்க மிகுதியால் தன் இரண்டு கைகளினுள்ளும் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

முகத்தைப் புதைத்துக்கொண்டு விளையாடும் சிறு குழந்தையைப் போல் எதிரே இருந்த அந்தத் தேவதையை இடது கையால் அணைத்துத் தனக்காக இழுத்துக் கொண்ட வரோதயன், இன்னொரு கையால் அவள் முகத்தை நிமிர்த்தி "நளினி! இதோ என்னைப் பார்!" என்றான்.

நளினி விழிகளைத் திறக்க மறுத்தாள்.

"வேண்டாம். என்னை அப்படிப் பார்க்க வேண்டாம்" என்று முணுமுணுத்தாள்.

"கண்களைத் திற நளினி! இல்லையேல் திறக்கும் வழி எனக்குத் தெரியும்" என்று அவன் மிரட்டியதும், தன் விரல்களிடையே மெல்ல விழிகளைத் திறந்து பார்த்தாள்.

எதிரே வெகு அருகில் நெருங்கி இருந்த வரோதயன் கண்கள், காதல் வெள்ளத்தை அவள் கண்களில் பாய்ச்சின.

எதிரும் புதிருமாக இரு சோடிக் கண்களிலிருந்து பாய்ந்த காதல் வெள்ளப் பெருக்கில்.....இடையே இருந்த கைவிரல்கள், வெட்கம், தயக்கம் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன.

அன்றைய தினம் அவன் தந்த தண்டனைகளை எண்ணியவாறே படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள் நளினி. மிருதுவான பட்டுப் போர்த்தியிருந்த பஞ்சணையில் தன் அங்கங்கள் அழுந்தப் புரண்டாள். தன் வழவழப்பான பிரதேசங்களில் எல்லாம் வரோதயன் கைகள் அலைந்து புரள்வதாய் உணர்ந்தாள். அந்த உணர்வின் பெயர் தெரியாத பரவசத்தில் அவள் திடீரென்று கால் பக்கமிருந்த தலையணையை எடுத்து மார்பகங்களில் வைத்து அழுத்திக் கொண்டாள். வேதனையில் முனகினாள்.

அந்தச் சமயம் தேவகி உள்ளே நுழைந்தாள். நளினியின் துயரை அறிந்தவளாதலால், அருகில் அமர்ந்து, ஆதரவாக அவள் தலையைக் கோதியபடி,

"உன் தலைவன் வரும் வரை நீ பொறுத்திருக்கத்தான் வேண்டும்" என்றாள்.

இவளைச் சினத்துடன் முறைத்துவிட்டுக் குப்புறப் படுத்துக்கொண்டாள் நளினி.

"உன் நன்மைக்காகவும்தானே பொருள் தேடப் போயிருக்கிறான். வந்துவிடுவான்" என்றாள் தேவகி.

"நான் என்னடி செய்வேன், அவரை நினைப்பதால்தான் எனக்கு இவ்வளவு வேதனையும்...." தேவகியின் கையைப் பற்றிக்கொண்டு விம்மினாள் நளினி.

"வேறு ஏதாவது நினைப்பில் மனதைச் செலுத்து!"

"வேறு எதையும் நினைக்க முடிந்தால்தான் நிம்மதியாக உறங்கி விடுவேனே....."

"வேதனை இல்லாமலிருக்க அவனை நினைக்காமலிருப்பதுதானடி ஒரே வழி"

"சரி சரி, இனி அவரை நினைக்கமாட்டேன் என்று என் கண்களுக்குச் சொல்லிப் பார்க்கிறேன். அப்போதாவது கருணை கூர்ந்து அவை உறங்குகின்றனவா பார்ப்போம். நான் தூங்குகிறேன் நீ போடி...." என்று மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டாள் நளினி.

மான் அடி அன்ன கவட்டிலை
அடும்பின் தார் மணி அன்ன
ஒண்பூக் கொழுதி ஒண்தொடி
மகளிர் வண்டல் அயரும்
புள் இமிழ் பெரும் கடல்
சேர்ப்பனை, உள்ளேன் தோழி
படீ இயர் என் கண்ணே!
(குறுந்தொகை : 243)

கொலைகளைக் கண்டிப்போம்

அநியாயப் பலிகளை எண்ணிக் குமுறும் ஒரு நெஞ்சத்தின் குரல்.

இலங்கையின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான ஆயத்தப் பணிகளில் கட்சிகள் இறங்கியுள்ளன. இந்தப் பரபரப்பான நேரத்தில் ஆங்காங்கே இடம்பெற்று வரும் படுகொலைகளையும் கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லை. தென்மராட்சி கனகம்புளியடியில் தமிழ்க் குடும்பம் ஒன்று வெட்டிக் கொலை செய்யப் பட்டது. இக் கொடூரக் கொலையில் இளம் குடும்பஸ்தரான சுதாகரன் (38), சுவர்ணவதி (27) ஆகியவர்களும் அவர்களது லக்ஜாகன் எனும் 8 மாதப் பச்சிளம் குழந்தையும் மிருகத் தனமாக வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி இறந்தனர். இக் கொலை குறித்து ஊடகங்கள் எதுவும் ஏன் கண்டுகொள்ளவில்லை என்பதுதான் மிக ஆச்சரியத்துக்கு உரியதாகும். இந்தக் கொலையை நிச்சயமாகப் படைத் தரப்பு செய்யவில்லை என்பதை, புலிகள் தரப்பிலிருந்தோ, வேறு எந்த ஒருதரப்பிலிருந்தோ, அல்லது தமிழ் ஊடகங்கள் தமது கத்தியெடுப்புக்களை எடுக்காமல் ஒதுங்கிக் கொண்டதை வைத்தோ புரிந்து கொள்ள முடியும்.

அப்படியானால் இந்த மர்மக் கொலைகளைப் புரிந்தவர்கள் யார்? ஒரு குடும்பத்தையே கொன் றொழிக்கும் அளவுக்கு இக் குடும்பம் செய்த பிழை என்ன? சாதாரண கூலித் தொழிலாளியான சுதாகரன் இவ்வாறு கொலை செய்யும் கும்பலுக்குச் செய்த தவறு எதுவாக இருக்கும்? எந்தவொரு தவறுக்கும் கொலை தீர்வில்லை என்பதே மனித நேயம். இருந்தும் தவறை சுதாகரன் செய்திருந்தாலும் அவரின் எட்டு மாதக் குழந்தை அதற்காகக் கொலை செய்யப்பட வேண்டுமா? இதில் எந்தளவு நியாயம் இருக்க முடியும், சீ.... என்னதான் சமாதானம், யுத்த நிறுத்தம், சமவுரிமை என்றெல்லாம் வாய் கிழியக் கத்தினாலும் இவ்வாறான படுகொலைகள் இன்னும் நின்றபாடில்லையே? ஆண்டவன் வந்தாலும் இதற்கொரு தீர்வு காண முடியாதா? வாய் மூடி மௌனித்திருக்கும் அரசியல் விண்ணாணம் பிடித்த வீணாய்ப் போனவர்களே! மக்களின் விடியலுக்காகவென்று உண்மையைக் கொலை செய்து செய்தி தரும் ஊடகங்களே! உங்களுக்கு எல்லாம் இந்தக் கொலைகள் குறித்து எந்த அக்கறையும் இல்லையா? அல்லது இதற்கெல்லாம் நேரம் இல்லாமல் ஊர் வம்பில் இறங்கி இருக்கிறீர்களா?

கையை ஓங்கிக்கொண்டிருப்பவன் ஓங்காளித் தாலும் அதை ஒரு செய்தியாக வெட்கமின்றி எழுதும் உங்களுக்கு, இந்தப் படுகொலைகள் சாதாரண மனித வாழ்வுக்கு வட கிழக்கில் விடுக்கப்படும் எச்சரிக்கையாகப்படவில்லையா?. இவை நிறுத்தப்பட அல்லது இதற்கான காரண கர்த்தாக்கள் இனங்காணப்பட ஊடகத் திற்கிருக்கும் நியாயமான கடமையை நீங்கள் உணர்ந்துகொள்ளவில்லையா?

இதோ பாருங்கள்? இந்தப் படங்களை. நாளை நீங்களும் இவ்வாறு கோரமாகக் கொலை செய்யப்படும்போதும் இன்று நீங்கள் இருப்பது போல் எவரும் குரல் கொடுக்க முன்வரமாட்டார்கள். கொலைக் கலாசாரத்தை மௌனமாக ஆமோதிக்கும் உங்களின் உள் உணர்வுகளை இந்தப் படங்கள் உசுப்பவில்லையா? உங்களைப் பிள்ளையாய்ப் பெற்றவர்களின் தேவையற்ற நேரச் செலவை எண்ணி வெட்கப்பட்டுக்கொள்ளுங் கள். வரி கட்ட மறுப்போர்கள் மீதோ, ஒத்துழைக்க மறுப்பவர் மீதோ, மாற்றுக் கருத்துகள் கொண்டவர்கள் மீதோ அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவோ ஒரு மனித உயிர் பறிக்கப் படுவதை ஒரு நாளும் ஏற்க முடியாது. சர்வதேச மனிதநேய அமைப்புக்களே! இந்த அப்பாவி களின் மரணம் உங்களின் கவனத்தை ஈர்க்கவில்லையா? கோரமாக வெட்டிக் கொலை செய்யப்படும் அளவிற்கு இந்தக் குழந்தை இழைத்த தவறு என்ன? தமிழ்த் தாயே பதில் சொல்.

வெட்டிக் கொல்லப்பட்ட பச்சிளங் குழந்தை தந்தையின் காலடியில்

இதோ பாருங்கள்? இந்தப் படங்களை. நாளை நீங்களும் இவ்வாறு கோரமாகக் கொலை செய்யப்படும்போதும் இன்று நீங்கள் இருப்பது போல் எவரும் குரல் கொடுக்க முன்வரமாட்டார்கள். கொலைக் கலாசாரத்தை மௌனமாக ஆமோதிக்கும் உங்களின் உள் உணர்வுகளை இந்தப் படங்கள் உசுப்பவில்லையா?

யாவிஸ் தமிழர் கலாசார மன்றத்தின்

18ஆவது ஆண்டு விழாவும்

பேச்சுப் போட்டியும்

எவ்விடம் இருப்பினும் எம் தாய்மொழியை மறவாதிருக்க கலை, கலாசாரங்களைப் பேணிக் காத்திட வருடந்தோறும் நாம் சிறுவர்களுக்கான தமிழ் அறிவுத்திறன் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம்!

ஆகவே உங்கள் திறமைகளையும் வெளிப்படுத்துங்கள்!

எதிர்வரும் 14.03.2004இல் போட்டி நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெறும்!

விண்ணப்ப முடிவு திகதி 01.03.2004.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:-

079-6691106, 079-2367235, 01-4619302

ரா. சத்தியசீலன்,
சாவகச்சேரி.

எந்துக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ் வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பி.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

பிறப்பெண் 1, 10, 19, 28 புதன்கிழமை பிறந்தவர்களுக்கு

ஆதிக்கம் - 1 : பிறந்த கிழமை - புதன்

புதன்கிழமை என்பது புனிதமானது. புன்னகைக்கும் பொன்னகைக்கும் புதன் உரித்தானது. அதனால்தான் பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று நம் முன்னோர்கள் கூறி வைத்தார்கள். அந்தளவுக்கு புதன்கிழமை விசேடமானது.

மனித வாழ்க்கை என்பது கடவுள் கொடுத்த ஒரு கொடை என்றே கூற வேண்டும். ஏனென்றால் வாழ்க்கையில் எவ்வளவோ நல்ல காரியங்கள், விசேட காரியங்கள், விழாக்கள் என்பன நடைபெற்று எமக்கு மிகுதியான சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. எனவே, வாழ்வில் இடம்பெறக் கூடிய எந்த விதமான நல்ல காரியங்களையும் புதன்கிழமையில்தான் ஆரம்பிப்பார்கள். அந்தளவுக்கு புதன்கிழமை வல்லமை பெற்றது.

நீங்கள் சிரமப்பட்டு உழைக்க வேண்டும் என்றில்லை. சுலபமான வழியில் நல்ல வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். தொழில் முறையில் படிப்படியாக உயர்ந்து ஒரு பெரிய நிறுவனத்தை நிர்வகிக்கக் கூடிய நிலைக்கு உயர்ந்து செல்வீர்கள். ஆயுள்வரை எந்தக் குறையும் இல்லாத அளவிற்குச் சுகபோகமாக வாழ்வீர்கள்.

அந்தந்தச் சூழ்நிலைக்கும் அவரவருக்குரிய தன்மைக்கும் ஏற்றது போல நடந்துகொள்ளக் கூடிய பண்பு கொண்டவர்தான் நீங்கள். நீங்கள் ஒரு விடயத்தைக் கூறினால் அது எந்தக் காரணம் கொண்டும் பிழையாகாது என்பதில் பிறர் உங்கள் மீது நம்பிக்கை வைப்பார்கள். நீங்கள் ஒரு தீர்வை முன்வைத்தால் அது சரியென்று எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அந்தளவிற்கு உங்கள் அறிவு - ஆற்றல் மீதும் நம்பிக்கை வைத்திருப்பார்கள். இதனால் நீங்கள் கூறுவதைப் பிறர் நியாயம் என்று ஏற்றுக்கொள்வார்கள். ஒருபோதும் உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் கருத்துக்கள் பற்றியோ பிழை கூற மாட்டார்கள்.

ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய கூடுதலான ஒரு கைதான் தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை இல்லாத மனிதன் வாழ்க்கையில் ஒருபோதுமே வெற்றியடைய முடியாது. தனக்குள்ளும் சக்தி இருக்கிறது. தன்னாலும் செய்ய முடியும் என்று நம்ப வேண்டும். இதுதான் தன்னம்பிக்கை. இந்த நம்பிக்கை உங்களுக்கு அதிகம் இருக்கிறது. அதனால்தான் நீங்கள் செய்கின்ற காரியங்கள் தோல்வி தராமல் வெற்றியினைத் தருகின்றன.

துணிவு என்பது அறிவுபூர்வமாக இருக்கும்போது அது வாழ்க்கையில் பல நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். இதற்கு ஏற்றது போல உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதையும் துணிவுடன் செய்வீர்கள். செயற்படுத்துவீர்கள். தளம்பிய மனநிலை உங்களுக்கு இல்லை. இதனாலும் நீங்கள் வெற்றியினைப் பெறுகின்றீர்கள்.

மனித நாகரிகத்தின் முதலாவது அடையாளம் ஒழுக்கம். மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையிலான மிகப் பெரிய வேற்றுமை ஒழுக்கம். மனிதனைப் புனிதனாக, மனிதனை மனிதனாக மாற்றுவதும் ஒழுக்கம். இந்த ஒழுக்கத்தில் இருந்து நீங்கள் ஒருபோதுமே தவறமாட்டீர்கள். நேர்மை என்ற சிறந்த குணத்தையும் உடையவர் நீங்கள். அடுத்தவர்கள் மத்தியில் நற்பெயரெடுத்து வாழக் கூடியவர்.

உங்களைச் சார்ந்த, சேர்ந்த உற்றார் உறவினர்கள் மீது அதிக அன்பும், அதிக இரக்கமும் காட்டுவீர்கள். கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவி செய்வதற்குத் தயங்கவே மாட்டீர்கள். பிறரின் துன்பத்தை உணர்ந்து அதனைத் தீர்த்து வைப்பீர்கள். பண விடயத்தில் உலோபித்தனம் உங்களிடம் இல்லை. தன்னிடம் இருக்கின்ற பணம் பிறருக்காவது பயன்படட்டும் என்ற நம்பிக்கையுடன் தாராளமாகச் செலவு செய்வீர்கள். சிக்கனம் என்றால் என்ன என்று கேட்கக் கூடியவர் நீங்கள். வீணான செலவுகள் செய்யமாட்டீர்கள்.

32 வயது வரை வரவும் செலவும் சரியென்ற நிலையிருக்கும். 33 வயது ஆரம்பித்து தொழில் நல்லபடி முன்னேற்றம் அடையும். 63 வயது வரை எந்தத் துன்பமும் சிரமமும் இல்லாமல் சிறப்பாக வாழ்வீர்கள். 36 வயதில் உங்களுக்கு ஒரு பாதை விபத்துக் கண்டம் ஏற்பட்டு நீங்கும். 21 வயதிற்குப் பின்னர் தலைவலியும் இலேசான காய்ச்சலும் ஏற்பட்டுக் குணமாகும். உங்கள் உடல் போசாக்குத் தன்மை இல்லாதது. பலவீனமானது. இதனால் இரத்த விருத்தியினை ஏற்படுத்தக் கூடிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். பப்படம், அவல், எள்ளு, நல்லெண்ணெய், காடைக்கறி, பிட்டு, வாழைப்பழம், பச்சரிசி, பசுப்பால், நெய், தயிர், முருங்கைக்கீரை, கறிவேப்பிலை, மாம்பழம், தக்காளிப்பழம், பப்பாளிப் பழம், தோடம்பழம் போன்றவை. உங்கள் அதிர்ஷ்ட எண் நான்காக இருப்பதனால் குடியிருக்கும் இல்லத்தின் எண்கள் இவ்வாறு அமைதல் சிறப்பானது. 4, 13, 22, 31, 40, 49, 58, 67, 76, 85, 94, 103, 112, 121, 130, 139, 148, 157, 166, 175, 184, 193, 202 இவ்வாறான எண்களில் வரக்கூடிய காரியங்கள் அனைத்தும் வெற்றி மேல் வெற்றியைத் தரும்.

ஆகவே பிறந்த எண் 1ஆகவும் பிறந்த கிழமை புதன்கிழமையாகவும் அமைந்துள்ள நீங்கள் வாழ்க்கையில் அனைத்து நலன்களும் சிறப்புக்களும் பெற்று மகிழ்வுடன் வாழ்வீர்கள். ஆசீர்வாதங்கள்.

(வியாழக்கிழமை பிறந்தவர்களைப் பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்)

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் ஆரம்பமாகிறது. மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



நீளப் பலகை

சுமார் 1 1.2 மீற்றர் நீளம், ஒரு சென்டி மீற்றர் கனம், 10 செ.மீ. அகலமுள்ள சுத்தமாக இழைக்கப்பட்ட ஒரு மரப் பலகையைத் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மேடை அமைப்பு

மாஜிக் காட்சியை நடத்துவதற்கு, டிராமா, ஸ்டேஜ், சினிமா ஸ்டேஜ் கிடைக்குமானால் வசதியாக இருக்கும். இல்லாத இடத்தில் ஓலை அல்லது தகரத்தைக் கொண்டு ஒரு சிறிய கொட்டகை கட்டி, அதில் மேடை அமைக்க வேண்டும். இது சுமார் மீற்றர் அகலம், 8 மீற்றர் நீளம், 8 மீற்றர் உயரம் வைத்து ஒரு கொட்டகை போடவேண்டும். இதைச் சுற்றிலும், அதாவது எதிர்ப்பக்கம் தவிர மற்ற முன்று பகுதிகளையும் ஓலை அல்லது தகரம் கொண்டு அடைத்துவிட வேண்டும்.

முன் பக்கமிருந்து உள் பக்கமாக சுமார் 4 மீற்றர் தூரத்திற்கு தரை மட்டத்திலிருந்து 50 செ.மீ. உயரத்திற்கு ஒரு மேடை அமைக்க வேண்டும். இந்த மேடைக்கு பல கால்களை ஊன்றி அதன்மேல் குறுக்காக மரக்கட்டைகளை வைத்து உறுதியான மேடை அமைக்க வேண்டும். மேடையின் மேல் கறுப்பு அல்லது பச்சை ஜமக்காளம் விரிக்கப்பட வேண்டும்.

மேடையின் உட்புறம் முழுவதும் கறுப்புத் துணியினால் மறைந்திருக்க வேண்டும். மேடையின் பின் பகுதியில் நீள வசத்தில் சுருக்கம் அதாவது மடிப்பு வைத்த திரை அடி வரை தொங்கவிட்டிருக்க வேண்டும். இந்தத் திரையின் உயரத்தில் அடியிலிருந்து ஒரு மீற்றர் உயரத்தில் சுமார் 30 செ.மீ. நீளத்திற்கு ஒரு வெட்டுப் போட்டிருக்க வேண்டும். இந்த வெட்டுப்பகுதி வெளியே தெரியாத அளவில் மடிப்புக்குள் மறைந்திருக்க வேண்டும். இந்தத் துளை எதற்காகச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டால், சில மாஜிக் காட்சிகளில் இந்தத் திரை வெட்டின் வழியே உதவியாள் சில பொருள்களைக் கொடுக்க, அதை மறைவாக மாஜிக் செய்பவர் பெற்றுக் கொள்ள பயன்படுத்துவதற்காகத்தான்.

இந்தக் கறுப்புத் திரையின் இடது பக்கமும், வலது பக்கமும் சம அளவில் மண்டையோடு, தொடை எலும்பு போல வெள்ளைத் துணியில் வெட்டி வைத்துவிட வேண்டும். சபையோர் கண்களுக்குத் தெளிவாகத் தெரியும் அளவில் பெரியதாக இருக்க வேண்டும்.

மேடையின் முன்பகுதியின் கீழே இடைவெளி இருக்கும். இதையும் கறுப்புத் துணியினால் அடைத்துவிட வேண்டும். மேல் விளிம்பில் வெள்ளைத் துணியினால் அழகான பார்டர் கட்டிவிட வேண்டும்.

மேடையின் முன் வாயிலுக்கு பச்சை அல்லது கறுப்புத் துணியினால் ஒரு திரை கட்டிவிட வேண்டும். இது இரண்டு பகுதிகளாகவோ, ஒரே திரைச் சீலையாக ஓரத்தில் சுருக்கவிடக் கூடியதாகவோ இருக்கலாம். இந்த வேலை முடிந்தபின் மேடையின் மேல் நடுப்பாகத்தில் மேஜையைப் போட வேண்டும். இடது பக்கமாக ஒரு ஸ்டூலும், வலது பக்கமாக ஒரு ஸ்டூலும் போட்டு வைக்க வேண்டும். இடதுபக்கம் அல்லது வலது பக்கமாக ஒரு ஸ்டூலைப் போட்டு அதன் மேல் குடி தண்ணீர் ஜக் ஒன்றை வைத்துப் பக்கத்தில் ஒரு டம்ளரையும் வைத்து விட வேண்டும்.

இந்த மேடைக்கு மேலே மேடை அளவிற்கு ஒரு கெட்டியான பரண் அமைத்துவிட வேண்டும். இந்தப் பரண் இரண்டு ஆட்களைத் தாங்கக் கூடியதாக இருக்க வேண்டும். பரணின் அடிப்பாகம் கருப்புத் துணியால் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். தேவையான அளவு மின்சார விளக்குகளை அமைத்துக் கொள்ளவேண்டும். மின்சாரம் இல்லாத இடமாக இருந்தால், முன்பக்கம் இடம் வலமாக இரண்டு பெட்ரோமாக்ஸ் லைட்டுகளைத் தொங்கவிட வேண்டும்.

மேடைக்கு எதிரே தேவையான அளவு நாற்காலிகளையாவது, பெஞ்சுகளையாவது, பாய்களையாவது போட்டு, வருபவர்களுக்கு வசதி செய்து வைக்க வேண்டும்.

மேடைக்கு எதிரே பகுதி அளவில் நாற்காலிகளைப் போட்டு நடுவில் போக வர வழி வகுத்துக்கொண்டு ஒரு பக்கம் பாய்விரித்து முன் பகுதியில் பெண்களும், பின் பகுதியில் ஆண்களும் உட்கார வசதி செய்ய வேண்டும். பெண், ஆண்களுக்கு இடையே வழி வகுத்து, அரை மீற்றர் அளவிற்கு இடம் விட வேண்டும்.

கை மணி

பூஜைக்குப் பயன்படும் ஒரு சிறு மணியை மேஜையின் மேல் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு காட்சி ஆரம்பத்திலும், முடிவிலும் மணியடிக்க வேண்டும். இது காட்சியைக் காணும் சபையோருக்கு ஓர் உணர்வை உண்டு பண்ணும்.

வசதியிருந்தால் ஒரு பெரிய மணியை மேடைக்கு முன்பாக தொங்கவிட்டு, அதை அடிக்க ஓர் அழகிய நூல் கயிற்றையம் கட்டி வைக்கலாம்.

முன்று குழாய்களில் பல பொருள்களை எடுத்தல்

மாஜிக் செய்பவர் மேஜையின் மீது வரிசையாக முன்று பெரிய தகரக் குழாய்களை வைத்து ஒவ்வொன்றாக எடுத்து அதன் உள்ளே கையை நுழைத்து மறு பக்கம் தன் கையை வெளியே நீட்டி உள்ளே ஒன்றுமில்லை என்பதை சபையோருக்கு நிருபிக்கிறார். பிறகு ஒரு குழாயில் கையை உள்ளே செலுத்தி முன்று வர்ண இரப்பர் பந்துகளை வெளியே எடுத்துப் போடுகிறார். மறுபடி ஒவ்வொரு குழாயாக எடுத்து கையை விட்டு மறுபக்கம் வெளியே எடுத்து குழாய்களில் ஒன்றுமில்லை என்பதைக் காண்பிக்கிறார். மறுபடி எல்லாக் குழாய்களையும் ஒன்றினுள் ஒன்றாகச் சொருகி, மறுபடி கையை உள்ளே செலுத்தி, முன்று சாத்துக் குடி ஆரஞ்சுப் பழங்களை எடுத்துக் கீழே போடுகிறார். மறுபடி குழாயை ஒவ்வொன்றாக எடுத்து உள்ளே கையை விட்டு மறுபுறம் வெளியே எடுத்து குழாயில் ஒன்றும் இல்லை என்பதைக் காட்டுகிறார். மறுபடி எல்லா குழாய்களையும் ஒன்று சேர்த்து மறுபடி உள்ளே கையை விட்டு முன்று வாழைப் பழங்களை எடுக்கிறார். பிறகு இதே முறையில், பல பொருள்களை எடுக்கிறார். கடைசியில் முன்று குழாய்களை கையில் எடுத்து உள்ளே ஒன்றுமில்லை என்பதைக் காண்பிக்கிறார். இதைக் கண்ட சபையோர் ஆச்சரியப்படுகின்றனர்.

எப்படி செய்வது?

இதைச் செய்வது எப்படி? என்ற விவரத்தை இனி பார்ப்போம். 25 செ.மீ. உயரத்தில், 13 செ.மீ. அகலத்தில் தகரத்தினால் உருளையாக ஒரு குழாய் தயாரிக்க வேண்டும். இதே உயரத்தில் ஆனால் 12செ.மீ. அகலத்தில் ஒரு தகரத் குழாய் தயாரிக்க வேண்டும். இதே உயரத்தில் 11 செ.மீ அகலம் வைத்து ஒரு தகரக் குழாய் தயாரிக்க வேண்டும். இந்த முன்று குழாய்களையும் ஒன்றினுள் ஒன்று வைத்தால் தாராளமாகப் போகக்கூடிய அளவில் இருக்க வேண்டும். ஆக, அகலம் குறைந்த குழாயை வைத்து அதன்மேல் இரண்டாவது குழாயை வைத்தால் முதல் குழாயை அது மறைக்கும் அளவிற்கு இருக்க வேண்டும். இந்த இரண்டு குழாய்களும் மறையும்படி முன்றாவது பெரிய குழாயை வைத்தால், முதலிரண்டு குழாய்களும் மறையக் கூடிய அளவில் இருக்க வேண்டும். ஒன்றினுள் ஒன்று மறையும்படி வைத்தால், பெரிய குழாய் மட்டும்தான் வெளியே தெரிய வேண்டும். மற்ற இரண்டு குழாய்களும் அதனுள் இருக்க வேண்டும். இந்த விதமாக முன்று தகரக் குழாய்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து வரும்.....

காதிலை பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை

• நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை -காதில பூ கந்தசாமி-

வணக்கமுங்கோ! ஐயா உங்களுக் குந்தான். வணக்கம்! வணக்கம்! இது எல்லாருக்கும் வணக்கம் சொல்ல வேண்டிய காலமுங்கோ. வணக்கம் போட்டுத்தானே ஆகவேணும். இல்லாட்டா நீங்கள் வோட்டுப் போடமாட்டீங்களே! சரி சரி, தேர்தல் நேரத்தில என்னத்த, எத யோசிக்கிறதெண்டு தெரியுதில்ல. தலையப் பிச்சுக்கொள்ள வேணும் போல கிடக்கு துங்கோ.

நீங்கள் என்ன நினைக்கிறியள்? இந்த முறையும் இந்தக் கூட்டமைப்புக்காரர் ஜமாச்சுடுவாங்களோ? நானும் அப்படித்தான் நினைக்கிறன். ஆக்கள் ரொம்ப கில்லாடிகள். எங்கேனும் படுத்திருந்திட்டு, ஏதேனும் சோலிகள்ப் பாத்துக் கொண்டிருந்திட்டு, தேர்தல் அறிவிச்ச அடுத்த நாள் வந்து குதிச்சு, வீரத்துக்கு மிஞ்சின வீரமெல்லாம் பேசி, ஓட்டுகள விழுத்திப் போடுறதில விண்ணன்கள் எண்டுதான் நினைக்கிறன். அந்தக் காலம் தொட்டு இதைத்தான பேசுறாங்க. ஆருக்கெண்டாலும் பேச்சு புளிச்சிருக்குதோ சொல்லுங்கோ? உணர்ச்சியை ஏத்தி, வாக்குச் சாவடியில ஓட்டுப் போடும் வரயும் உசுப்பித் தள்ளிப் போட்டுத்தான் நிக்கிறாங்கள். ஆரெண்டாலும் ஒருவர் குறுக்கால எழும்பி 'அண்ணை! உந்தப் பேச்சை நீங்கள் இதுக்கு முந்தியும் பல தரம் பேசியிருக்கிறியளெல்லோ' எண்டு திருப்பிக் கேட்டிருக்கினமே? எல்லாரும் மகுடி ஊதின பாம்பா திரும்பத் திரும்பத் மயங்கித்தானே விழுகிறாங்க பேச்சில. இல்லாட்டா, இவை இன்னும் இன்னும் எம்.பி.யா வர ஏலுமோ?

அதாலதான் நான் நம்புறன், இந்த முறையும் பேசாத பேச்செல்லாம் பேசி எப்பிடியும் சீற்றைப் பிடிச்சுத்தான் ஆவினம் எண்டு. ஆனால் பாருங்கோ, இன்னுஞ் சிலபேர் சொல்லுறதக் கேக்க எனக்கே இப்ப ஐமிச்சம் தொட்டிட்டுது. அது பாருங்கோ இந்தக் கூட்டு இப்ப கூட்டா இல்லையாம். ஒரே குதம்பலாக் கிடக்குதாம். குத்துவெட்டுகள் மலிஞ்சு போய் ஆளாளை அறுத்துக்கொண்டு நிக்கிறாங்களாம். கூட்டணிச் சங்கரியார சம்பந்தனார் அறுக்க, கொங்கிரஸ் குமரகுருபரனாரையும் விநாயகத்தாரையும் கஜேந்திரன் அறுக்க, கடைசியில கூட்டமைப்புக்குள்ள ஒரே அடிபுடியாப் போச்சுதாம்.

நானும் "விஷயம் விளங்கேல்லை காணும், கொஞ்சம் விளப்பமா சொல்லும்" எண்டு கேட்டன். அதுக்கு அவர் சொன்னதக் கேக்க எனக்கே தலை விறைக்குமாப் போலிருக்கு. சங்கரியாரக் கழுத்தப் பிடிச்சு கூட்டணிக் கதிரையில இருந்து வெளியால தள்ள சம்பந்தனாரும், ஜோசப்பனாரும் கடும் முயற்சி எடுத்தவையெல்லோ. சங்கரியார் ஆள் விஷயகாறன். இவை சுத்திச் சுத்திப் போய் ரெண்டெழுத்தாரப் பிடிச்சுக் காரியம் சாதிக்கப் பாக்க, ஆள் ஒரேயடியா கோட்டுக்குப் போய் நீதிவானைப் பிடிச்சு தீர்ப்பு எழுதிவிச்சுப் போட்டுது. 'தான்தான் தலைவன், தன்னைக் கேட்டுத்தான் கூட்டம் கூட வேணும். தனிய கூடினால் செல்லாது' எண்டு நீதிமன்றத்தக் கொண்டு சொல்லிவிச்சுப் போட்டுது. இப்ப தேர்தல் சின்னம் அவற்ர கையில. ஆளின்ர காலைத் தொட்டுக் கும்பிட்டு, ஆள் விரும்பாத ஆக்கள விலத்தி, விரும்பின ஆக்களச் சேத்தால்தான் சின்னத்தக் குடுப்பார் எண்ட நிலை. ஆனால், சம்பந்தனாருக்கு சரணாகதியடைய முடியுமோ? அதோட பாருங்கோ, கடந்த பதினாலாந் திகதிக் கெடுவுக்குள்ள கூட்டணி போட்டி போடும் எண்டத உறுதிப்படுத்தவும் வேணும். நடக்கிற காரியமோ? ஆக மொத்தம் கூட்டணிச் சின்னம் கூட்டமைப்புக்கு இல்லையெண்டாகிவிட்டுது.

அதேவேளை, 'வீட்டுக்கு வீடு வாசற்படி' எண்ட கணக்கா மற்றப் பக்கம் கொங்கிரஸின்ர குசினிக்குள்ளயும் சண்டைதான். முத்தவர் விநாயகத்தார ஒதுக்கித் தள்ளிப்போட்டு இளம் குட்டி கஜன் அப்பற்ர பேரச் சொல்லி ஆசனத்தில அமர்ந்திருக்கிறார். பாவம் விநாயகத்தார்! 'கூட்டமைப்புக் கூட்டத்துக்கு கொங்கிரஸ் போக மாட்டுது' எண்டு அறிக்கை விட்டு, செருக்குக் காட்டிப்போட்டு நிக்க, கஜன் பிள்ளை லண்டனால வந்திறங்கி விநாயகத்தார்ற பேச்சைக் கணக்கிலேயும் எடுக்காம கூட்டத்துக்கும் போயிருக்கிறார். 'பள்'ளாப் போய் நிக்கிறார் விநாயகத்தார். அங்கால குமரகுருபரனுக்கும் இதே கதிதான். ஆள் கட்சி மாறத்தான் ரெடியா நிக்கிறார். மொத்தத்தில கூட்டமைப்பே குளறுபடியாகி நிக்குது. இப்ப சின்னத்தையும் மாத்தி ரெலொவின்ர சின்னத்தில கூட்டமைப்பை போட்டி போட வைக்கப் பாக்கினமாம். கூட்டணிக் காறருக்குத்தான் சங்கடம். ஆலாலையும் தர்மலிங்கத்தாரையும் மேல் லோகம் அனுப்பினவையளின்ர காலிலை நிண்டு ஓட்டுப் பிச்சை கேக்க வேண்டிய பரிதாபம்.

வட் டு டு.... இதெல்லாத்தையும் சொல்லக் கேட்டா யார்தான் தலை விறைக்கமாட்டாங்கள். ம்.....சனம் என்ன செய்யப் போகுதோ? எண்டாலும் பாருங்கோ எங்கட சனத்த எப்படியும் சுத்தியிடுவாங்கள் எண்டுதான் வழமை போல நம்புறன். நீங்கள் என்ன நினைக்கிறியள்?

யாவும் கலப்படமற்ற கற்பனை

இந்தவாரம் உங்கள் பலன்

(22.02.2004 தொடங்கி 28.02.2004 வரை)

சோதிட மாமணி தில்லை

இந்த வாரக் கிரக நிலை

மகரம் - சூரியன், மீனம் - வெள்ளி, மேடம் - இராகு, செவ்வாய், மிதுனம் - சனி, சிங்கம் - வியாழன், துலாம் - கேது, மகரம் - புதன், சந்திரன் விருச்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

மேடம் : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) அமைதியான வாரம். காரியங்கள் சிரமமின்றிக் கைகூடும். வர இறுதியில் நல்ல செய்திகள் வரும். உற்சாகமாக இருப்பார்கள். நன்மையான காரியங்கள் நடைபெறும். தொழில் செய்யும் இடங்களில் பாராட்டுக்கள் கிடைக்கும். விவசாயிகளுக்கு நன்மை, மாணவர்கள் தகுதிகலடைவர்.

அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

இடபம் : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

நன்மையான சம்பவங்கள் இடம்பெறும். நண்பர்கள் நண்பர்களால் ஏமாற்றமடைய நேரிடும். வியாபாரம் மந்தமாக இருக்கும். வெளிநாடுகளிலிருந்து நல்ல செய்தி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் அன்பாக இருப்பார்கள். விவசாயிகளுக்கு சிரமங்கள் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

மிதுனம் : (மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்)

நினைத்த காரியம் தாமதமாகக் கைகூடும். ஆலய தரிசனம், புதிய தொழில் தொடங்க முன்னேற்பாடுகள், குடும்ப சுகம், வாரஇறுதியில் சிறுசிறு நோய்கள் தோன்றலாம். பணப் புழக்கம் சீராக இருக்கும்.

அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 09

கர்க்கடகம் : (புனர் பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)

பரபரப்பான சம்பவங்கள் இடம்பெறும். பணவருவாய் திருப்தி. தொழில் சம்பந்தமான அலைச்சல். வெளியிடங்களிலிருந்து நல்ல செய்திகள் வரும். விவசாயிகளுக்குச் சோர்வு. மாணவர்களுக்கு சிரமங்கள் கூடும். உத்தியோகத்தர்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும்.

அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

சிங்கம் : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

எதையும் யோசித்துச் செய்ய வேண்டும். தொழிலில் போட்டிகள அதிகரிக்கும். கீழ் பணிபுரிபவர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். வருவாய் மந்தம். குடும்பத்தில் அமைதி நிலவும். மாணவர்கள் சிரமப்படுவார்கள். விவசாயிகளுக்கு சுமாரான நிலை.

அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

கன்னி : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

பிள்ளைகளால் கவலை. இனசன உதவி. பழைய உறவுகள் மீண்டும் தொடரலாம். மனச் சங்கடம் தேகசுகம் பாதிப்படையும். புதிய தொழில் தொடங்க ஆர்வம். விவசாயிகள் நட்டமடைய நேரிடும். மாணவர் சுறுசுறுப்படைவர்.

அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

துலாம் : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

விவேகத்துடன் செயற் பட்டால் நன்மையுண்டு. திடீர் அதிர்ஷ்டம் ஏற்படலாம். உறவினர் ஒன்று கூடல். தூர இட உறவினர் பற்றி கவலை. வர்த்தகர்களுக்கு அதிக நன்மை இல்லை. விவசாயிகள் மத்திம பலன் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

விருச்சிகம் : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

தொழில் பற்றிய கவலை. உடன் பணி புரிவோர் திருப்திகரமாகச் செயற்படமாட்டார்கள். வீட்டில் தொல்லைகள், பணவருவாய் சுமார். வியாபாரிகள் அதிக பலனடைய மாட்டார்கள். மாணவர் கல்வி பாதிப்படையலாம்.

அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம் :- 02

தனு : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

தேகசுகம் பாதிப்பு. கவலைகள் கூடும். உறவினர் பகை. ஆலய தரிசனம். மாணவர் கல்வி சிறக்கும். விவசாயிகள் சிரமப்படுவார்கள். வர்த்தகம் பாதிப்படையும். மருத்துவச் செலவு அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

மகரம் : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

தொழில் மந்தம். பெரியோர் உதவி கிட்டும். மாணவர் கல்வி பாதிப்படையும். வியாபாரிகள் சொற்ப இலாபம் அடைவர். புதிய தொழில் தொடங்க முயற்சி.

அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 08

கும்பம் : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

கருகூற்பான வாரம். உறவினர் ஒருவர் பற்றிய கவலை. பண வருவாய் சுமார். மாணவர்கள் கல்வி பாதிப்பு. விவசாயிகள் சமமான பலன் பெறுவர்.

அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

மீனம் : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

நன்மை நிறைந்த வாரம். திடீர் அதிர்ஷ்டத்துக்கு இடமுண்டு. தொழிலில் மந்தநிலை. வருமானம் பாதிப்பு. அயல் நாட்டுத் தகவல்கள் உற்சாகமூட்டும். ஆலய தரிசனம் சிறப்பு.

அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம்

[illegible]

PREDILPK. SAMYUDGANJ.P.
162, KOTA HENA STREET,
COLOMO-13.
T.P 011 2342463, 011 2342464, 011 2431137, 011 2470615

d@ta KORTET LUR.as

DATAKORTET MED TAMILSK LAERER

Datakortet Består av 7 moduler og går over 100 timer. Laar: Regnark, Tekstbehandling, Presentasjoner, Internett, Mail, Databaser mm.

Kursat Koster 7900 NOK og går i Jorikevalen 26 i Oslo, Norge.
Oppstart : 19-01-04 mandag og onsdag kveldstid 1700 - 2100.
Tel 22821500 fax 22821501 www.lur.as

நோர்வேயில் கொம்பியூட்டர் பாட நெறி தமிழ் மூலம் கற்பிக்கப்படும்.

நிபுணத்துவ கைரேகை

[illegible]

(M.A) J.P.
162, [illegible]
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only

அவுஸ்திரேலியாவில்.....

தமிழன் இல்லாத நாடில்லை. ஆனால் தமிழனுக்கோர் நாடில்லை என்பர். இதற்கமைய அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இந்தியர்கள் தலைநகர் சிட்னியில் உள்ள ஹெலன்ஸ்பேர்க் என்ற இடத்தில் ஒரு பிரமாண்டமான இந்துக் கோயிலை நிர்மாணித்துள்ளனர். தென்னிந்திய கலாசாரம் பரிணமிக்கக் கட்டப்பட்டுள்ள இந்துக் கோவிலின் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியாவின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கலந்துகொண்டனர். அநேகமாக இலங்கைத் தமிழர்களே அவுஸ்திரேலியாவில் இந்துக்களாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இது போன்ற இந்து ஆலயங்கள் எம்மவர் புலம்பெயர்ந்து வாழும் இங்கிலாந்து, கனடா, கவிஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவரவர் தத்தமது மதத்தைத் தழுவிக்கொள்வது எவருக்கும் சங்கடமில்லை.

உயிர்கொல்லி எமக்கு வேண்டாம்

இராணுவத்தினரின் போர்க் கருவிகள் போன்று வடிவமைக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் கண்டிக்குமுகமாகவும் தமது குழந்தையின் ஆரோக்கியமான வாழ்வுக்குத் தூய்மையான சூழல் அவசியம் என்பதை வலியுறுத்தியும், அண்மையில் ஈராக்கின் பக்தாத் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. அச் சமயம் போர்க் கருவிகள் போன்ற விளையாட்டுப் பொருட்களை ஆர்ப்பாட்டக்காரர்களோடு சேர்ந்து இந்துச் சிறுவர்களும் தீயில் தூக்கியெறிந்தனர். போருக்கு எதிராகவும் அழிவுகளுக்கு எதிராகவும் பெரியவர்கள் வெறுமனே குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் இதேவேளை இந்த ஈராக்கிய சிறுவர்களின் முன்மாதிரியான நடைமுறை வரவேற்கத் தக்கதாகும். இவர்களின் எண்ணங்களை நாமும் மனதார வரவேற்கின்றோம். சிறுவர்களைப் போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்துவதும் போர்க் கருவிகளை அவர்களிடம் திணிப்பதும் பெரும் கண்டனத்துக்குரியதாகும்.



போட்டி

பெண்கள் பங்குகொள்ளும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் பாடசாலைகளிலே பயிற்றுவிக்கப்பட்டாலும் இது சாவிதிச மட்டத்தில் 1993ஆம் ஆண்டு மலேசியாவின் கோலாலம்பூரில் மென்சிஸ்டரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கான போட்டிகளிலேயே முதன்முதலில் அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் போட்டிகளின்போது அவுஸ்திரேலிய அணியும், நியூஸிலாந்து அணியும் இறுதிப் போட்டிகளில் விளையாடின. அவுஸ்திரேலிய அணி சம்பியனாக முடி சூடியது. இரண்டாவது தடவையாக 2003ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற போட்டிகளிலும் அதே அவுஸ்திரேலிய அணியும் நியூஸிலாந்து அணியும் மோதின. அதிலும் அவுஸ்திரேலிய அணியே சம்பியனாக வெற்றிபெற்றது.

மீண்டும் ஷேன்வோன்

அவுஸ்திரேலிய அணியின் புகழ் பெற்ற கழல் பந்துவீச்சாளரான ஷேன்வோர்ன் கடந்த ஒரு வருடமாக கிரிக்கெட் போட்டிகளில் ஆட முடியாதவாறு தடை விதிக்கப்பட்டிருந்தார் காரணம். போட்டி ஒன்றின்போது தடை செய்யப்பட்ட இலக்க மருந்தினை உட்கொண்டிருந்தாரென அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஒரு வருடம் கழித்து அவுஸ்திரேலிய அணி இலங்கை வருகைக்கு தன்னைத் தயார் படுத்திக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் ஷேன்வோர்ன் மீண்டும் விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் வருகை இவரது இரசிகர்களுக்கும் அவுஸ்திரேலிய அணி வீரர்களுக்கும் பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது. ஆனாலும், இலங்கையுடனான ஒரு நாள் போட்டிகளில் ஷேன்வோர்ன் பங்குகொள்வது சந்தேகமாகவே உள்ளது. டெஸ்ட் போட்டிகளில் அநேகமாகப் பங்கேற்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.